# புதிய ஜனநாயகம்

(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)

டிசம்பர் 2025

ரூ. 20.00




## ஷ்ரம் சக்தி நிதி 2025

# மனுநீதியே இனி தொழிலாளர்களின் தலைவிதி!

பாசிச பாஜக ஆட்சியில் சர்வம் ஊழல்மயம்!

லடாக் மாநில மக்களின் போராட்டம்: தன்னாட்சி உரிமையே தீர்வு!

தமிழகத்தில் அதிகரித்து வரும் போராட்டங்களும்! திமுக அரசின் கார்ப்பரேட் சார்பும்!

# நவம்பர் 7 புரட்சித் தினம்!

109-வது ரஷ்ய புரட்சி தினம் உலகம் முழுவதும் உள்ள இடதுசாரிகளாலும் கொண்டாடப்படுவதுடன் நமது நாட்டில் நிலவும் முதலாளித்துவ சுரண்டல் ஒடுக்குமுறைக்கு எதிராக பாட்டாளிவர்க்க புரட்சியின் அவசியத்தை வலியுறுத்தும் நிகழ்வாகவும் உழைக்கும் மக்களால் உறுதியேற்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் செயல்படுகின்ற மார்க்சிய - லெனினிய அமைப்புகளான மக்கள் கலை இலக்கிய கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்களுடன் இணைந்து தோழமை அமைப்பான மக்கள் அதிகாரமும் தமது பகுதி மற்றும் மாவட்டங்களில் புரட்சிகர கலை நிகழ்ச்சிகள் தெருமுனைக் கூட்டங்கள் மற்றும் விழாக்களை நடத்தியுள்ளார்கள்.

தொழிற்சங்கங்களில் செங்கொடியேற்றி ஆலைவாயில் கூட்டம் மூலம் தொழிலாளர்களுக்கு பாட்டாளி வர்க்க புரட்சியின் அவசியத்தையும் வர்க்கக் கடமையையும் வலியுறுத்தி சங்க நிர்வாகிகள் பேசினர்.



புதுச்சேரி


திருவண்ணாமலை


வேலூர்



கடலூர்


கோவை

# தொடரும் நக்சல் வேட்டை:

# மாவோயிஸ்ட் தலைவர்கள் படுகொலை; இந்தியப் புரட்சிக்கு பின்னடைவா?

புதிய ஜனநாயகம்
(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)

தொகுதி : 39 இதழ் : 08

டிசம்பர் - 2025

தனி இதழ் நன்கொடை ரூ. 20.00
(தனிச்சுற்றுக்கு மட்டும்)

வடிவமைப்பு:
மு.துரை

தொடர்பு முகவரி :
புதிய ஜனநாயகம்
M.J.சுதேஷ்குமார்
45, பெருமாள் கோயில் தெரு,
மஞ்சங்காரணை,
திருவள்ளூர்,
தமிழ்நாடு - 601 102.
மின்னஞ்சல்:
puthiyajananayagam2022@gmail.com
கைபேசி:
+91 98844 31949

இந்திய ஒன்றியத்தை ஆண்டு வருகின்ற ஆர்எஸ்எஸ் - பாஜக மற்றும் சங் பரிவார கும்பலின் சித்தாந்தரீதியில் எதிரியான மார்க்சிய - லெனினிய புரட்சிகர இயக்கங்களின் மீது இயல்பாகவே வெறுப்புணர்ச்சியும், ஆத்திரமும் கொண்டுள்ளது.

இதனை வெளிப்படுத்துகின்ற விதமாக மார்ச் 2026-க்குள் இந்தியாவிலிருந்து நக்சல்பாரி அரசியலை முற்றாக துடைத்தெறியப் போவதாக இந்திய ஒன்றியத்தின் உள்துறை அமைச்சரான திருவாளர் அமித்ஷா தொடர்ச்சியாக பேசி வருகிறார்.

இந்திய வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மத்திய உளவு நிறுவனங்களான ரா மற்றும் ஐபி புதிதாக ஆர்எஸ்எஸ் - பாஜக கும்பலால் கொண்டுவரப்பட்டுள்ள என்ஐஏ மற்றும் இந்திய ராணுவம், எல்லைப்புற ராணுவப் படை, சிறப்பு அதிரடிப் படைகள் ஆகியவை அனைத்தும் ஒன்று குவிக்கப்பட்டு மாவோயிஸ்டுகள் செயல்பட்டு வந்த தண்டகாரண்யா மற்றும் பஸ்தார் பகுதிகளில் கடுமையான அடக்கு முறையை ஏவி விட்டனர்.

நாட்டின் மத்திய இந்தியப் பகுதியில் உள்ள ஏராளமான கனிம வளங்களை குறிவைத்து அவற்றின் அரணாக, பழங்குடி மக்களின் பாதுகாவலனாக செயல்பட்டு வந்த மாவோயிஸ்டு அமைப்பை முற்றாக துடைத்தெறிவதன் மூலம் நக்சல்பாரி இயக்கத்தின் மீதான தாக்குதலை தீவிரப்படுத்த வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகின்றனர்.

70-களில் இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட்)யிலிருந்து வெளியேறி தனியாக புரட்சிகர பாதை ஒன்றை அமைத்துக் கொண்டு செயல்பட துவங்கிய நக்சல்பாரி இயக்கங்களின் மீது அடக்குமுறைகள் மற்றும் அரசு பயங்கரவாத ஒடுக்குமுறை, ராணுவத் தாக்குதல்கள், ஆகியவையும் உளவுப் படையின் கொடூரமான சித்திரவதைகள் உள்ளடங்கிய அடக்குமுறைகளும் புதியது அல்ல.

இந்தியாவில் நிலவுகின்ற அரைக் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ அரசு கட்டமைப்பை விவசாயிகளின் விவசாயப் புரட்சியின் மூலம் தூக்கியெறிவதற்கு திட்டத்தை வைத்து செயல்படுகிறது நக்சல்பாரி இயக்கம்.

நாடாளுமன்ற சரணடைவு பாதைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய எழுச்சியின் மூலமாகவே அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என்பதை முன்வைத்து போராடத் துவங்கிய நக்சல்பாரி இயக்கங்களின் மீது தொடர்ச்சியான அடக்குமுறைகள்; தேடுதல் வேட்டைகள்; முன்னணியாளர்களை தேடிப் படுகொலை செய்வது என்று ரத்தக்களரியாக்கியது இந்திய ஆளும் வர்க்கங்களும், அதன் ஏவல் நாய்களான இந்திரா காங்கிரஸ் அரசாங்கமும். நக்சல்பாரி அரசியலின் எழுச்சியைக் கண்டு அஞ்சிய பாசிச இந்திரா கும்பல் புதிதாக வளர்ந்துவந்த ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தின் துணையுடன் அவசரநிலை பாசிசத்தை ஏவி புரட்சியாளர்களை வேட்டையாடியது.

நாடாளுமன்ற சரணடைவுப் பாதைக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் இறங்கிய மாவோயிஸ்ட் அமைப்பினரின் முன்னோடிகளான மக்கள் யுத்தக்குழுவின் ஸ்ரீகாக்குளம் போராட்டத்தில் முன்னணியாக செயல்பட்ட தோழர் அதிபட்ல கைலாசம், வேம்படப்பு சத்தியம் உள்ளிட்ட புரட்சியாளர்கள் கடுமையாக நர வேட்டையாடப்பட்டனர்.

ஆந்திர மாநிலத்தில் வீரம் செறிந்த தெலுங்கானா போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற தோழர் கிஸ்தா கௌடா மற்றும் பூமைய்யா ஆகியோர் அடிலதாபாத் மாவட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய நிலப்பிரபுவான பட்டேலுக்கு எதிரான போராட்டத்தில் கைதாகி தூக்கிலிடப்பட்டனர்.

இந்த கால கட்டத்தில் ஸ்ரீகாக்குளத்தில் நக்சல்பாரி கொரில்லா இயக்கம் உச்ச நிலையில் இருந்தது; சிவப்பு அதிகாரம் பல கிராமங்களில் கருவடிவில் உண்மையில் உருவாகியிருந்தது. ஸ்ரீகாக்குளத்தின் பெரும்பகுதியில் அரசாங்கத்தின் நிர்வாக கட்டுப்பாடு இல்லாமல் போய்விட்டது. இத்தகைய எழுச்சிகளுக்கு மாபெரும் உந்து சக்தியாக செயல்பட்ட தோழர்கள் கிஸ்தா கௌடா மற்றும் பூமைய்யா தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்ட பிறகும் புரட்சிகர இயக்கங்கள் பின்னடைவை சந்திக்கவில்லை.

இத்தகைய வேட்டையாடுதல்களுக்குப் பின்னரும் தொடர்ச்சியாக ஆயுதப் போராட்ட அரசியலை முன்னெடுத்துச் சென்ற மக்கள் யுத்தக்குழு மற்றும் மாவோயிச கம்யூனிச மையம் ஆகிய அமைப்புகள் 2004 ஆம் ஆண்டில் ஒன்றிணைந்து இ.பொ.க (மாவோயிஸ்ட்) என செயல்படத் துவங்கியது.

அது முதற்கொண்டு இந்திய அரசுக்கு எதிரான போர் என்று அறிவித்து செயல்பட்டு வருகிறது. அதன் முன்னனியாளர்கள் மீதும், மக்கள் திரள் அமைப்புகள் என்று செயல்படுகின்ற முற்போக்கு மாணவர் அணி, முற்போக்கு இளைஞர் அணி, ரயத்து கூலி சங்கம் மற்றும் புரட்சிகர எழுத்தாளர்கள் சங்கம் ஆகியவற்றின் மீது தடைவிதித்து அடக்கு முறையை மேற்கொண்டது.

ஆப்ரேஷன் கிரீன் ஹண்ட் என்ற பெயரில் மத்திய இந்தியாவிலிருக்கும் பழங்குடி மக்கள் மீதும் அவர்களுடன் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்த மாவோயிஸ்ட்டுகள் மீதும் கொடூரமான தாக்குதலை நடத்தியது காங்கிரஸ் அரசு. இத்தகைய அடக்குமுறைகள் தேடுதல் வேட்டைகள் முன்னணியாளர்கள் மீதான படுகொலைகள் ஆகியவற்றினால் இயக்கம் பின்னடையவில்லை.

தெலுங்கானாவில் கொடூரமான நிலப்பிரபுக்களுக்கு எதிராக போராடி நிலப்பறி இயக்கம் நடத்தியது முதல் தண்டகாரண்யா மற்றும் பஸ்தார் பகுதிகளில் பழங்குடி மக்களுக்கு நிலங்களை விநியோகித்தது வரை மாவோயிஸ்டுகள் இந்தியப் புரட்சிகர இயக்கத்தின் வரலாற்றில் நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் முக்கியமான பங்களிப்பை செலுத்தியுள்ளனர் என்பதை மறுக்க இயலாது.

மாவோயிச கம்யூனிச இயக்கத்திற்கும், புதிய ஜனநாயகம் முன்வைக்கின்ற மக்கள் திரள் வழியிலான புரட்சிகர அரசியலுக்கும் நடைமுறையில் பாரிய வேறுபாடுகள் உள்ளது என்ற போதிலும் புதிய ஜனநாயகப் புரட்சிக்கான புரட்சிகர அரசியலை கொண்டு செல்வதில் இரு வேறுபட்ட வழிகளில் இத்தகைய அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

''ஒரு கட்சியின்பால் என்ன அணுகுமுறையை கையாள வேண்டும் என்பது அக்கட்சியை பற்றி என்ன கணிக்கிறோம் என்பதிலிருந்து பிறக்கிறது. கணிப்பு பிரதானமானது; அணுகுமுறை இரண்டாம் பட்சமானது. புரட்சிகர கட்சி என கணித்தால் சகோதர, தோழமை உறவு. புரட்டல்வாத கட்சியாக மாறிவிட்டது என்று கணித்தால் அதை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தி முறியடிப்பது. திரிபுவாதப் பாதையில் செல்கிறது, திருத்தி விடலாம் என்று நம்பிக்கை கொண்டால் மகத்தான மார்க்சிய லெனினிய நிலைப்பாடுகளுடன் அக்கட்சியுடன் பரஸ்பரம் (பகிரங்கமாக அல்ல) சித்தாந்த போராட்டம்'' என்பதுதான் எமது அணுகு முறையாகும்.

மேற்கண்ட கண்ணோட்டத்தில் தான் மாவோயிஸ்டு கட்சியை அணுகுகிறோம். நாடு முழுவதும் ஒன்றுபட்ட கட்சி இல்லாத சூழலிலேயே தனக்குத் தெரிந்த வழிமுறை என்று தென் அமெரிக்க ''சேகுவாரேவின் ஃபுக்கோயிசக் கொரில்லா முறை''யைக் கையாண்டு தளப் பிரதேசம் கட்டுவது; அதிலிருந்து ஆயுதப் போராட்டத்தை நடத்துவது என்றெல்லாம் முன் வைத்த மாவோயிஸ்டு அமைப்பின் அரசியல் மற்றும் ராணுவப் பாதைகள் தோல்வியை தழுவியுள்ளன.

அந்த இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த தோழர் பசவராஜ் என்கிற நம்பல கேசவராவ் படுகொலை செய்யப்பட்ட பிறகு முன்னணியாக செயல்பட்டு வந்த ராணுவ தளபதியான தோழர் ஹிட்மா படுகொலை செய்யப்பட்ட பிறகு, தலைமைக் கமிட்டியில் இருந்த பூபதி என்கிற வேணுகோபால் உள்ளிட்ட வேறு சிலரும் சரணாகதிப் பாதையை தேர்வு செய்துள்ளனர். இயக்கத்தின் சில முன்னணியாளர்கள் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், உயிர் பயத்தில் எதிரிகளிடம் சரணடைந்து இயக்கத்தை காட்டி கொடுக்கின்ற துரோகத்தனத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் பத்திரிகைச் செய்திகள் மற்றும் மாவோயிஸ்ட் இயக்கத்தின் அதிகாரப்பூர்வ ஊடகச் செய்திகள் வாயிலாக வெளி வருகிறது.

அரசியல் போராட்டத்தை கைவிட்டு ராணுவ போராட்ட வழிமுறைகள் மற்றும் சாகச வழிமுறைகளையே ஆயுதப் போராட்டம் என்று பிரச்சாரம் செய்து அமுல்படுத்தி வந்த மாவோயிஸ்டுகளின் மீதான ஒடுக்குமுறையை முன்வைத்து இந்தியப் புரட்சிகர இயக்கம் பின்னடைவை சந்தித்து விட்டது என்று ஆளும் வர்க்க அறிவுஜீவிகளும், கம்யூனிச இயக்கங்களில் தாக்குப் பிடிக்க முடியாமல் சொந்த வாழ்க்கைக்கு ஓடிப்போன, ஓடுகாலிகளாக சீரழிந்துள்ள குட்டி முதலாளித்துவ அறிவு ஜீவிகளும் பிதற்றி வருகின்றனர்.

புரட்சிகர இயக்கத்தின் வரலாற்றில் அரசியல் போராட்டத்திற்கும் ஆயுதப் போராட்டத்திற்கு உள்ள உறவை சரியாக பிரயோகிக்கின்ற இயக்கங்கள் தான் தொடர்ச்சியாக முன்னேறிச் செல்லும் என்பதுதான் ரசியா, சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளின் புரட்சிகர இயங்கியல் போராட்ட வழிமுறை கற்றுக் கொடுத்துள்ள பாடமாகும்

''நக்சல்பாரி அரசியலையும், அந்த இயக்கங்களையும் மார்ச்-2026-க்குள் ஒழித்து விடுவோம்'' என வெறிகொண்டு அலையும் ஆளும் வர்க்கத்தின் இரத்தவெறி பிடித்த கொடூரமான அடக்குமுறைகளால் தற்காலிகமாக சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும், மக்களின் மீதான கொடூரமான மறுகாலனியாதிக்க தாக்குதல்களும், சுரண்டல்களும் நீடிக்கின்ற வரை விவசாயிகளின் விவசாயப் புரட்சியை அடிப்படையாகக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சியில் நக்சல்பாரி இயக்கங்கள் முன்னேறிச் செல்வதை அடக்குமுறைகள், படுகொலைகள் மூலமாக தடுக்க முடியாது.

•

# காா்ப்பரேட்டுகளுக்கு விவசாயத்தை காவு கொடுக்கும் பாசிச மோடி அரசு!

இந்திய விவசாயத்தை கார்ப்பரேட்டுகளுக்கு வாரி கொடுப்பதில் 24 மணி நேரமும் தீவிரமாக வேலை செய்து கொண்டிருக்கின்ற ஆர்எஸ்எஸ் - பாஜக, விவசாயிகளின் வாழ்க்கைக்கும், அவர்களின் அரைகுறை நிலவுடைமைக்கும் எதிரானது என்பதை மோடி ஆட்சிக்கு வந்த பிறகு விவசாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து வெளியான சமீபத்திய அறிக்கைகள் அம்பலப்படுத்துகின்றன.

கடந்த முக்கால் நூற்றாண்டுகளாக விவசாயிகளின் வாழ்க்கையை பின்னுக்கு தள்ளிவரும் தேர்தல் அரசியல் கட்சிகள், தேர்தல் அறிக்கைகளில் மட்டுமே விவசாயிகளை பாதுகாப்பதாக கூறிக் கொள்கின்றனர். "கடன் தள்ளுபடி; இலவச மின்சாரம் மற்றும் பி எம் கிஸான்" என்ற பெயரில் விவசாயிகளைப் பாதுகாக்கப் போவதாக வாக்குறுதிகளை வாரி இறைக்கின்றனர்.

ஆனால் உண்மையில் இந்தியாவில் விவசாயம் நாளுக்கு நாள் பின்னடைவை சந்தித்து வருகிறது என்பது மட்டுமின்றி விரல்விட்டு எண்ணக்கூடிய சக்திகளான கார்ப்பரேட் முதலாளிகளிடம் நிலக்குவியல் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. நிலமற்ற கூலி விவசாயிகளிடம் நிலம் இன்னமும் சென்று சேரவில்லை. சிறு குறு விவசாயிகள் மற்றும் நடுத்தர, பணக்கார விவசாயிகளிடமுள்ள நிலமும் படிப்படியாக பறிக்கப்பட்டு அவர்களை விவசாயத்தில் இருந்து விரட்டியடிக்கும் கொள்கைகளே அமுலாகிறது.

இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பசுமைப் புரட்சி திட்டம், விவசாயிகளின் வாழ்க்கையை நாசமாக்கியது; அதன் பிறகு புதிய தாராளவாதம் என்ற பெயரில் விவசாயத்தில் புகுத்தப்பட்ட ஒப்பந்த விவசாயம் விவசாயிகளின் வாழ்க்கையை மேலும் கொடூரமான பாதிப்புகளுக்கு உள்ளாக்கியது; 2014 முதல் நடந்து வருகின்ற ஆர்எஸ்எஸ் - பாஜக ஆட்சியானது விவசாயிகள் அரைகுறை உயிரையும் பறித்துக் கொண்டு அவர்களை தற்கொலைப் பாதையில் தள்ளியுள்ளது.

"மோடி ஆட்சியின் இரண்டாவது பதவிக்காலத்தில் (2019-2024) மொத்த விவசாயிகளின் தற்கொலைகள் 10,281-லிருந்து 11,290 ஆக அதிகரித்துள்ளதாக புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வழங்கிய அரசாங்க புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதில், விவசாயத் தொழிலாளர்களிடையே தற்கொலை எண்ணிக்கை 4,324 லிருந்து 6,083 ஆக அதாவது 41% ஆக அதிகரித்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் விதர்பா மற்றும் மராத்வாடாவின் துரதிர்ஷ்டவசமான பகுதிகளுடன் மீண்டும் மோசமான சூழ்நிலையைக் கண்டது," என்று அரசாங்க அறிக்கையே முன் வைக்கிறது.

2014 முதல் 2022 வரையிலான ஆண்டுகளில், 1,00,474 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசிய குற்றப் பதிவுப் பணியக அறிக்கை தெரிவிக்கிறது. "இந்த ஒன்பது ஆண்டுகளில் மட்டும் சராசரியாக ஒரு நாளுக்கு கிட்டத்தட்ட 30 தற்கொலைகள் நடந்துள்ளன.

விவசாயிகளின் தற்கொலை அதிகரித்துக் கொண்டே செல்வது பற்றி மோடி அரசாங்கம் எந்த அக்கறையும் காட்டவில்லை என்பது மட்டுமின்றி, உண்மையான புள்ளி விவரங்களைக் கூட வெளியிடுவதற்கு பல்வேறு வகையில் மட்டறுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்திய விவசாயத்தை விழுங்கவரும் அதானியின் தானியக்கிடங்கு.



பாசிச பாஜக தேர்தல் அறிக்கைகளில் முன் வைத்தபடி, "இந்திய உணவுக் கழகத்தை மறுசீரமைத்தல், 2022-23 ஆம் ஆண்டுக்குள் விவசாய ஏற்றுமதியை 100 பில்லியன் டாலர்களாக உயர்த்துதல், அழுகும் விவசாய விளைபொருட்களுக்கான வேளாண் ரயில் வலையமைப்பை அமைத்தல் போன்றவையும், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.3,000 ஓய்வூதியம் உள்ளிட்ட வாக்குறுதிகள் அடங்கும்." இந்த வாக்குறுதிகளின் நிலைமை என்ன?

இந்திய உணவுக் கழகத்தை மறுசீரமைக்கின்றோம் என்று சவடாலடித்தது. 2014 ஆம் ஆண்டு ஆட்சிப்

பொறுப்பை ஏற்றவுடன் இந்திய உணவுக் கழகத்தை மறுசீரமைக்க ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்தது. இந்தக் குழுவானது உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயனாளிகள் எண்ணிக்கையை 67% லிருந்து 40% குறைக்க வழிகாட்டியது. சேமிப்புக் கிடங்குகளை தனியாரிடம் ஒப்படைக்க பரிந்துரைத்தது. இதனால் உணவு தானியங்கள் கொள்முதல் குறைந்துக் கொண்டே போகிறது என்பதும், கொள்முதல் செய்யப்படுகின்ற உணவு தானியங்களை சேமித்து வைப்பதற்கான உணவு கிடங்குகள்கூட தனியார்மயமாக்கப்பட்டு வருகிறது.

இந்திய உணவுக் கழகத்தின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று இந்தியாவில் வெள்ளம் மற்றும் கடுமையான பஞ்சம் ஏற்பட்டாலும் குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு தேவையான உணவை சேகரித்து வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த மக்களுக்கும் வழங்குவது என்பதுதான். இதனடிப்படையில்தான் கோதுமை ஆண்டுக்கு சுமார் 270 லட்சம் மெட்ரிக் டன்களும், நெல் 785 லட்சம் மெட்ரிக் டன்களும் கொள்முதல் செய்யப்படுகிறது.

ஆனால் சேமித்து வைக்கும் தானியக் கிடங்குகளை தனியாரிடம் ஒப்படைப்பதன் மூலம் உணவு உற்பத்தியை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து கை கழுவி தனியார் முதலாளிகள் குறிப்பாக விவசாயத்தை விழுங்கி வரும் தேசங்கடந்த தரகு முதலாளிகளின் நிறுவனங்கள் சூறையாடுவதற்கு மாற்றப்பட்டுள்ளது என்பது தான் எதார்த்த நிலவரமாகும்.

விவசாய ஏற்றுமதியை அதிகரிப்பது என்பதன் மூலமாக விவசாயிகளுக்கு அதன் பலன்கள் கிடைக்கச் செய்வது என்பதைக் காட்டிலும் இடைத்தரகர் கொள்ளையடிக்கவே உதவுகிறது. விவசாயிகளின் விளை பொருட்களை கொள்முதல் செய்கின்ற தரகு முதலாளிகள் அவர்களின் நிறுவனங்கள் தான் இந்த லாபத்தை அனுபவிக்கின்றனர்.

குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே விளைகின்ற பொருட்களை சேமித்து வைப்பதற்கும் அவற்றை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு தனிச்சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்படும் என்ற வாக்குறுதியும் காற்றில் பறந்துள்ளது.

நாடு முழுவதும் பயணிகளிடமிருந்து கொள்ளையடிப்பதற்கு வந்தே பாரத், நமோ பாரத் போன்ற உயர்ரக சொகுசு ரயில்கள் இயக்கப்படுகிறதே ஒழிய விவசாயிகளின் விளைபொருள்களை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு சென்று சேமித்து வைப்பதற்கான வாய்ப்பு வசதிகள் எதுவும் உருவாக்கப்படவில்லை.

சமீபத்தில் காஷ்மீரில் விளைந்த ஆப்பிள்கள் நாடு முழுவதும் கொண்டு செல்வதற்கு உள்ள ஒரே வழித்தடமான ஸ்ரீநகர்-ஜம்மு தேசிய நெடுஞ்சாலை நிலச்சரிவு மற்றும் கனமழையால் பாதிப்புக்கு உள்ளானதால் ஆயிரக்கணக்கான டன் ஆப்பிள்கள் தேக்கம் அடைந்தன. இதனால் சுமார் 600 கோடி முதல் 700 கோடி வரை விவசாயிகள் கடுமையான நட்டத்தை சந்தித்தனர். அந்த நேரத்தில் மாற்று வழியாக ரயில் மூலம் கொண்டு சென்றதன் மூலமாக ஓரளவிற்கு

**2014 முதல் 2022 வரையிலான ஆண்டுகளில், 1,00,474 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசிய குற்றப் பதிவுப் பணியக அறிக்கை தெரிவிக்கிறது. "இந்த ஒன்பது ஆண்டுகளில் மட்டும் சராசரியாக ஒரு நாளுக்கு கிட்டத்தட்ட 30 தற்கொலைகள் நடந்துள்ளன.**

இந்த பாதிப்புகள் குறைக்கப்பட்டன என்பதிலிருந்து நமக்கு கிடைக்கும் அனுபவம் நாடு முழுவதும் விளைகின்ற பொருட்களை அதுவும் குறிப்பிட்ட பருவத்தில் விளைகின்ற பொருட்களை கொண்டு சேர்ப்பதற்கும் சேமித்து வைப்பதற்கும் உரிய இடங்களை இணைக்கின்ற வழித்தடங்கள் அவசியம் என்பதுதான். ஆனால் இன்று வரை இந்த பணிகள் ஏதும் நடக்கவில்லை. கடந்த 10 ஆண்டுகளில் பிரதமரால் அதிகமான வந்தே பாரத் ரயில்கள் கொடியசைத்து இயக்கப்பட்டது தான் நாம் கண்ட முன்னேற்றம்.

"முதன் முதலாக ஆட்சியைப் பிடித்த மோடி விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன்" என்றார். 2016 ஆம் ஆண்டில், மோடி மீண்டும் "2022 ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன்" என்று உறுதியளித்தார். "2022 ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம்" என்ற மோடியின் வாக்குறுதியின் யதார்த்தத்தை இப்போது பார்ப்போம்.

"2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விவசாயக் குடும்பங்களின் 77வது சுற்று சூழ்நிலை மதிப்பீட்டு கணக்கெடுப்பின்படி, 2018-19 ஆம் ஆண்டில் விவசாயக் குடும்பங்களின் மதிப்பிடப்பட்ட மாத வருமானம் பெயரளவு அடிப்படையில் மாதத்திற்கு ரூ.10,218 மட்டுமே என்பதைக் காட்டுகிறது. இது மாதத்திற்கு ரூ.22,610 என்ற எதிர்பார்க்கப்படும் இலக்கிற்கு அருகில் கூட இல்லை," என்று FAN-இந்தியா அறிக்கை வெளியிட்டுள்ளது. இவை அனைத்தும் முக்கியமாக அரசாங்க ஆவணங்கள் மற்றும் கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டவைதான்.

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது கிடக்கட்டும். ஆனால் தற்போது அவர்களுக்கு கிடைக்கின்ற குறைந்தபட்ச வருமானத்தைக் கூட அவர்கள் வைத்துக்கொண்டு முன்னேறுவதற்கான வழிவகைகள் எதுவும் இல்லை. வங்கிக் கடன்கள் என்ற முறையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் நிறுத்தப்பட்டு வருகிறது. மாறாக கார்ப்பரேட்டுகளுக்கு பல லட்சம்

**விவசாயிகளுக்கு ஒரு லட்சம் வரை 0% வட்டிக்கு கடன் வழங்குவதாக 2019-ம் ஆண்டு வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதி காற்றில் பறந்து கடன் நெருக்கடி அதிகமாகியுள்ளது.**

கோடி வரிச்சலுகையும், தொழில்களை தொடங்குவதற்கான உத்தரவாதமும் அளிக்கப்படுகிறதே ஒழிய நாட்டின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்படுகின்ற விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எந்த விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆனால் விவசாயிகளின் வாழ்க்கை முன்னேறிக் கொண்டிருப்பதாகவும் படாடோபமாக அறிவிக்கப்படுகிறது. இதற்கு இணையாக அவர்களின் வங்கி கணக்குகளுக்கு ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது என்பதே விவசாயிகளின் உண்மையான வாழ்க்கை நிலைமையை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

நாடு முழுவதும் முக்கிய பயிர்களாக உள்ள கரும்பு, பருத்தி மற்றும் நிலக்கடலை தவிர வெளிப்புற மூலதனத்தை சார்ந்து இருக்கும் பல்வேறு வகையான பயிர்கள் அவற்றுக்கு தேவையான விதை; அதை விற்பனை செய்வதற்கான சந்தை ஆகியவற்றை ஒருங்கிணைத்து பார்க்கின்றபோது கடுமையான பாதிப்பிற்கு விவசாயம் உள்ளாகியுள்ளது என்பதுதான் நிலைமையாகும்.

எடுத்துக்காட்டாக மகாராஷ்டிரா மாநிலத்தில் விதர்பா மற்றும் எவத்மால் பகுதிகளில், தெலுங்கானா மாநிலத்தில் உள்ள வாரங்கல், ஆந்திர பிரதேச மாநிலத்தில் உள்ள அனந்தபூர் ஆகிய பகுதிகளில் விளைகின்ற பருத்தி விளைச்சல் மோசமான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

அதேபோல நிலக்கடலை அதிகமாக உற்பத்தியாகின்ற கர்நாடகா மற்றும் பஞ்சாப் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்கள் கட்டுப்படியாகின்ற விலை இல்லாமல் விவசாய உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு நிகராகவே சோயா உற்பத்தியில் முன்னிலையில் உள்ள மத்தியப் பிரதேச விவசாயிகளின் வாழ்க்கையும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளது.

எம்.எஸ். சுவாமிநாதன் கமிஷன் முன்மொழிந்த C2+50% சூத்திரத்தின்படி, விவசாயிகளின் விளைபொருட்களை உற்பத்திச் செலவில் குறைந்தது ஒன்றரை மடங்கு குறைந்தபட்ச ஆதரவு விலையில் (MSP) அரசாங்கம் கொள்முதல் செய்யும் என்று பிரதமர் நரேந்திர மோடி 2014 ஆம் ஆண்டு உறுதியளித்ததை மறக்க முடியாது. உண்மையில் விவசாயிகளில் 86 சதவீதம் பேர் கார்ப்பரேட் விவசாயத்துடன் போட்டி போட முடியவில்லை என்பதுதான் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்ற உண்மையான நிலவரம் ஆகும்.

“கொடுமை, கொடுமை என்று கோவிலுக்கு சென்றால் அங்க ரெண்டு கொடுமை எதிரில் வந்தது” என்ற பழமொழிக்கேற்ப விவசாயிகளின் பாதிப்பு காலங்களில் அவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்ட காப்பீடுத் திட்டங்கள், குறிப்பாக ‘பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா’ என்ற திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகையானது சுமார் 14,600 கோடி காப்பீட்டு நிறுவனங்களின் பையில் சென்று சேர்ந்ததே ஒழிய விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு ஒரு லட்சம் வரை 0% வட்டிக்கு கடன் வழங்குவதாக 2019-ம் ஆண்டு வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதி காற்றில் பறந்து கடன் நெருக்கடி அதிகமாகியுள்ளது.

விவசாயம் தொடர்ச்சியாக நெருக்கடிக்கு உள்ளாகிறது என்ற காரணத்தினால் அவர்களின் கோபாவேசத்தை தணிக்க கீனிசிய பொருளாதாரத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் மற்றொரு மோசடியான வழிமுறையான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (MGNREGA.). இதன் மூலமாக மக்களின் கையில் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்கு ஒதுக்கப்படுகின்ற தொகையும் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் குறைந்து கொண்டே செல்கிறது. ஒரு எடுத்துக்காட்டாக 2014-15 காலகட்டத்தில் பட்ஜெட்டில் 1.85 சதவீதம் ஒதுக்கப்பட்டது என்பது குறைந்து தற்போது 2023-24 காலகட்டத்தில் 1.33 சதவீதமாக பின்னடைவுக்கு உள்ளானது. இவை எல்லாம் விவசாயிகளின் வாழ்க்கையை மேலும் மோசமாக்கி உள்ளது.

இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் இன்னும் சார்ந்துள்ள விவசாயத்தின் மீது ஆர்எஸ்எஸ் - பாஜக ஆட்சிக்கு வந்த காலகட்டத்தில் இருந்து மிகப்பெரும் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகிறது என்பது நிதர்சனமான உண்மை.

மனுதர்மத்தின்படி, “நிலத்தை கீறி பயன்படுத்துகின்ற கீழ்த்தரமான பாவச் செயலை செய்யக்கூடாது” என்பதை வேறொரு வகையில் அமல்படுத்துகின்ற ஆர்எஸ்எஸ் மோடி கும்பலானது கார்ப்பரேட்டுகளின் கைக்கூலிகள் என்பதை விளக்குவதற்கு மேற்கண்ட சான்றுகள் போதுமானது.

கார்ப்பரேட்டுகளின் பிடியிலிருந்து விவசாயிகளையும், விவசாயத்தையும் மீட்பதற்கு குறைந்தபட்ச செயல் திட்டத்தை கொண்ட ஜனநாயகக் கூட்டரசை நிறுவுவதும், விவசாயத்தை பாதுகாக்கின்ற வகையில் சுயசார்பு பொருளாதாரத்தை கட்டியமைப்பதும், படிப்படியாக நிலமற்ற கூலி விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்படுகின்ற வகையில் “உழுபவருக்கே நிலம்” என்ற அதிகாரத்தை நோக்கி நகர வேண்டும் என்பதும்தான் விவசாயிகளின் ஒரே கோரிக்கையாகவும், தேவையாகவும் உருவாகியுள்ளது.

● நன்னிலம் சுப்பராயன்

# ஷ்ரம் சக்தி நீதி 2025:

# மனுநீதியே இனி தொழிலாளர்களின் தலைவிதி!

1990-களில் வெளிவந்த மகஇக-வின் ''நாமக்கட்டி ஆளப்போகுது'' என்ற பாடலில் காவி பாசிஸ்டுகளின் ஆட்சியில் தொழிலாளிகளின் நிலைகுறித்து கீழ்க்கண்ட வரிகள் வரும்,

**"....சங்கம் வைக்க வேணுமா இந்தாபுடி சார்ஜ்சீட்டு!**
**இன்குலாப் ஜிந்தாபாத்து இன்கிரிமெண்ட்டு கட்டு!**
**போனசு வேணுமா போய்ட்டுவா டிஸ்மிசு!**
**அட கோரிக்கையை சொல்லனுனா வேற ஒரு ரூட்டிருக்கு!**
**ஒரு கொட்டாயை கட்டிகிட்டு பஜகோவிந்தம் பாடு!..."**


- என்பதுதான் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையாக இருக்கப் போகிறது என்பதைக் குறிக்கும் வரிகள் அவை.

கடந்த அக்டோபர் மாதத்தில் ஒன்றிய பாசிச பாஜக அரசாங்கம், "தேசிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை வரைவை (National Labour and Employment Policy) - ஷ்ரம் சக்தி நீதி 2025 என்ற பெயரில் வெளியிட்டது. அதில் சொல்லப்பட்டிருக்கும் காவிமயமாக்கப்பட்ட தொழில் கொள்கைகளும் தற்போது நடைமுறைக்கு வந்துள்ள நான்கு புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகளும் மேற்கண்ட பாடல் வரிகளை அப்படியே நிரூபிப்பதாக உள்ளது.

### அடிமைத்தனத்தையே தொழிலாளர் நலன் என்று கயிறு திரிக்கும் பார்ப்பன பாசிஸ்டுகள்!

''பாதுகாப்புடன் உற்பத்தித்திறனை இணைப்பதன் மூலமும், புதுமையுடன் அனைவரையும் உள்ளடக்குவதன் மூலமும், விக்சித் பாரத் (வளர்ச்சியடைந்த இந்தியா) @ 2047 என்ற தொலைநோக்குப் பார்வைக்கு இது நேரடியாக பங்களிக்கும்'' என்றும், ''இந்தியாவின் நாகரீக நெறிமுறைகளான ஸ்ரம தர்மத்தில் - வேலையின் கண்ணியம் மற்றும் தார்மீக மதிப்பு ஆகியவற்றில் வேரூன்றிய இந்தக் கொள்கை, ஒவ்வொரு தொழிலாளிக்கும் பாதுகாப்பு, உற்பத்தித்திறன் மற்றும் பங்கேற்பை உறுதி செய்யும் ஒரு தொழிலாளர் சூழலமைப்பைத் தொலைநோக்காகக் கொண்டிருக்கிறது. இது நிறுவனங்கள் வளரவும் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கவும் உதவும் அதேவேளையில் தொழிலாளர்களின் நலனை நிலைநிறுத்தும் ஒரு சமநிலையான கட்டமைப்பை உருவாக்க முயல்கிறது'' என்றும் மத்திய தொழிலாளர் அமைச்சர் மான்சுக் மாண்ட்வியா கூறி அறிமுகப்படுத்தினார்.

எந்தவித முறையான ஏற்பாடுகளும் இன்றி கமுக்கமாக வெளியிடப்பட்ட இந்த வரைவு அறிக்கைக் குறித்த கருத்துக்களையும், பரிந்துரைகளையும் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி அக்டோபர் 27 என்றும் அறிவித்திருந்தார். இந்தச் செய்தி 'தி இந்து' ஆங்கில நாளிதழ் தவிர வேறு எந்தவொரு பிரபலமான பத்திரிக்கையிலும் வரவில்லை. இதைப்பற்றிய விவாதங்களும் எங்கும் எழவில்லை. புதிய தொழிலாளர் கொள்கை அமலாவதற்கு முன்னோட்டமாக நடந்துள்ள இந்நிகழ்வை எதிர்த்து AITUC உள்ளிட்ட ஒருசில தொழிற்சங்கங்கள் மட்டுமே தங்களது கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளன.



**1. உலகளாவிய சமூகப் பாதுகாப்பு:**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO), தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம் (ESIC), பிரதான் மந்திரி ஜன்ஆரோக்ய யோஜனா (PM-JAY), இ-ஷ்ராம் (e- SHRAM) மற்றும் மாநில நலவாரியங்களை ஒருங்கிணைத்து ஒரு ஒன்றுபட்ட கணக்கை உருவாக்குதல்.

**2. தொழில் பாதுகாப்பு மற்றும் உடல்நலம்:**

இடர்பாடு அடிப்படையிலான ஆய்வு மற்றும் பாலின அடிப்படையிலான தரநிலைகளுடன் கூடிய OSH சட்ட தொகுப்பு 2020-ஐ (Occupational Safety, Health and Working Conditions Code) செயல்படுத்துதல்.

**3. வேலைவாய்ப்பு மற்றும் எதிர்கால தயார்நிலை:**

ஸ்கில் இந்தியா, NAPS மற்றும் பிரதம மந்திரி இளைஞர் பயிற்சித் திட்டம் (PMKVY) ஆகியவற்றை தேசிய தொழில் சேவை (National Career Service) டிஜிட்டல் பொது உள்கட்டமைப்போடு (Digital Public Infrastructure) இணைத்து தொழில்துறையால் நிர்வகிக்கப்படும் திறன்-வேலைவாய்ப்புத் தளமாக ஒருங்கிணைத்தல்.

**4. பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல்:**

வேலைவாய்ப்புகளில் பெண்களின் பங்களிப்பை 2030-ஆம் ஆண்டுக்குள் 35% ஆக அதிகரித்தல். இளைஞர்களுக்கான தொழில்முனைவு மற்றும் தொழில் வழிகாட்டுதல் முயற்சிகளை விரிவுபடுத்துதல்.

**5. முறைப்படுத்தல் மற்றும் உட்படுத்தலை எளிமையாக்குவது:**

சுயசான்றிதழ் மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட MSME வருமானத் தாக்கல் ஆகியவற்றை ஒற்றைச் சாளர டிஜிட்டல் முறையில் இணைப்பது.

**6. தொழில்நுட்பம் மற்றும் பசுமை மாற்றங்கள்:**

பசுமை வேலைகளை ஊக்குவிப்பது, செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் நியாயமான-மாற்று வழிகளை ஊக்குவித்தல்.

**7. ஒருங்கிணைப்பு மற்றும் நல்லாட்சி:**

அமைச்சகங்களுக்கு இடையேயான ஒத்திசைவு மற்றும் வெளிப்படையான கண்காணிப்பை செய்யும் வகையிலான ஒருங்கிணைந்த தேசிய தொழிலாளர் தரவு கட்டமைப்பு.

என்ற நோக்கங்களைக் கொண்டுள்ளது என்றும், 2025-2027, 2027-2030, மற்றும் 2030-க்குப் பிறகு என்ற மூன்று கட்டங்களாக இந்தப் புதிய தேசிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை அமலாக்கப்படுமென்றும், அதன்மூலம்


- ஒரேமாதிரியான தொழிலாளர் பதிவு மற்றும் சமூகப் பாதுகாப்பு மாற்றிக்கொள்ளும் வசதி.
- கிட்டத்தட்ட பூஜ்ஜிய பணியிட இறப்புகள்.
- பெண் தொழிலாளர் பங்கேற்பை அதிகரித்தல்.
- டிஜிட்டல் மயமாக்கத்தின்மூலம் முறைசாரா தொழில்களைக் கணிசமாகக் குறைத்தல்.
- செயற்கை நுண்ணறிவின்மூலம் இயக்கப்படும் தொழிலாளர் நிர்வாக முறையை அனைத்து மாநிலங்களிலும் அமைப்பது.
- இலட்சக்கணக்கான பசுமை மற்றும் கண்ணியமான வேலைகளை உருவாக்குதல்.
- முழுமையாக ஒன்றிணைக்கப்பட்ட ஒரே நாடு; ஒருங்கிணைந்த தொழிலாளர் பட்டாளம் என்ற சூழலமைப்பு.

- போன்ற பலன்களை 2047-ஆம் ஆண்டுக்குள் எதிர்பார்க்கமுடியும் என்றும் டிஜிட்டல் இந்தியா, மேக் இன் இந்தியா, ஸ்கில் இந்தியா, ஸ்டார்ட்அப் இந்தியா மற்றும் ஆத்மநிர்பர் பாரத் உள்ளிட்ட தேசிய திட்டங்களை நிறைவு செய்கிறது என்றும் அளந்துவிடுகிறது. அடடா! காவி பாசிஸ்டுகளுக்கு தொழிலாளர்கள் மீது என்னே ஒரு அக்கறை! என்று திகைப்புக்குள்ளாகாதீர்கள். தேன்தடவிய வார்த்தைகளால் 3 பக்கங்களுக்கு நீண்டு 984 வார்த்தைகள் உள்ள இந்த வரைவானது தொழிலாளர் உரிமை பற்றியோ, தொழிற்சங்கம் பற்றியோ எந்தவொரு இடத்திலும் குறிப்பிடவில்லை.

ஏற்கனவே பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயப்படுத்தி நிரந்தரத் தொழிலாளர்களே இனி எங்கும் இருக்கக்கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டு, ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று புளுகி, கொரோனா ஊரடங்கின்போது இலட்சக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்களை ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் நடக்கவைத்த காவிக் கொடூர பாவிகளின் பார்ப்பன பாசிசமயமான 'இந்துத்துவா' அடிப்படையில் உருவாக்கப்பட்ட தொழிலாளர் கொள்கை தொழிலாளர்களுக்கான உரிமையையும் பணிப் பாதுகாப்பையும் ஒரு போதும் பெற்றுத்தராது.

### காவிமயமாக்கப்பட்டுள்ள தொழிற்கொள்கை!

அதுமட்டுமில்லாமல் காவி பாசிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தது முதல் அனைத்தையும் காவிமயமாக்கி வரும்நிலையில் தொழிலாளர் கொள்கையை மட்டும் விட்டுவைப்பார்களா என்ன? அதனால்தான் இக்கொள்கையின் பொழிப்புரையில் "ஷ்ரம் தர்மா (உழைப்பு) என்பது சமூகத்திற்கும் ஒருவரின் சொந்த வளர்ச்சிக்கும் உரிய ஆன்மீக பங்களிப்பாகும். இது மனுஸ்மிருதி, யக்ஞவல்கிய ஸ்மிருதி, நாரத ஸ்மிருதி, சுக்ரநிதி, அர்த்தசாஸ்திரம் போன்ற பண்டைய பார்ப்பன மத நூல்களில் உள்ள ராஜதர்மா என்ற கருத்தின் மூலம் உருவான நெறிமுறைகளாகும். இந்த ஆரம்பகால சூத்திரங்கள் நவீன தொழிலாளர் சட்டத்தின் எழுச்சிக்கும் அடிப்படையாக அமைந்திருக்கின்றன.." என்று குறிப்பிட்டு உழைப்பை தர்மம் என்றும், ஆன்மீகக் கடமை என்றும் கூறுவதன்மூலம் உழைக்கும் மக்களின் மீதான முதலாளித்துவத்தின் சுரண்டலையும், அதலபாதாளத்துக்கு சென்றுகொண்டிருக்கும் தொழிலாளிகளின் நிலையையும் நியாயப்படுத்த முனைகிறது.




ஆனால் நவீன தொழிலாளர் சட்டம் உழைப்பை கடமை அடிப்படையில் கருதப்படுவதை நிராகரித்து மனித உழைப்புக்கு பணமதிப்பு உண்டு என்பதை அடிப்படையாகக் கொண்டது. இதை இந்தப் புதிய தொழிலாளர் கொள்கை அங்கீகரிக்க மறுத்து மத மற்றும் வேத புரட்டுகளைப் புகுத்தி சாதி மற்றும் பாலின அடிப்படையிலான படிநிலை உழைப்புப் பிரிவை வலுப்படுத்தவும், முதலாளிகளுக்கு மிகவும் பிடித்த கீதா உபதேசமான “கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே” என்றும் கூற வருகிறது இந்தக் கொள்கை.

## தொழிலாளர் கொள்கையில் வெளிப்படும் கார்ப்பரேட் சேவை மனப்பான்மை!

சமூகப் பாதுகாப்பு குறியீடு 2020 (Social Security code) உள்ள தொழிலாளர்களை மட்டுமே இக்கொள்கை கணக்கிலெடுத்துக்கொள்வதால் அக்குறியீடு இல்லாத கோடிக்கணக்கான அமைப்புசாரா விவசாயத் தொழிலாளர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள், MNREGA தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், இதர உதிரித் தொழிலாளர்களையும், GIG தொழிலாளர்களையும் விலக்கிவைக்கிறது. நமது நாட்டில் ஆண் தொழிலாளர்களை விட பெண்கள்தான் அதிக எண்ணிக்கையில் அமைப்புசாரா தொழிலாளிகளாக தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்றனர். அவர்களையும் இக்கொள்கை கண்டுகொள்ளவில்லை. பணியிடத்தில் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உடல்நலம் எவ்வாறு மேம்படுத்தப்படும் என்பதை இந்தக் கொள்கை விளக்கவில்லை.

மாறாக, குறிப்பிட்ட துறைகளுக்குப் பொருந்தக்கூடிய விரிவான பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கொண்ட சட்டங்களை ரத்து செய்துவிட்ட புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்பான தொழில் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் பணி நிலைமைகள் (OSH) என்பதையே சார்ந்துள்ளதால் இந்த நோக்கமே கேள்விக்குறியாகியுள்ளது.

NAPS, FTE, ஒப்பந்தத் தொழிலாளர்கள் போன்ற முதலாளிகளுக்கு ஆதரவான திட்டங்களைக் கொண்டுவந்து நிரந்தரத் தொழிலாளர்களே இனிமேல் இருக்கப் போவதில்லை என்ற நிலையில் கண்ணியமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவது என்ற வெற்றுச்சொல்லையே இந்த வரைவு திட்டம் கொண்டுள்ளது. அதோடு இளைஞர்கள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு வேலைகளை உருவாக்குவதற்கு எந்தவொரு செயல் திட்டத்தையும் இந்தக் கொள்கை வழங்கவில்லை.

செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் மயமாக்கம் என்ற பெயரில் மீப்பெரும் தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவைக் கையாளும் பன்னாட்டு கார்ப்பரேட்டுகளுக்கு தொழிலாளர்களின் தரவுகளைத் தாரைவார்ப்பதே இந்தக் கொள்கையின் முதன்மை நோக்கமாக உள்ளது. இணையதள சேவைகளும், செல்போன்களும்,செல்போன் சிக்னல்களும் இந்தியா முழுமைக்கும் இன்னும் சென்றுசேராத நிலையில் டிஜிட்டல் மயமாக்கம் என்பது கிராமப்புற மக்களை, இணையதள சேவைகளைக் கொண்டிராத அமைப்புசாரா தொழிலாளர்களை விலக்கிவைத்தலில்தான் கொண்டுபோய்விடும்.

அதுமட்டுமில்லாமல் இந்தியாவில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்களில் 56 சதவீதம் பேர் மட்டுமே செல்பேசிகளை வைத்திருக்கிறார்கள் என்ற நிலையில் டிஜிட்டல் மயமாக்கப்படுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தொழிலாளர் சட்டங்களை மீறும் முதலாளிகள் மீது தொழிலாளர் ஆணையாளர், ஆய்வாளர் மூலமாக நடவடிக்கை (regulate) எடுக்கும் முறை மாற்றப்பட்டு, அரசு தனது அதிகார வரம்பைச் சுருக்கி தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளுக்கு இடையே ‘‘ஒருங்கிணைப்பை’’ ஏற்படுத்துவதாக, வசதிசெய்து கொடுப்பவர் (facilitator) என்ற மறுவடிவமைத்து இனிமேல் தொழிலாளர் ஆய்வுகளை தனியார்கள் மேற்கொள்ளும் வகையில் இந்தக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இந்தியாவைப் பின்னோக்கி இழுத்துவரும் காவி பாசிஸ்டுகள் இந்தியாவில் எப்போதோ இருந்து வழக்கொழிந்துபோன சங்க (Guild system) முறையை அதாவது அக்கால கைவினைஞர்கள், வியாபாரிகள், மற்றும் தொழில்சார் நபர்களைக்கொண்டிருந்த சங்கங்களையே இன்றைய நவீன முத்தரப்பு நிர்வாகத்திற்கான எடுத்துக்காட்டாகக் இந்தக் கொள்கை வரைவில் குறிப்பிடுகின்றனர்.

**தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை நீர்த்துப் போகச் செய்து தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் சமூகப் பாதுகாப்புகளை காவு கொடுத்து முதலாளிகளின் லாபத்தை பெருக்கும் விதத்திலேயே இந்தக் கொள்கை வரைவு உள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் கருத்துகளைக் கூறியுள்ளன.**

### தொழிற்சங்கங்கள் வைத்துள்ள விமர்சனங்கள்!

தொழிலாளர் கொள்கைகளை உருவாக்கும் போது தொழிலாளர்களின் கண்ணியம், பாதுகாப்பு, பணிநிலைமைகள் பற்றி உலகத் தொழிலாளர் அமைப்பு (International Labour Organization) உருவாக்கியுள்ள சர்வதேச விதிகளை இந்த வரைவுக் கொள்கை கண்டுகொள்ளவில்லை. அரசியலமைப்பு உறுதிமொழிகள், சர்வதேச கடமைகள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வியல் அடிப்படையில் தொழிலாளர் கொள்கை வகுக்கப்பட வேண்டும். நாடு முழுவதும் உள்ள பல்வேறு தொழிற்சங்கங்கள், தொழிலாளர் குழுக்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றை கலந்தாலோசித்த பிறகே இது வரைவு செய்யப்பட வேண்டும்.

ஆனால் இவற்றில் எதையுமே செய்யாமல் ஒருபக்க சார்பாக இந்தக் கொள்கை வரைவு உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர், வேலை அளிப்பவர், அரசு ஆகிய மூவரும் உள்ள முத்தரப்பு அமைப்பில் கலந்து பேசிதான் எந்தவொரு தொழிலாளர் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் மீதும் முடிவெடுக்க வேண்டும் என்ற நெறிமுறை மீறப்பட்டுள்ளது. இப்படி ஒரு கொள்கையறிக்கையை அறிவிப்பதற்கு முன்பு தொழிற்சங்கங்களோடு எந்த கருத்துப் பரிமாற்றங்களையும் தொழிலாளர் துறை நடத்தவில்லை. தொழிலாளி வர்க்கத்தின் வேலை நிலைமைகள், தொழிலாளர்களின் அடிப்படை நடவடிக்கைகளுக்கான உரிமைகள், குறைந்தபட்ச ஊதியம் மற்றும் சமூக பாதுகாப்புகள் உள்ளிட்டவைகளின் மீது நடத்தப்படும் தாக்குதலாகவும், தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை நீர்த்துப் போகச் செய்து தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் சமூகப் பாதுகாப்புகளை காவு கொடுத்து முதலாளிகளின் லாபத்தை பெருக்கும் விதத்திலேயே இந்தக் கொள்கை வரைவு உள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் கருத்துகளைக் கூறியுள்ளன.

உழைக்கும் மக்கள் அடிமைச் சேவகம் செய்துகொண்டிருந்த நாட்களில், உழைப்புக்கேற்ற கூலி என்ற வழக்கமில்லாத நாட்களில் எழுதப்பட்ட மனுஸ்மிருதி, பண்டைய சாஸ்திரங்கள் அடிப்படையில் தொழிலாளர் கொள்கை வகுக்கப்படும் என்று இந்த கொள்கை வரைவு கூறுகிறது. இந்த வரைவின் நகலைக்கூட தொழிற்சங்கங்களுக்கு அனுப்பாததுமட்டுமின்றி தொழிலாளர் துறை தமது வலைத்தளத்தில் கூட வெளியிடவில்லை. அரசியல் சட்டம் பற்றிய எந்தவிதக் குறிப்போ, வழிகாட்டு நெறிமுறைகளோ இதில் இடம் பெறவில்லை. மனுதர்மத்தின் அத்தாரிட்டியான ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பலின் வழியிலான தொழிலாளர் விரோத ஆட்சி முறையையே இந்தக் கொள்கை தூக்கிப் பிடிக்கிறது.

### தொழிலாளர் ஒற்றுமையைச் சிதைக்கும் தொழிலாளர் கொள்கையை முறியடிப்போம்!

உலகத் தொழிலாளர் அமைப்பு கூட்டு பேரத்தை அதாவது தொழிலாளர்களின் சங்கம் வைக்கும் உரிமையை வலுப்படுத்த அழைப்பு விடுக்கிறது, ஆனால் அதில் ஒரு உறுப்பினராக இந்தியா இருந்தபோதிலும் காவி பாசிஸ்டுகளின் இப்புதிய தொழிலாளர் கொள்கையின்படி டிஜிட்டல் மயமாக்கத்தின்மூலம் தொழிலாளர்களின் கூட்டு பேர உரிமையைச் சிதைத்து தொழிலாளர்களை தங்கள் தொழில்சார்ந்த பிரச்சினைகளுக்குத் தனித்தனியே தீர்வைத் தேடவைக்கிறது. தொழிலாளர்களின் கோரிக்கைகளான அர்த்தமுள்ள மற்றும் சுலபமாக அணுகக்கூடிய ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு, நிரந்தர வேலைவாய்ப்பு, முறைசாரா வேலையை முறைப்படுத்துதல், விலைவாசிக்கேற்ற ஊதியம், பாலின சமத்துவம், பாதுகாப்பான பணியிடங்கள் மற்றும் ஜனநாயக முறையிலான பேச்சுவார்த்தைகள் ஆகியவற்றைப் புறந்தள்ளும் இந்தக் கொள்கை வரைவு ஒட்டுமொத்தமாகத் தங்களுக்குப் படியளக்கும் கார்ப்பரேட் முதலாளிகளின் நலன்களுக்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

பார்ப்பன பாசிசமயமான, 'இந்துத்துவா'க் கொள்கை அடிப்படையில் உருவாக்கப்பட்ட, தொழிலாளர்களுக்கான எந்தவித உரிமையையும், பணிப் பாதுகாப்பையும் வழங்காத ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசின் ஷ்ரம் சக்தி நிதி 2025 என்ற மனுதர்ம அடிப்படையிலான தேசியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை வரைவை ஆரம்பத்திலேயே எதிர்த்து முறியடிக்கவேண்டியது உழைக்கும் மக்களின் கடமையாகும். அதற்குக் கீழிருந்து உழைக்கும் மக்களை ஒன்றிணைத்து பாசிச எதிர்ப்பு தொழிலாளர் முன்னணியையும் மேலிருந்து அனைத்து பாசிச எதிர்ப்பு இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு கட்சிகளை, அமைப்புகளை ஒன்றிணைத்து நாடு தழுவிய அளவில் பாசிச எதிர்ப்பு ஜனநாயக ஐக்கிய முன்னணியையும், பாசிச எதிர்ப்பு ஜனநாயக மக்கள் முன்னணியையும் கட்டி ஆட்சியதிகாரத்திலிருந்து காவி பாசிஸ்டுகளை விரட்டியடிப்பதே தற்போதைய அவசியத் தேவையாகும்.

● மதியழகன்

# “ஜெய் ஆர்எஸ்எஸ் - ஜெய் மோடிஜி!”
# பாசிச பாஜக ஆட்சியில் சர்வம் ஊழல்மயம்!
# கார்ப்பரேட்டுகள் கொண்டாட்டம்!!

கடந்த 2014-ஆம் ஆண்டில் ஊழலுக்கு எதிராக மக்களிடம், குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினரிடையே நிலவிய பொதுக்கருத்தை, மனநிலையைப் பயன்படுத்திக் கொள்ள அன்னாஹசாரே, கார்ப்பரேட் சாமியார் ராம்தேவ் போன்றோரை பின்னிருந்து இயக்கி ஊழல் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்தது ஆர்எஸ்எஸ் தலைமையிலான காவி பாசிச கும்பல். இதன் விளைவாக, ‘ஊழலை ஒழிப்போம்’ என்ற முழக்கத்தை முன் வைத்து 2014-ஆம் ஆண்டில் பாசிச பாஜக ஆட்சியை கைப்பற்றியது.

பாஜகவின் இந்த 10 ஆண்டு கால ஆட்சி கார்ப்பரேட் முதலாளிகளுக்கு அதிலும் குறிப்பாக அதானி மற்றும் அம்பானி போன்ற தேசங்கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கான ஆட்சியாகவே உள்ளது. காடுகள்-மலைகள், விவசாய விளைநிலங்கள், ஆறுகள் - நீர்நிலைகள், கல் - பாறை - மணல், ஆகாயம்-பூமி, இரும்பு-நிலக்கரி, செம்பு-அலுமினியம் முதலிய தாதுப்பொருட்கள், மின்சாரம் - தொலைத்தொடர்பு மற்றும் மக்கள் வாழ்வாதாரங்கள் என நாட்டின் அனைத்து வகையான சொத்துக்களும் அம்பானி- அதானி போன்ற தேசங்கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கு தாரை வார்க்கப்பட்டு வருகின்றன. இந்த பொதுச்சொத்துக்களை - இயற்கை வளங்களை சூறையாட எதையும் செய்யலாம் என்று கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், அரசியல் கொள்ளையர்களுக்கும், ‘ரத்த வெறிப்பிடித்த டிராக்குலாக்களாக’ அலைவதால் ஒவ்வொரு நாளும் புதுப்புது ஊழல்கள், மோசடிகள், அதிகார முறைகேடுகள் வெளியே வந்து நாறுகின்றன.

கடமையை மீறுவதற்காக தரப்படும் லஞ்சமும், பொது நிதியை கையாடல் செய்யும் ஊழலும், கீழ்மட்டத்தில் நடக்கும் தவறுகளும், கார்ப்பரேட் முதலாளிகளும், அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கூட்டாக சேர்ந்து லட்சக்கணக்கான கோடிகளை சூறையாடுகின்ற மேல்மட்டத்தில் நடக்கும் தவறுகளும் நாட்டு மக்களிடையே புதிய இயல்பைக் கொண்டு வந்துள்ளது. யாராவது இரட்சகர் வந்து ஊழலை ஒழிக்கமாட்டாரா என்ற மனநிலை மாறி, தற்போது ஊழல் எப்போதும் நடப்பவைதான் என சாதாரணமாக கடந்து செல்லும் மனநிலையை உருவாக்கி விட்டது கார்ப்பரேட்- காவி பாசிச கும்பல்.

### பாசிச பாஜக ஊழலை ஒழிக்கவில்லை!
### சட்டப்பூர்வமாக பாதுகாக்கிறது!

2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பே ஊழல் எதிர்ப்பு என்ற முகமூடியை மாட்டிக்கொண்ட பாசிச பாஜக



ஊழலை ஒழிக்க உருப்படியாக எதுவும் செய்யவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. ஊழலைக் கட்டுப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட லோக்பாலுக்கு உரிய ஆணையர்களை 2019-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை பாசிச பாஜக நியமிக்கவில்லை. 2020 மார்ச் வரை புகார் அளிப்பதற்கான விதிமுறைகளையும் வகுக்கவில்லை. 2023 மார்ச் மாதம் பாராளுமன்ற நிலைக்குழு லோக்பால் சட்டத்தின்படி ஒரு ஊழல் புகாரைக் கூட விசாரிக்கவில்லை என அறிக்கை அளித்தது குறிப்பிடத்தக்கது. இதுவே பாஜக ஊழலை ஒழிக்க ஒன்றையும் புடுங்கவில்லை என்பதற்கு சான்று.



நாட்டில் புழங்கும் கருப்பு பணத்தை ஒழிப்பதன் மூலம் ஊழலையும், தீவிரவாதத்திற்கு செல்லும் பணத்தையும் தடுத்து நிறுத்த பணமதிப்பழிப்பு நடவடிக்கையைக் கொண்டு வந்ததாகப் பீற்றிக் கொண்டார் ‘உத்தமர்’ மோடி. ஆனால், இந்த நடவடிக்கை மோடியே கூறிய மூன்றரை இலட்சம் கோடி ரூபாய் கருப்பு பணத்தை வெள்ளையாக்குவதற்கு தான் பயன்பட்டது. அதாவது, கருப்பு பண முதலைகளிடம் இருந்த லட்சக்கணக்கான கோடி கருப்பு பணத்தை வெள்ளையாக மாற்றிக்கொள்ள சட்டபூர்வ வழியை ஏற்படுத்தி கொடுத்தார் பாசிஸ்ட் மோடி என்றால் மிகையல்ல.

2018-ஆம் ஆண்டில் ஊழல் தடுப்புச்சட்டத்தில் 17(a) உட்பிரிவிவைச் சேர்த்து திருத்தியது பாசிச பாஜக. இதன் மூலம் அரசால் பணி அமர்த்தப்பட்டவர்கள் மீது ஊழல் புகார் வந்தால் அரசின் அனுமதி பெற்ற பின் தான் விசாரணையே துவக்கப்பட வேண்டும் என்று திருத்தம் செய்யப்பட்டது. அதுமட்டுமின்றி, தேசிய பாதுகாப்பு மற்றும் அரசின் நிர்வாக ரகசியங்கள் ஆகியவற்றில் முறைகேடுகள் இருந்தால் புகார் அளிக்க முடியாது என ஊழல், கிரிமினல் அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் சட்டரீதியான பாதுகாப்பை உறுதி செய்தது பாசிச மோடி அரசு.

கார்ப்பரேட்டுகளிடம் பெறப்படும் பங்கை சட்டப்பூர்வமாக பெறுவதற்கு 2018 ஆம் ஆண்டில் தேர்தல் நிதி பத்திரத் திட்டத்தை கொண்டு வந்தது பாசிச பாஜக. இந்தத் திட்டத்தை செயல்படுத்த பல சட்டத்திருத்தங்களை செய்தது. குறிப்பாக, அரசியல் கட்சிகள் வெளிநாட்டு நிறுவனங்களிடம் தேர்தல் நிதி பெறக்கூடாது என்பதே சட்டம். ஆனால் பாசிச பாஜக வெளிநாட்டு நிறுவனங்களிடம் தேர்தல் நிதி பெறுவதற்காக வெளிநாட்டு நிதியுதவி ஒழுங்குமுறை சட்டத்தில் (Foreign Contribution Regulation Act, 2010) திருத்தம் செய்து வெளிநாட்டு நிறுவனங்களும் தேர்தல் நிதி அளிக்கலாம் என்று மாற்றியது.

அதேபோல், நிறுவனங்கள் சட்டத்தில் (Companies Act, 2013), ஒரு நிறுவனம் நன்கொடையாக தரும் தேர்தல் நிதி அதன் லாபத்தில் இருந்து அதிகபட்சமாக 7.5 சதவிகிதம் தரலாம் என இருந்த சட்டத்தை மாற்றி, யார் வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் தேர்தல் நிதியாக அளிக்கலாம் என திருத்தம் செய்து கார்ப்பரேட் கொள்ளையில் தனது பங்கை தேர்தல் நிதி பத்திரங்களாக பெற்று ஊழலை சட்டபூர்வமாக மாற்றியது.

இவ்வாறு சட்டத்திருத்தங்கள் மூலமே ஊழலை சட்டபூர்வமாக மாற்றிய பின்பும், எதிர்கட்சிகள் செய்யும் ஊழலை ஒழிக்க வந்த இரட்சகர் என தனது 56 இன்ச் மார்பை நிமிர்த்தி பேசி வாய்ச் சவடால் அடிக்கிறார் மோடி.

### எதிர்க்கட்சியில் இருந்தால் ஊழல்வாதி! பாஜகவில் இணைந்தால் உத்தமர்!

ஊழல் ஒழிப்பு என்ற பெயரில், பாசிச பாஜக கும்பல் தனது எதிர்கட்சிகளை அடக்கி ஒடுக்கவும், தனக்கு எதிராக பேசும் அரசியல் மற்றும் சித்தாந்த தலைவர்களை ஒழித்துக்கட்டுவதற்காகவும் சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி வருகிறது. இந்த ரெய்டுகள் மூலம் பாஜகவிலோ அல்லது அதனுடைய கூட்டணி கட்சிகளிலோ இணையுமாறு எதிர்க்கட்சி தலைவர்கள் மிரட்டப்படுகிறார்கள். பா.ஜ.க-வில் அல்லது பா.ஜ.க கூட்டணியில் இணைந்த தலைவர்களின் வழக்குகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டு வருகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் பாஜக-வில் இணைந்துள்ள 21 எதிர்க்கட்சி தலைவர்களின் ஊழல் வழக்குகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

மகராஷ்டிராவில் பாசன ஊழல் செய்த அஜித் பவார், சாரதா குழும நிதி ஊழல் செய்த ஹிமந்த பிஸ்வா சர்மா, வியாபம் ஊழல் செய்த சிவராஜ்சிங் சௌகான், குடிசை

மறுவாழ்வுத் திட்டம் தொடர்பான நில ஒப்பந்த மோசடியில் சிக்கிய பாபா சித்திக், அன்னிய செலாவணி மேலாண்மைச் சட்டத்தை (ஃபெமா) மீறியதாக அமலாக்கத் துறை யாமினி ஜாதவ், நாரதா ஸ்டிங் ஆபரேஷன் முறைகேடுகளில் சிக்கிய சுவேந்து அதிகாரி, நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடுகளில் சிக்கிய நவீன் ஜிண்டால் உள்ளிட்ட ஊழல்வாதிகளை தனது கட்சியிலும் தனது கூட்டணி கட்சியிலும் சேர்த்துக் கொண்டு அவர்களை உத்தமர்களாக மாற்றியது பாசிச பாஜக. அதாவது ஊழலை ஒழிப்பதல்ல பாஜகவின் திட்டம். ஊழல் செய்பவர்களை தனது கட்சியில் சேர்த்துக் கொண்டு ஊழல் வழக்குகளை கிடப்பில் போட்டு விடுவதே பாஜகவில் ஊழல் ஒழிப்பு.

## எதிர்க்கட்சிகளின் ஊழலுக்கு எதிர்ப்பு! அதானி உள்ளிட்ட தேசங்கடந்த தரகு முதலாளிகளின் ஊழலுக்கு பாதுகாப்பு!

P.M. கேர் நிதி, தேர்தல் பத்திர ஊழல், வியாபம் ஊழல் என BJP கட்சியினர் செய்த ஊழலுக்கு ஒரு பட்டியல் இருந்தால், இன்னொரு புறம் ரபேல் ஊழல், நிலக்கரி ஊழல், பங்கு சந்தை ஊழல், இல்லாத கம்பெனி பெயரில் பொய் கணக்கு காட்டுவது, தொலைத்தொடர்பு ஊழல், வங்கிகளில் செய்துள்ள மோசடி - வரி ஏய்ப்பு என நீள்கிறது பாஜக - கார்ப்பரேட் ஊழல் பட்டியல். பாஜகவின் 10 ஆண்டுகால ஆட்சியில் விஜய் மல்லையா, நீரவ்மோடி, முகுல் சோக்ஷி போன்ற பெரும் முதலாளிகள் அரசின் வங்கிகளில் பணத்தை சுருட்டி விட்டு பாதுகாப்பாக வெளிநாடுகளில் பதுங்கி விட்டார்கள். அவர்களுக்கு எதிராக சுண்டு விரலைக் கூட அசைக்கவில்லை என்பதை விட விஜய் மல்லையாவுக்கு நிதி அமைச்சர் அருண் ஜெட்லி டாட்டா காட்டித்தான் லண்டனுக்கு விமானத்தில் அனுப்பி வைத்தார் என்பதும் பத்திரிக்கைகளில் அம்பலமானது. பஞ்சாப் நேஷனல் வங்கியில் 13,000 கோடி ரூபாய் ஆட்டையை போட்டு லண்டன் சென்ற முகுல் சோக்ஷி லண்டன் நாட்டின் குடியுரிமை கோரிய போது மோடி அரசு அவருக்கு நற்சான்று அளித்து குடியுரிமைக்கு ஏற்பாடும் செய்தது.

அதேபோல், பங்கு முறைகேடு, பங்கின் மதிப்பை மோசடியாக உயர்த்திக் காட்டி அதிக கடன் பெறுதல், போலி நிறுவனங்கள் துவங்கி வரி ஏய்ப்பு செய்தல் உள்ளிட்ட மோசடிகளில் அதானி நிறுவனம் ஈடுபட்டுள்ளதாகவும், அதானியின் பங்குச்சந்தை மோசடிகளை விசாரித்து வரும் ஒன்றிய அரசு நிறுவனமான செபி-யின் தலைவர் அதானி குழும போலி நிறுவனங்களில் பங்குகள் வைத்துள்ளதையும் ஹிண்டன்பர்க் ஆய்வறிக்கைகள் அடுத்தடுத்து அம்பலப்படுத்தியது. ஆனாலும் மோடி அரசு அதானியை பாதுகாத்து வருகிறது.

அமெரிக்க நீதித்துறை, அதானி மற்றும் அவரது கூட்டாளிகள் மீது, இந்திய அரசு அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாகவும், முதலீட்டாளர்களிடம் பொய் சொல்லி நிதி திரட்டியதாகவும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தது. இது தொடர்பாக அமெரிக்கப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் (US SEC) சம்மன் வழங்க முயற்சித்தது. ஆனால் பாசிச மோடி அரசு அதானியை பாதுகாத்து வருவதால் அமெரிக்க நிறுவனத்தால் சம்மன் கூட வழங்க முடியவில்லை என்பதிலிருந்து ஊழல் முதலாளிகளை மோடி அரசு எவ்வளவு சிறப்பாக பாதுகாக்கிறது என்பது தெளிவாகிவிட்டது.

## கார்ப்பரேட்டுகளுக்கு லாபம்! மக்களுக்கு வேலையிழப்பு - விலைவாசி உயர்வு!

ரஷ்ய - உக்ரைன் போரால் ரஷ்யா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் காரணமாக அதன் கச்சா எண்ணெய் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் நெருக்கடியை பயன்படுத்தி ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கிய வகையில் இந்தியாவுக்கு 2022 மே மாதம் முதல் 2025 மே மாதம் வரை 17.2 மில்லியன் டாலர்( ரூ.1,49,989 கோடி) இலாபம் ஏற்பட்டுள்ளதாம். இந்த இலாபத்தை இந்தியன் ஆயில் கார்ப்பரேசனுடன் இணைந்த அதானி போர்ட்ஸ், அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் ரஷ்ய ரோஸ்நெப்ட் இயக்கும் நயாரா எனர்ஜி ஆகிய நிறுவனங்கள் பெற்றனர்.

ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கியதால், சர்வதேச எதிர்ப்பை மீறியதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இந்திய ஏற்றுமதிகளில் கூடுதலாக 25% வரியை விதித்தார், இது நமது ஜவுளி, ரத்தினங்கள், கம்பளங்கள் மற்றும் மருந்து ஏற்றுமதிகளை கடுமையாக முடக்கியது. இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையிழப்பை ஏற்படுத்தியது. மறுபுறம், குறைந்த விலையில் வாங்கிய கச்சா எண்ணெய் கொண்டு மக்களுக்கு மலிவான விலையில் பெட்ரோல் - டீசல் வழங்கப்படவில்லை. கார்ப்பரேட்டுகள் லாபத்திற்காக பெட்ரோல் மற்றும் டீசல் விலை நாளுக்கு நாள் அதிகரித்து விலைவாசி உயர்வு மக்கள் தலையிலேயே கட்டப்பட்டது.

மக்களுக்கு மேம்பட்ட சிகிச்சையை அளிக்கப்பட வேண்டும் என ஆரவாரத்துடன் 2018 ஆம் ஆண்டு பாசிச மோடி அரசால் துவங்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆயுஷ்மான் பாரத் திட்டம். 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை சுமார் 24.3 கோடி ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீடு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டு சிஏஜி அறிக்கையின்படி, இவற்றில் 7.5 லட்சம் மருத்துவக் காப்பீடு அட்டைகள் ஒரே அலைபேசி எண்ணைக் கொண்டு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இதன் மூலம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக தெரிவித்து மருத்துவ காப்பீட்டில் பல்லாயிரம் கோடிகள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன. அதாவது, மருத்துவ கார்ப்பரேட்டுகள் கொள்ளையடித்துள்ளனர். ஆனால் மக்களுக்கு காப்பீடு பொருந்தவில்லை என அலைக்கழிப்பது, காப்பீடு தொகையை விட அதிக செலவு என கூடுதலாக பணம் பிடுங்குவது, படுக்கையறை வசதிகள் ஏதுமின்றி தரையில் படுக்க வைப்பது, சாதாரண காய்ச்சலுக்கு கூட மருந்துகள் ஏதுமின்றி நோயாளிகளாக வைத்திருப்பது, ஆம்புலன்ஸ் வசதிகள் ஏதுமின்றி நோய்வாய்ப்பட்ட மக்களை நடந்தே செல்ல வைப்பது என மக்களை வாட்டி வதைக்கிறனர்.

நிலக்கரி இறக்குமதியில் தனது போலி இடைத்தரகு நிறுவனங்கள் மூலம் சந்தை விலையை விட இருமடங்கு விலை உயர்வு என பொய்யாக காண்பித்து பல ஆயிரம் கோடிகளை கொள்ளையிட்டும், திட்டமிட்டே மின்சாரத்தை அதிக விலைக்கு மின் விநியோக நிறுவனங்களின் உதவியுடன் மக்களின் தலையில் கட்டியது அதானி நிறுவனம்.

பாரத் மாலா திட்டம், துவாரகா விரைவுப் பாலம் கட்டுமானத் திட்டம், சுங்கச்சாவடி கட்டணங்கள், ஆயுஷ்மான் பாரத் திட்டம், அயோத்யா மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற அமைச்சகத்தின் ஓய்வுத் திட்டம், எச்ஏஎல் விமான வடிவமைப்புத் திட்டம் என 07 திட்டங்களிலும் மெகா ஊழல் செய்து பகற்கொள்ளை அடித்துள்ளதை சிஏஜி அறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. இந்த திட்டங்கள் மூலம் வரும் பாதிப்புகள் அனைத்தும் மக்கள் மீதே திணிக்கப்பட்டுள்ளது. 2015- 2025 கால கட்டத்தில் 16.21 இலட்சம் கோடி ரூபாய் வாராக் கடனாக வங்கிகளால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் கார்ப்பரேட்டுகளுக்கு கொடுத்த கடன்கள். இதுவும் வங்கிகளில் உள்ள மக்கள் சேமிப்பை, மக்களின் வரிப்பணத்தை கார்ப்பரேட்டுகள் சூறையாடியுள்ள கொள்ளையே. இவை சில உதாரணங்கள் மட்டுமே, பாஜகவின் கார்ப்பரேட் சேவைக்காக நடத்தப்படும் கொள்ளையில் கார்ப்பரேட்டுகள் கொள்ளை லாபமும், மக்களுக்கு வாழ்வாதார பறிப்பு - வேலையிழப்பும்- விலைவாசி உயர்வுமே கிடைத்து வருகிறது.

அம்பானி- அதானி உள்ளிட்ட தேசங்கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் சொத்து என்பது நமது நாட்டின் பொதுத்துறைகளையும், இயற்கை வளங்களையும், காட்டு வளங்களையும், கனிம வளங்களையும் உழைக்கும் மக்களின் உழைப்பையும், சேமிப்பையும் பல்வேறு ஊழல்கள் மூலம் கொள்ளையடித்து உருவாக்கப்பட்டதே. இதனை பறிமுதல் செய்து மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே சரியானது.

ஒருவரிடமிருந்து 1000 ரூபாய் திருடு போய்விட்டால் யார் திருடியது என பார்ப்பது மட்டுமல்ல, திருடனை கண்டுபிடித்து தனது பணத்தை மீட்க வேண்டும் என நினைக்கும் நபர்கள், கண்ணுக்குத் தெரியாமல் தங்களது வாழ்வாதாரத்தை சூறையாடி, தங்களின் உழைப்புச் சக்தியை சூறையாடி சொத்து சேர்த்துள்ள கார்ப்பரேட் முதலாளிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்து தங்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என நினைப்பதில்லை.

இதனால் தான் அம்பானி, அதானி உள்ளிட்ட தேசங்கடந்த தரகு முதலாளிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டும் என கூறினாலோ, போராடினாலோ யாருக்கோ சொல்வது போல் நினைக்கின்றனர். கடுமையாக உழைத்து சொத்து சேர்ந்தவர்களின் சொத்தை நாம் பறிக்க வேண்டும் என சொல்லவில்லை. ஊழல் செய்து, இயற்கை வளங்களை கொள்ளையடித்து சேர்க்கப்பட்ட சொத்துக்களை பறிமுதல் செய்து மக்களின் வாழ்வாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாக்க வேண்டும் என்கிறோம். இதனை பாசிச எதிர்ப்பு பொருளாதாரக் கொள்கையாகவும் முன் வைத்துள்ளோம்.

## ஊழலை தீவிரப்படுத்தும் மறுகாலனியாக்க பொருளாதாரமும்! ஊழலை கட்டுப்படுத்தும் சுயசார்பு பொருளாதாரமும்!

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் உள்ளிட்ட மறுகாலனியாக்க பொருளாதார கொள்கை புகுத்தப்பட்ட பின்னர் கடந்த முப்பது ஆண்டுகளில் பங்குச்சந்தை மோசடி தொடங்கி இப்போதைய அதானியின் ஊழல் (முதலீட்டாளர்களிடம் பொய் சொல்லி நிதி திரட்டிய ஊழல்) வரை நூற்றுக்கும் மேற்பட்ட ஊழல்கள் நடந்துள்ளன. தனியார்மயம் என்பதே பொதுச் சொத்துக்களை கார்ப்பரேட் முதலாளிகள் கொள்ளையடிக்க வழங்கப்படும் உரிமம்தான். ஊழல் இல்லாத தனியார்மயம் கிடையாது. அதாவது நூறு கோடி, இருநூறு கோடி என்பதை தாண்டி லட்சக்கணக்கான கோடிகளை சூறையாடும் தன்மையை உருவாக்கியுள்ளது.

மறுகாலனியாக்க பொருளாதாரக் கொள்கையை கடைபிடிக்கும் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஊழல் ஒழிக்க முடியாது. அதேபோல், பாசிச மோடி அரசு ஊழலை சட்டப்பூர்வமாக மாற்றி விட்டதால் இன்றைய சட்டங்களோ அரசமைப்போ ஊழலை தண்டித்து விடப் போவதில்லை.

மறுகாலனியாக்க பொருளாதாரக் கொள்கைகள் ஊழலை அதிகப்படுத்தி இருந்தாலும், லஞ்சம் மற்றும் ஊழல் முதலாளித்துவத்தின் ஒட்டிப் பிறந்த இரட்டை குழந்தைகள். முதலாளித்துவம் நீடிக்கும் வரை லஞ்சமும் ஊழலும் நீடிக்கும். ஊழலற்ற ஆட்சி வேண்டும் எனில் முதலாளித்துவம் வீழ்த்தப்பட வேண்டும். தற்போது இந்தியாவில் நிலவும் கார்ப்பரேட் காவி பாசிச சூழலில் ஜனநாயகத்தை பாதுகாப்பதே முதன்மையானது. ஜனநாயகம் பாதுகாக்கப்பட்ட பிறகு முதலாளித்துவத்தை முற்றிலுமாக வீழ்த்துவதை நோக்கி முன்னேற வேண்டும். அதற்கு முதற்படியாக பாசிசத்தை தூக்கியெறிந்து ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கும் கட்சிகள், அமைப்புகள், ஜனநாயக சக்திகளுடன் குறைந்தபட்ச செயல் திட்டத்தின் கீழ் ஐக்கிய முன்னணி- மக்கள் முன்னணி அமைத்து பாசிசத்தை வீழ்த்தி ஜனநாயகக் கூட்டரசை நிறுவ வேண்டும்.

ஜனநாயகக் கூட்டரசு மூலம் ஊழலை தீவிரப்படுத்தும் மறுகாலனியாக்க பொருளாதாரக் கொள்கையை தூக்கியெறிந்து விட்டு மக்கள் நலன் கொண்ட சுயசார்பு பொருளாதாரத்தை கட்டியமைக்க வேண்டும். தேசங்கடந்த தரகு முதலாளிகளான அம்பானி, அதானி போன்றவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து நாட்டின் பொருளாதாரத் தேவைகளை ஈடுகட்ட வேண்டும். இதன் தொடர்ச்சியாக முதலாளித்துவக் கூறுகளை கட்டுப்படுத்தி புதிய ஜனநாயகப் பொருளாதாரத்தை உருவாக்குவதும் அதன் தொடர்ச்சியாக சோசலிசப் பொருளாதாரத்தை நோக்கி முன்னேற வேண்டும். இது மட்டுமே நிரந்தரமான ஊழலற்ற சமுதாயத்தை அமைக்கும் வழி. வேறு குறுக்கு வழிகள் ஏதுமில்லை.

● தயாளன்



# பாசிச மோடி ஆட்சியில் அதிகரித்தது அந்நிய மூலதனம் மட்டுமல்ல! அடுக்கடுக்கான மனநல நோய்களும்தான்!

இந்தியாவில் சமீப ஆண்டுகளில் மனநல பாதிப்புக்கு ஆளாவோர் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்து வருகிறது. புதிய தாராளவாதக் கொள்கைகள் எனப்படும் மறுகாலனியாக்கக் கொள்கைகள் அமுலாகத் துவங்கிய 1990 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில், 2017 - ல் மனநல பாதிப்புகள் இரு மடங்காக அதிகரித்துள்ளதாக பிரபல மருத்துவ இதழான லேன்செட்(Lancet) ஆய்வு முடிவு ஒன்றை வெளியிட்டது. 2017-ன் கணக்கெடுப்பின்படி இந்தியர்களில் சுமார் 20 கோடி பேருக்கு ஏதோ ஒரு வகையான மனநல பாதிப்பு உள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது. அது உயர்ந்த கணக்கின் அடிப்படையில் இப்போது இந்த எண்ணிக்கை 25 கோடியாக இருக்கக்கூடும்.

இதன்மூலம் இந்தியாவில் 7 பேரில் ஒருவருக்கு பாதிப்பு இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆண்களை விடவும் பெண்களே 2.7 சதவீதம் கூடுதலாக மனநல பாதிப்புகளுக்கு உள்ளாவதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. எனவே இந்த விஷயம் தீவிரமான பரிசீலனைக்கும், கவலைக்கும் உரியதாக உள்ளது. உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மோடி அவ்வப்போது ஆருடம் கூறிவரும் நிலையில், இந்தியாவின் மனநலம் குறித்து வரும் செய்திகள் நம்மை அதிர்ச்சியடைய வைக்கின்றன.

கடந்த 35 ஆண்டுகளில் மனநல பாதிப்புகள் அதிகரித்துக் கொண்டே போவதற்கும் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் உள்ளிட்ட மறுகாலனியாக்க கொள்கைகள் திணிக்கப்பட்டதன் மூலமாக இந்தியாவிற்குள் பாய்ந்த நிதி மூலதனத்திற்கும் நெருக்கமான உறவு உள்ளது என்றே கூற வேண்டும். 90-களில் 97 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த அந்நிய முதலீடு இந்த கால கட்டத்தில் பல்மடங்கு பெருகி 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக பெருக்கெடுத்துள்ளது. இந்த நிதிமூலதனமானது உழைப்பாளி மக்களின் வாழ்க்கையில் பல நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. இதன் மறுபக்கம்தான் உளவியல் நெருக்கடி மற்றும் மனநல நோய்களாகும்.

இந்தியாவில் உளவியல் நெருக்கடிகளுக்கு ஆளாகி ஆண்டுக்கு 2.6 லட்சத்துக்கும் அதிகமானோர் தற்கொலை செய்துக் கொள்கின்றனர். கோவிட் தொற்றின் காரணமாக அரசு ஏற்படுத்திய பொது முடக்கம் 2020 ஆம் ஆண்டில் மிகப்பெரிய அளவில் மனச்சோர்வு மற்றும் பதட்டத்தை அதிகப்படுத்தியது. நமது நாட்டில் நீரிழிவு, இதய நோய்கள் உள்ளிட்ட உடல் சார்ந்த பிரச்சனைகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் உளவியல் சார்ந்த நோய்களுக்கு கொடுக்கப்படுவதில்லை.

## மனநலம் என்பது என்ன?

மனநலம் அல்லது மன ஆரோக்கியம் என்பது ஒரு தனிநபரின் கட்டுப்பாடான உணர்ச்சி, அவரது சமநிலையான உளவியல் மற்றும் சமூக நல்வாழ்வை குறிக்கிறது. இது மக்கள் அன்றாட வாழ்க்கையில் எப்படி சிந்திக்கிறார்கள், உணர்கிறார்கள் மற்றும் சக மனிதர்களுடன் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பற்றிய விடயமாகும். மேலும் எந்தவொரு செயலிலும் முடிவெடுப்பது, மன அழுத்தத்தை கையாள்வது மற்றும் சக உறவுகளை பராமரிப்பது போன்றவற்றிலும் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி மன ஆரோக்கியம் என்பது மக்கள் தங்களது வாழ்க்கையின் அழுத்தங்களை சமாளிக்கவும், தங்களின் திறன்களை உணரவும், நன்றாக கற்றுக் கொள்ளவும், வேலை செய்யவும் சமூகத்திற்கு பங்களிக்கவும் உதவக்கூடிய ஒரு மனநிலையாகும். ஒரு தனி நபரின் மனநல ஆரோக்கியம் என்பது அந்த குடும்பத்தை மட்டுமல்லாது சமூகம் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகியவற்றுக்கும் மிகவும் முக்கியமானது.

## மனநல பாதிப்புக்கான அறிகுறிகள்!

மனநல பாதிப்புக்கான ஆரம்பகட்ட அறிகுறிகள் வெளியில் தெரிவதில்லை. ஆனாலும் அடுத்த கட்டத்தில் நீடித்த மனக்கவலை, பதட்டம், கவனம் செலுத்துவதில் குறைபாடு, குழப்பம், குற்ற உணர்வு, பய உணர்ச்சி, தூங்குவதில் சிரமம், முடிவுகள் எடுப்பதில் மற்றும் உறவுகளை பராமரிப்பதில் பிரச்சனை, செயல்பாடுகளில் ஆர்வமின்மை, எதிலும் நம்பிக்கையின்மை, அதீத கற்பனை, தீவிர மனச்சோர்வு, ஞாபக மறதி, சிந்தனை, கருத்து மற்றும் நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள், பிரமைகள், தற்கொலை எண்ணம் போன்றவை இதன் பல்வேறு வகையான அறிகுறிகளாக வெளிப்படும்.

## மனநல பாதிப்புக்கான காரணங்கள்!

உளவியல் பிரச்சனைகள் குறித்த போதிய விழிப்புணர்வின்மை, வேகமான மற்றும் நவீன வாழ்க்கை

முறை, வேலைவாய்ப்பின்மை, துரிதமான நகரமயமாக்கல், பொருளாதார சமத்துவமின்மை, அதிகரித்து வரும் உறவுச் சிக்கல்கள், கல்வியிலோ அல்லது பணிபுரியும் இடத்திலோ சிறந்து விளங்க வேண்டும் என்ற அழுத்தம், சமூக மற்றும் குடும்ப ஆதரவில் போதாமை, போதைப் பழக்கங்கள் போன்றவை மனநல பாதிப்புகளுக்கு முக்கிய காரணங்களாக விளங்குகின்றன.

மேலும் பெரிய அளவிலான சமூக கலாச்சார மாற்றங்கள், பொருள் ஈட்டுவதில் மற்றும் நுகர்வில் உள்ள வெறி, அறம் சார்ந்த விஷயங்களில் நம்பிக்கை சரிவு போன்றவையும் இதற்கு மூல காரணமாக உள்ளன.

இந்தியாவின் பணியிடங்களில் மாறிவரும் வேலை முறைகள், உட்கார்ந்தே வேலை பார்க்கும் சூழல், உரிய காலத்திற்குள் வேலையை முடித்தாக வேண்டும் என்ற நெருக்கடி ஆகியவையும் மன அழுத்தத்துக்கு காரணமாக அமைகின்றன.

நகரங்களில் வேலைக்காக மேற்கொள்ளப்படும் நீண்ட பயண நேரங்கள், போக்குவரத்து நெரிசலில் உரிய நேரத்தில் வேலைக்கு செல்ல வேண்டும் என்கிற மனநெருக்கடியையும் உருவாக்குகின்றன. ஒழுங்கில்லாத உணவு நேரங்கள் மற்றும் மோசமான தூக்கம் போன்றவை உடலின் வளர்சிதை மாற்றத்தை பலவீனப்படுத்துகின்றன. வாரத்திற்கு ஒருமுறை வேலை நேரம் மாறிவரும் 2 அல்லது 3 ஷிப்ட் முறைகள், குறிப்பாக இரவுப் பணி என்பது தூக்கம், செரிமானம் மற்றும் ஹார்மோன் சுரப்பிகளை கட்டுப்படுத்தும் உடலின் உயிரியல் கடிகாரத்தில் (Circadian rhythm) இயக்க மாறுபாடுகளை ஏற்படுத்தி இதன் ஓட்டத்தை ஸ்தம்பிக்க செய்கின்றன. தூக்கமும் உணவும் ஒழுங்கற்றதாக மாறும் போது உடல் மற்றும் மனதில் பல்வேறு கோளாறுகளை அது ஏற்படுத்துகிறது.

## மன ஆரோக்கியம் குறித்த கள ஆய்வு!

ஆண்டுதோறும் அக்டோபர் 10 அன்று உலக மனநல தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. ஒரு புதிய முயற்சியாக ஜேஎன்யு பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்ட ஆய்வாளரான இஸ்டிகார் அலி, டெல்லியில் இருந்து கேரளாவின் கண்ணூருக்கு மன ஆரோக்கியத்துக்கானப் பயணம்(Ride for mental health) ஒன்றை மேற்கொண்டார்.

சுமார் 3,200 கி.மீட்டர் தூரம் உடைய இந்த மோட்டார் சைக்கிள் பயணத்தை ஒரு விழிப்புணர்வு பிரச்சாரமாக அவர் மேற்கொண்டார். 26 நாட்களுக்கு மேலாக ராஜஸ்தான், குஜராத் மகாராஷ்டிரா, கோவா மற்றும் கர்நாடகா வழியே பயணித்து கேரளாவின் கண்ணூரில் உள்ள வதிஹுடா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வு நிறுவனத்தை சென்றடைந்தார்.

இந்தப் பயணத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பல மாணவர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் குடிமக்களுடன் 30-க்கும் மேற்பட்ட குழு விவாதங்களை நடத்தினார். ஒட்டுமொத்தமாக ஆயிரம் பேருக்கு மேலான நபர்களுடன் அவர் மேற்கொண்ட உரையாடல்களில் இருந்து இந்தியாவில் மனநல பாதிப்புகள் எந்த நிலையில் உள்ளது என்பதை ஒரு ஆய்வாக பதிவு செய்துள்ளார்.

## சமூக ஊடகங்கள் மூலம் வெறுப்பை உற்பத்தி செய்கிறார்கள்!

இந்தியா முழுவதும் பொருளாதார நிலையற்றத் தன்மையும், ஊடகங்களில் பரவும் தவறான தகவல்கள், பொய்ச் செய்திகளும், அரசியல் குறித்தான அச்ச உணர்வும் மக்களை மன அழுத்தத்துக்கு உள்ளாக்குகின்றன என்றும், இப்படியான மன நெருக்கடி இந்தியாவின் மையப் பிரச்சினையாக உள்ளது என்றும் கூறுகிறார். அவர் மேற்கொண்ட இந்த பயணத்தின் ஒவ்வொரு கட்டமும் அரசியல், பொருளாதாரம் மற்றும் தனித்த அடையாளம் போன்றவை இந்தியாவின் மன ஆரோக்கியத்தை எந்த அளவு ஆழமாக பாதிக்கிறது என்பதை புரிந்து கொண்டதாக குறிப்பிடுகிறார்.

மக்கள் சிவில் உரிமைகளுக்கான சங்கத்தினர், "சமூக செயல்பாடு என்பது அனுதாபத்தையும் சகிப்புத் தன்மையையும் கோரும் ஒரு உணர்ச்சிப்பூர்வமான விசயமாக மறு வடிவெடுத்துள்ளது. மேலும் இப்படி நீதிக்காக போராடுகிறவர்கள் தொடர்ச்சியான கண்காணிப்புக்கும், மிரட்டலுக்கும் ஆளாகிறோம்" எனத் தெரிவித்துள்ளனர். அவர் சந்தித்த வேறு சில ஆர்வலர்கள் கூறிய கருத்துகளையும் தொகுத்துக் கூறியுள்ளார்.

"மனநல பாதிப்பு என்பது உண்மையில் ஒரு சமூக கட்டமைப்பு ரீதியான பிரச்சனையாக இருக்கும் நிலையில், நாம் அதை தனிப்பட்ட பிரச்சினையாக அணுகுகிறோம். மக்கள் மத்தியில் நிலவும் துன்பம், துயரம் போன்றவை முதலில் சமூகமயமாக உள்ளது. அதன் பிறகு அது மக்களை உளவியல் ரீதியாக பாதிக்கிறது. நாம் மக்களுடன்தான் வேலை செய்கிறோம். ஆனால் அவர்களுடன் உரையாடுவதில்லை".

"சமூக ஊடகங்கள் நம்மை இணைக்கும் பணியை செய்தாலும் நமது உணர்வுகளை காலி செய்கின்றன. முன்பெல்லாம் மக்கள் மன அழுத்தத்தில் இருந்தது உண்மைதான். ஆனால் இப்போது அது போன்றவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். வேலை இழப்புகள் நடக்கும் போது ஏதாவது ஒரு தொழில் செய்ய மக்கள் கடன் வாங்குகின்றனர். அந்தக் கடன் சுமை அவர்களை மன அழுத்தத்திற்கு ஆளாக்குகிறது".

"முன்பெல்லாம் நாம் நன்றாக வாழ்வதற்காக வேலை செய்தோம். ஆனால் இப்போது உயிர் வாழ்வதற்காகவே வேலை செய்ய வேண்டியுள்ளது. உயிர்வாழ பொருளீட்டுவதே அதிக மன உளைச்சலை உருவாக்கும் நிலை உள்ளது. நமது சமூகத்தில் நாம் மக்களால் சூழப்பட்டுள்ளோம். ஆனால் தனிமையைதான் உணர்கிறோம். முதியோர் இல்லங்களில் இருப்பவர்கள் பார்வையாளர்களின் வருகைக்காக ஏங்குகின்ற நிலை காணப்படுகிறது".

“சமூகத் தனிமை என்பது சமகால இந்தியாவின் மனநிலையாகவே மாறிவிட்டது. மக்கள் நெருக்கமாக வாழ்கிறார்கள். ஆனால் அப்படியாக உணர்வதில்லை. டிஜிட்டல் முறையில் இணைக்கப்பட்டு இருந்தாலும், உணர்வுப்பூர்வமாக தனிமைப்பட்டு இருக்கும் இந்த முரண்பாடு இந்தியாவெங்கும் காணப்படுகிறது. மக்களை ஒன்றிணைக்க வேண்டிய தளங்கள் இப்போது பதட்டம் மற்றும் அவநம்பிக்கையை அதிகரிக்கச் செய்கின்றன”.

சமூக ஊடகங்கள் தகவல்களை தருகின்ற அதே வேளையில் வெறுப்பையும் வளர்க்க உதவுகின்றன. இங்கே வெறுப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. நாம் புதுப் புது தகவல்களை தேடுகிறோம். ஆனால் இறுதியில் வெறுப்புணர்வை தான் பெறுகிறோம். பொருளாதார நிலையற்ற தன்மையும், சமூகம் துண்டாடப்படுவதும், டிஜிட்டல் ஆக்கிரமிப்பும், அரசியலால் உருவாகும் அச்ச உணர்வுகளும் மன ஆரோக்கியத்தில் பாதிப்பை உருவாக்கும் கட்டமைப்பு நெருக்கடியாக ஒருங்கிணைந்துள்ளன என்கிறார் இஸ்டிகார் அலி.

### இங்கே உளவியல் பிரச்சனைகள் எப்படி கையாளப்படுகின்றன?

இந்தியாவைப் பொறுத்தவரை மனநலத்தை பாதுகாப்பதும், மன நோய்களுக்கு உடனடி சிகிச்சை பெறுவதும் மிகவும் குறைவான அளவில்தான் உள்ளது. இதன் விளைவாக சமூகத்தில் மனநல கோளாறுகளின் சுமை அதிகரிக்கும். அதே வேளையில் சிகிச்சைக்கான இடைவெளியும் அதிகமாகிறது. மனநல பாதிப்புகளும் பிற உடலியல் பிரச்சினைகளைப் போன்ற ஒரு நோய்தான் என்பதை ஏற்றுக் கொள்வதில் தயக்கம், அதை அவமானமாகக் கருதுவது போன்றவை சமூக அவலமாக நீடிக்கிறது.

இந்தியாவில் பாரம்பரியமாக குடும்பங்களுக்குள் மனநலம் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களை பராமரிப்பு என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க மற்றும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகும். இது சமூக ரீதியாகவும் மதிப்பு மிக்கதாகவும் பார்க்கப்படுகிறது. பராமரிப்புக்கான நிதிச் சுமை மற்றும் உணர்ச்சி சுமை இருந்த போதிலும், ஏழை மற்றும் நகர்ப்புற குடிசைவாசிகள் கூட மனநலம் பாதிக்கப்பட்டவர்களை தங்கள் குடும்பங்களில் வைத்து பராமரிக்கிறார்கள்.

ஆனால் இத்தகையவர்களை சமூகத்தில் களங்கப்படுத்தும் போக்கும் இருப்பதால் இதற்கு பயந்து, அதாவது எதிர்மறை விளைவுகளைக் கருதி மனநலம் பாதிக்கப்பட்டவர்களை நிராகரிக்கும் போக்கும் நடக்கிறது. குடும்ப கவுரவம், குடும்ப உறுப்பினர்களுக்கான திருமணம் போன்ற காரணங்களைக் கருத்தில் கொண்டும் இப்படி நிகழ்வது உண்டு.

கிராமப்புறங்களில் மனநிலை பாதிப்புகளை பேய் பிடித்துள்ளதாகவும், செய்வினை என்றும் கருதும் மூடநம்பிக்கைகள் இன்றும் தொடர்கின்றன. இதற்காக பேயோட்டிகளிடமும்(?) போலிச் சாமியார்களிடமும் கொட்டி அழுதும் அதனால் உரிய தீர்வு கிடைப்பதில்லை. மனநோயால் பாதிக்கப்பட்டு இருப்பதை மறுக்கும் போக்கும், அதை மறைத்து சிகிச்சை பெறாமல் இருப்பதும், தெரிந்து விட்டால் நம்மை பைத்தியம் என முத்திரை குத்துவார்கள் என அஞ்சும் நிலையும் உள்ளது.

இந்தியாவில் 1.5 லட்சம் பேருக்கு 1 மனநல மருத்துவர் (Phychiarist) என்ற அளவில் மட்டுமே உள்ளனர். நாட்டில் ஒட்டுமொத்தமாக 3,372 மருத்துவ உளவியலாளர்கள் (Phychologist) மட்டுமே இருக்கின்றனர். உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) பரிந்துரைப்படி ஒரு லட்சம் பேருக்கு குறைந்தது 3 மனநல மருத்துவர்கள் தேவை.

நமது நாட்டில் மனநல சிகிச்சைக்கான போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததும், நிபுணர்கள் பற்றாக்குறையும் மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. அரசு மருத்துவமனைகளில் பொது மருத்துவர்களுக்கு மனநலம் குறித்த பயிற்சிகளை இப்போதுதான் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. மனநலப் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வு ஓரளவு அதிகரித்து வந்தாலும் மிகக் குறைவான அளவிலேயே (10-20%) முறையான சிகிச்சையை பெறுகின்றனர்.

சரியான சிகிச்சையை உரிய நேரத்தில் எடுக்காவிட்டால் கல்வியை தொடர முடியாத நிலை, வேலை இழப்பு, சமூகப் புறக்கணிப்பு மற்றும் உடல் ரீதியான பாதிப்புகளும் ஏற்படுகின்றன. இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள், சமூக நிகழ்வுகள் மற்றும் தொலைக்காட்சி விவாதங்கள் நடத்தப்பட வேண்டும். பெங்களூரில் மனநல ஆரோக்கியத்திற்காகவே சிறப்பாக உருவாக்கப்பட்ட தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம் (NIMHANS) போல இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சிறப்பு மனநல மருத்துவமனைகள் நிறுவப்பட வேண்டும்.

மனநல ஆரோக்கியம் என்பதை ஒரு தனிநபர் சார்ந்த விஷயமாக அணுகாமல், கூட்டுப் பொறுப்பாக கருதி செயல்படுத்தப்பட வேண்டும். ஹிட்லரின் மனநிலை கோளாறுதான் பாசிச அரசியலுக்கும், இரண்டாம் உலகப் போருக்கும் வழி வகுத்தது என்பதுதான் வரலாற்று உண்மையாகும். அத்தகைய சீரியசான இந்தப் பிரச்சனை பெரும்பாலும் கணக்கில் கொள்ளாமல் அலட்சியம் செய்யப்படுகிறது.

கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சேவை புரியும் பாசிச மோடி அரசு, மக்கள் எக்கேடு கெட்டாலும் அது குறித்து கவலைப்படப் போவதில்லை. இவர்களை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றிவிட்டு அமையும் ஜனநாயகக் கூட்டரசால்தான் இத்தகைய பிரச்சனைகளை தீர்க்க முடியும். இந்தியாவின் சுயசார்பு பொருளாதார வளர்ச்சிக்கு மிகபெரும் தடையாக உள்ள கார்ப்பரேட் நிதி மூலதன கும்பலுக்கும் முடிவு கட்ட முடியும்.

● அன்புச்செல்வன்

# டெல்லி குண்டு வெடிப்பு:

# பாசிச பாஜக – மோடி கும்பலின் பாதுகாப்புத் தோல்வி!

சென்ற மாதம் 10-ஆம் தேதி நாட்டின் தலைநகரான டெல்லியில் இருக்கும் அதி உயர் பாதுகாப்புப் பகுதியான செங்கோட்டை அருகில் உள்ள மெட்ரோ ரயில் சிக்னலில் நின்றிருந்த கார் ஒன்று, பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. அருகிலுள்ள வாகனங்கள் சில தீப்பற்றி எரிந்தன. இந்த சம்பவத்தில் 13 பேர் உடல் சிதறி கோரமாக உயிரிழந்தனர். 20-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த கொடூர சம்பவம் மொத்த நாட்டு மக்களிடம் பேரதிர்ச்சியையும் பெரும் துயரத்தையும் ஏற்படுத்தியது. கட்சிகள், இயக்கங்கள், ஜனநாயக சக்திகள் என அனைவரும் தங்களது கண்டனங்களைத் தெரிவித்ததுடன், டெல்லி மற்றும் ஒன்றியத்தில் ஆட்சியில் இருக்கும் பாசிச பாஜக அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளையும், அலட்சியத்தையும் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

குறிப்பாக, 'இரும்பு மனிதர் அமித் ஷா மற்றும் 56 இன்ச் மோடியை தாண்டி இந்தியாவுக்குள் எதிரிகளின் துரும்புகூட நுழையாது' என வீர வசனம் பேசினார்கள் பா.ஜ.க-வினர். ஆனால் நாட்டின் உள்துறை, உளவுத்துறை உள்ளிட்ட அரசின் முக்கிய தலைமை அலுவலகங்கள் இருக்கும் இடத்தில் இருந்து சில கிலோ மீட்டர் தொலைவிலும், செங்கோட்டையில் இருந்து வெறும் 150 மீட்டர் தொலைவில் இந்த கார் குண்டு வெடிப்பு நடந்துள்ளது என்பதிலிருந்து பாசிச மோடி அரசின் பாதுகாப்பு நடைமுறைகள் அனைத்தும் கூண்டில் ஏற்றி கேள்விக் கேட்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த பாதுகாப்பு குறைபாடுகள் பற்றி இதுவரை வாயே திறக்கவில்லை பாசிச பாஜக.

### என்.ஐ.ஏ அமைப்பின் அலட்சியமும் கைது நடவடிக்கையும்! பாதிக்கப்படும் பெரும்பான்மை இஸ்லாமியர்கள்!

கார் குண்டு வெடிப்பு நடப்பதற்கு முன்பு அன்றைய தினம் நண்பகலில் ஹரியானாவில் உள்ள அல் ஃபலோ என்ற மருத்துவக் கல்லூரியில் ஜம்மு காஷ்மீர் மற்றும் ஹரியானா காவல் துறையினர் சேர்ந்து நடத்திய தேடுதல் வேட்டையில் ஒரு ஏகே 47 துப்பாக்கியும், 8 குண்டுகள், 360 கிலோ வெடி பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. இது தொடர்பாக மருத்துவர்கள் அதீல் அகமது ராதர், முசாமில் ஷகீல் என்ற இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். இந்த சோதனை நடவடிக்கை நடந்த சில மணி நேரங்களில் டெல்லி கார் குண்டுவெடிப்பு நடந்துள்ளது. வெடிபொருட்கள் கிடைத்துள்ளது என்றவுடன் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்தியும் சோதனைகளை



தீவிரப்படுத்தியும் இருந்தால் குண்டுவெடிப்பை தடுத்து 13 உயிர்களை காப்பாற்றி இருக்க முடியும் இதனை செய்ய தவறிவிட்டது தேசிய புலனாய்வு முகமை (NIA).

குண்டு வெடிப்பு சம்பவம் நடந்த பிறகு சந்தேகத்தின் பேரில் ஹரியானாவின் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பல மருத்துவர்களை தேசிய புலனாய்வு முகமை (NIA) மூலம் கைது செய்யப்பட்டனர். சிலர் விசாரணைக்குப் பின்பு சம்பவத்தில் தொடர்பில்லை என விடுவிக்கப்பட்டும் உள்ளனர். கைது செய்யப்பட்ட உடனே ஊடகங்கள் சம்பந்தப்பட்ட நபர்களை அவரின் குடும்பத்தை தீவிரவாதிகளாக முத்திரை குத்துகிறது. விசாரணையில் குண்டுவெடிப்பில் தொடர்பில்லை என விடுவிக்கப்படும் பொழுது அவர்கள் மீது திணிக்கப்பட்ட தீவிரவாதி எனும் பொய்யாக கட்டியமைக்கப்பட்ட பிம்பம் எளிதில் மறைவதில்லை.

கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகள் என சந்தேகிக்கப்படுபவர்கள் மாதத்திற்கு லட்சக்கணக்கில் சம்பளம் வாங்கும் மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் பிற தொழில் வல்லுநர்கள் என்பது முக்கியமானது. இதனை தனது மதவெறி பிரச்சாரத்திற்கு பயன்படுத்தி வருகின்றன சங் பரிவார கும்பலும் இவர்கள் ஆதரவு ஊடகங்களும். குறிப்பாக, "ஒயிட் காலர் பயங்கரவாதம்" என்ற மோசமான விஷமப் பிரச்சாரத்தை செய்து வருகிறது. இந்த வெறுப்பு பிரச்சாரத்தால் சாதாரண மக்கள் தங்கள் வீட்டின் அருகில் இருக்கும் நன்கு படித்த மற்றும் குடியேறிய இஸ்லாமியர்களை சந்தேகிக்கப்பட வேண்டும் என தூண்டுகிறது. இந்த குண்டுவெடிப்பு மட்டுமல்ல இந்தியாவில் நடந்த பல குண்டு வெடிப்புகளில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு ஆண்டு கணக்கில் சிறையில் வைக்கப்பட்டு பிறகு நிரபராதிகள் என விடுதலை செய்யப்படும் இஸ்லாமியர்கள் சமூகத்தில் வாழ்வை இழந்து

தவிக்கின்றனர். 'பகுத்தறிவு மண்' எனப்படும் தமிழகத்திலும் இதுதான் நிலைமை.

மறுபுறம், பா.ஜ.க. ஆதரவு ஊடகங்கள் இஸ்லாமிய பயங்கரவாதம் தலைதூக்கி விட்டது என இஸ்லாமிய வெறுப்பு பிரச்சாரத்தை கட்டமைத்து வருகின்றன. பாஜக தலைவரான பொன் ராதாகிருஷ்ணன் "குண்டு வெடித்தால் பீகார் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றுவிடும். அப்படியென்றால் காங்கிரஸ் தான் திட்டமிட்டுள்ளதா? ராகுலை கைது செய்ய வேண்டுமா?" என பேசி குண்டுவெடிப்புக்கும் காங்கிரசுக்கும் தொடர்பு இருப்பது போல் பேசியுள்ளார். அஸ்ஸாம் முதல்வர் படித்த இஸ்லாமியர்களும் தீவிரவாதிகளாக உள்ளனர் என இஸ்லாமிய வெறுப்பை கக்கியுள்ளார். இவர்களை அங்கீகரித்து வேடிக்கை பார்க்கும் அதேநேரத்தில் டெல்லி குண்டுவெடிப்பு தொடர்பாக சந்தேகங்கள் கேள்விகளை எழுப்பும் அனைவரும் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இவ்வளவுதான் பாஜக மக்களுக்கு வழங்கியுள்ள கருத்து சுதந்திரம்.

### மக்கள் மீது அக்கறையில்லாத பிரதமர்! கார்ப்பரேட்டுகளுக்கான மோடியின் வெளிநாட்டு சுற்றுப்பயணம்!

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பஹல்காமில் நடந்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பதற்குப் பதிலாக பீகாரில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் பிரதமர் மோடி. தற்போது டெல்லி குண்டு வெடிப்பு சம்பவத்தின் போது பிரதமர் மோடி, பிரதமர் மாளிகையில் இருந்தார். ஆனால் மருத்துவமனைக்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கவில்லை. சம்பவம் நடந்த இடத்திற்கும் செல்லவில்லை. மறுநாள் வெளிநாட்டு சுற்றுப்பயணமாக பூடான் சென்று அங்கிருந்து "கார் குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னணியில் உள்ள சதிகாரர்கள் யாரும் தப்பிக்க முடியாது" என பேசுகிறார்.

குண்டுவெடிப்பால் அப்பாவி மக்கள் உயிரிழந்ததையொட்டி நாடே பேரதிர்ச்சியிலும் வேதனையிலும் இருக்கும் நேரத்தில் நாட்டின் பிரதமரான பாசிஸ்ட் மோடி மக்களுடன் இருந்து துக்கத்தை பகிர்ந்து கொள்ளாமல், எப்போதும் போல் வெளிநாட்டிற்கு சுற்றுப் பயணம் சென்றுவிட்டார் என்பதிலிருந்து மக்கள் மீது துளியும் அக்கறையில்லாத பிரதமராக மோடி உள்ளார் என்பதை துலக்கமாக காட்டிவிட்டது. பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று சந்திக்காமல் மோடி வெளிநாடு சுற்றுப்பயணம் சென்றது மிகப்பெரும் விவாதமாக மாறியதால் வேறு வழியின்றி பூட்டான் சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு மருத்துவமனையில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களை சடங்கிற்காக சந்தித்தார் என்பதே உண்மை.

நாட்டில் பயங்கரவாத தாக்குதல் நடந்த மறுநாள் வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை ரத்து செய்யாமல் அவசர அவசரமாக மோடி பூட்டான் சென்றது கார்ப்பரேட் நலன் சார்ந்தது மட்டுமே. குறிப்பாக, பூட்டானில் நீர் மின் திட்டங்களை உருவாக்குவதற்கும் இயக்குவதற்குமான ஒப்பந்தங்களை அதானி பவர் மற்றும் டாடா பவர் நிறுவனங்களுக்கு பெற்றுத்தரவே பூட்டானுக்கு சென்றார் கார்ப்பரேட் காவலன் மோடி. அதாவது, பூட்டானின் ட்ருக் கிரீன் பவர் கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் அதானி பவர் மற்றும் டாடா பவர் இணைந்து 10,000 மெகாவாட் நீர்மின் திட்டங்களை உருவாக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

மக்கள் குண்டு வெடித்து செத்து மடிந்தாலும் பரவாயில்லை. கார்ப்பரேட் சேவையே முக்கியம். அது எந்த சூழலிலும் தடைபடக்கூடாது என குண்டு வெடித்த மறுநாளே அம்பானி அதானி உள்ளிட்ட தேசம் கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கு சேவை செய்ய கிளம்பிவிட்டார் பாசிஸ்ட் மோடி.

### இந்துத்துவா பயங்கரவாதமும்! இசுலாமிய பயங்கரவாதமும்!

அரச பயங்கரவாதம் மற்றும் இந்து மதவெறி பயங்கரவாதத்தின் எதிர் விளைவுதான் இந்தியாவில் உருவாகியுள்ள பயங்கரவாதங்கள். ஆனால், இசுலாமிய பயங்கரவாதம் முதன்மை பிரச்சனை என பொய் பிரச்சாரத்தை கட்டமைக்கும் வேலையை கடந்த 50 வருடத்திற்கும் மேலாக சங்கப் பரிவாரங்களும் ஆளும் வர்க்கங்களும் தொடர்ந்து செய்து வருகின்றனர். எனினும் குண்டு யார் வைத்தார் என்று தேசவெறி ஊடகங்கள் சந்தேகமில்லாமல் எழுப்பும் இலக்குகளைத் தாண்டி பல குண்டுவெடிப்புகள் இந்து மதவெறி அமைப்புகளாலும் நடத்தப்பட்டிருக்கின்றன. இதனால் ஜிகாதி பயங்கரவாதம் இல்லை என்பதல்ல. ஆனால் எந்த குண்டு வெடித்தாலும், எந்த ஆதாரமும் இல்லாமல் உடனடியாக கைகாட்டப்படுபவை இசுலாமிய தீவிரவாத இயக்கங்கள்தான்.

இந்து மதவெறியர்களைப் பொறுத்தவரை இந்த குண்டு வெடிப்பு அவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம். பாசிச பாஜகவின் 10 ஆண்டு கால ஆட்சியில் தோல்வியை மறைத்து இந்து மத வெறியையும் தேச வெறியையும் தீவிரமாக்கி அதிகாரத்தை தக்க வைக்கவும், இந்துத்துவா பயங்கரவாதத்தையும் மேலும் பரவலாக்க முயற்சிப்பார்கள்.

இந்த குண்டு வெடிப்பை நாம் கண்டனம் செய்கிறோம். இது யார் வைத்திருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. அப்பாவி மக்களின் உயிரைப் பணயம் வைத்து இலட்சியம் பேசுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் அந்த உரிமையை வைத்துக் கொண்டுதான் இந்திய அரசு காஷ்மீரிலும், வடகிழக்கிலும், இந்துமத வெறியர்கள் குஜராத், முசாபர்நகர், மஹாராஷ்டிரா உள்ளிட்ட வட மாநிலங்களிலும் மக்கள் மீது குறிப்பாக சிறுபான்மையினர் மீது பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். இதனை தென் இந்தியாவிலும் நீட்டிக்க பல வழிகளில் தொடர்ந்து முயற்சித்து வருகிறார்கள். இந்திய ஒன்றிய அரசும், ஆர்.எஸ்.எஸ்- பாஜகவும் உருவாக்கியுள்ள இந்த நிறுவன பயங்கவரவாதத்தை வேரறுக்காமல் டெல்லி மட்டுமல்ல எந்த குண்டு வெடிப்புகளையும் நிறுத்த முடியாது.

● இரணியன்

# லடாக் மாநில மக்களின் போராட்டம்:
# தன்னாட்சி உரிமையே தீர்வு!

2025 நவம்பர் மாதம் 17 ஆம் தேதி லடாக்கில் உள்ள சமூக, அரசியல் மற்றும் மதக் குழுக்கள் லே அபெக்ஸ் பாடி (Leh Apex Body) என்ற கூட்டமைப்பின் கீழ் லடாக்கிற்கு மாநில அந்தஸ்து மற்றும் அரசியல் அமைப்பு சட்டத்தின் ஆறாவது அட்டவணையை அமல்படுத்த வலியுறுத்தி உள்துறை அமைச்சகத்திடம் 29 பக்க வரைவு முன்மொழிவை சமர்ப்பித்துள்ளனர். இந்த முன்மொழிவில் காலநிலை ஆர்வலர் சோனம் வாங்சுக் உட்பட தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள லடாக் உள்ளூர்வாசிகளை விடுவிக்கவும் கோரியுள்ளனர்.

அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு செப்டம்பர் மாதத்தில் லே அபெக்ஸ் பாடி கூட்டமைப்பு மாநில அந்தஸ்து கேட்டு நடத்திய போராட்டத்தில், போராட்டக்காரர்கள் மீது போலீசு நடத்திய தாக்குதலில் நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டு 50-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இந்தப் போராட்டத்தில் லடாக் பி.ஜே.பி அலுவலகம் மற்றும் மலை பகுதி மேம்பாட்டு ஆணைய அலுவலகம் தீ வைக்கப்பட்டது. இதனால் 48 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். முன்னணியாளர்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டனர்

மாநில அந்தஸ்து கோரிக்கைக்காக லடாக் பகுதியில் உள்ள புத்த மதத்தினர் மற்றும் இஸ்லாமியர்கள் இணைந்து செயல்பட்டுள்ளனர். லடாக் வரலாற்றில் முதன்முறையாக ஒன்றிணைந்து போராடி வருகிறார்கள். குறிப்பாக, புத்த மதத்தை பின்பற்றும் மத குழுக்கள் 'ஏபிஏ' (APA) என்று ஒரு பிரிவினரும், இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கும் பிரிவினர்களை பிரதிநிதித் துவப்படுத்தும் 'கேடிஏ' (KDA) என மற்றொரு பிரிவினரும் இணைந்து லே அபெக்ஸ் பாடி என்ற மக்கள் கூட்டமைப்பை உருவாக்கி லடாக்கிற்கு மாநில அந்தஸ்து வேண்டும் என்கிற கோரிக்கையை எழுப்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### லடாக் மக்களின் நியாயமான கோரிக்கையும்!
### பாஜகவின் ஜனநாயகமற்ற நடவடிக்கையும்!

2019 ஆம் ஆண்டில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சிறப்புத் தகுதியை பறித்து, பிரிவு 370 -ஐ ரத்து செய்த பாசிச மோடி அரசு, காஷ்மீர் மாநிலத்தை ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாகவும் துண்டாடியது. இதில் லடாக் பகுதிக்கு தனி சட்டமன்றமோ, ஏனைய தகுதிகளையோ மோடி அரசு வழங்கவில்லை.

லடாக் இமயமலைப் பகுதியின் நொறுங்கு பாறைகளை அதிக அளவிலும், பிரத்தியேக பருவச்சூழலை கொண்ட பகுதி. இந்த நிலைமைகளுக்கு ஏற்ப வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க மோடி அரசு மறுத்து வருகிறது. குறிப்பாக, நூற்றாண்டுகளாக நீர் போன்ற பற்றாக்குறையான வளங்களை கையாள்வதற்கு விதிமுறைகள் உருவாக்கி வைத்திருந்தன. மாநிலம் பிரிக்கப்பட்ட பிறகு நூறு ஆண்டுகளாக கடைபிடித்து வந்த விதிமுறைகள் தூக்கி எறியப்பட்டு ஒன்றிய அரசின் அதிகாரிகளால் முடிவு செய்வது என மாற்றப்பட்டது.

மறுபுறம், யூனியன் பிரதேசமாக லடாக் மாற்றப்பட்டதால் வேலைவாய்ப்புகள், நிலத்தின் மீதான உரிமை மற்றும் பாதுகாப்பு உள்ளிட்டவை குறைந்து வருவதை தங்களது சொந்த நடைமுறை அனுபவத்தில் மக்கள் உணர்ந்து மாநில அந்தஸ்து வேண்டும் என கோருகின்றனர்.

அதேபோல், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு என ஒன்றிய அரசு கொண்டுவரும் திட்டங்கள் கார்ப்பரேட் நலன் சார்ந்த திட்டங்களாகவே உள்ளன. இதற்காகவே மலையக வளர்ச்சி குழுவில் (Hills Development Council) பாஜக தங்களது கட்சி ஆட்களை நிரப்பி, கார்ப்பரேட் கொள்ளையை தீவிரப்படுத்தி லடாக் வளங்களை சூறையாடி வருகின்றன. முதலாளித்துவ வடிவிலான சட்டமன்றம் கூட இல்லாமல் நேரடியாக ஒன்றிய அரசு கார்ப்பரேட் நலன் சார்ந்த திட்டங்களை அமல்படுத்துவதும் இயற்கை வளங்களை கொள்ளை அடிப்பதும் தங்களது நிலம் பறிக்கப்படுவதாக உணர்ந்து அரசியலமைப்புச் சட்டத்தின் அட்டவணை-06 மூலம் தங்களது இயற்கை வளங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் என கருதுகின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால், மாநிலம் இரண்டாக பிரிக்கப்பட்ட போது, மகிழ்ச்சி அடைந்த லடாக் மக்கள், தங்களது அரசியல் உரிமைகளும் இருந்த அரை குறை அதிகாரப் பகிர்வும் பறி போனதை உணர்ந்து மாநில அந்தஸ்து மற்றும் ஆறாவது பிரிவின் பாதுகாப்பு, வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு மற்றும் அதிகார பகிர்வு ஆகிய நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து 2020 ஆம் ஆண்டு முதல் போராடி வருகின்றனர். லடாக் மக்களின் நியாயமான கோரிக்கையை தீர்ப்பதற்கு பாசிச பாஜக அரசு எவ்விதமான ஜனநாயக பூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

மாறாக, போராட்டங்கள் தீவிரமடையும் போது மட்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து போராட்டத்தை தற்காலிகமாக தள்ளி போடுவதும், பேச்சு வார்த்தையில் அளித்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்தாமல் அலைக்கழிப்பது என 05 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்த மோசடித்தனத்தை சாணக்கியத்தனம் என பெருமை பீற்றிக் கொள்கின்றன சங்பரிவார கும்பல்.

### போராட்டம் தீவிரமடைந்ததற்கான காரணங்களும்!
### பாஜகவின் பொய்யான தகவல்களும்!

போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்ய பேச்சு வார்த்தைக்கு என ஒன்றிய அரசு அமைத்த உயர்நிலை

குழுவின் மூலம் எந்த முன்னேற்றமும் இல்லை என்பதால் கடந்த மார்ச் மாதம் லடாக் மக்கள் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை டெல்லியில் சந்தித்தனர். பேச்சுவார்த்தைக்கு அனுப்பப்பட்ட குழு மற்றும் அதன் நடவடிக்கையில் எந்த பெரிய முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும், லடாக்குக்கு மாநில அந்தஸ்து அல்லது இந்திய அரசியல் அமைப்பு அட்டவணை 6-ல் கொடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு அம்சங்கள் வழங்க வேண்டும் என்றும் அந்த குழு அமித்ஷாவிடம் வலியுறுத்தியது. ஆனால் மக்களின் கோரிக்கைகளை அமித்ஷா நிராகரித்து விட்டதால் வேறுவழியின்றி மாநில அந்தஸ்து கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை பிரபல சூழலியல் ஆர்வலர் சோனம் வாங்சுக் மற்றும் அவருடன் சேர்ந்து 14 பேர் முன்னெடுத்தனர். 10 நாட்களுக்கும் மேலாக இவர்கள் உண்ணாவிரதம் இருந்ததால் உடல்நிலை மோசமாக பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

போராட்டக்குழுவினர் உண்ணாவிரதம் இருக்கும் போது பேச்சுவார்த்தைக்கு அழைக்காத பாசிச பாஜக அரசு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னரும் பேச்சுவார்த்தைக்கு வராமல் பேச்சுவார்த்தைக்கான தேதியை மட்டும் அறிவித்தது. ஒன்றிய அரசு கோரிக்கைகள் நிறைவேற்ற மறுத்ததாலும், உண்ணாவிரதம் இருந்த தலைவர்களின் உடல்நிலை பாதிக்கப்பட்டதாலும், பேச்சுவார்த்தை துரிதப்படுத்தாமல் அலைக்கழிப்பது போன்ற காரணங்களால் இளைய தலைமுறையினர் மத்தியில் தாக்கத்தை உருவாக்கியது.

கடந்த ஆறு ஆண்டுகளில் ஒரு கெஜட் அந்தஸ்து வேலை கூட லடாக் மக்களுக்கு வழங்கப்படவில்லை; லடாக் பல்கலைக்கழகங்களில், பி எஃச் டி பட்டம் பெற்ற லடாக் இளைஞர்களை பணியமர்த்த ஒன்றிய அரசு மறுத்து வேறு மாநிலங்களை சார்ந்தோரை நியமிப்பது; மலையக வளர்ச்சி குழுவில் (கவுன்சிலில்) நியமிக்கப்படும் சொற்ப லடாக்கினரும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும் நிலைமை ஆகியவை லடாக் மக்களிடையே குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் கொந்தளிப்பை உருவாக்கி இருந்த நிலையில் மாநில அந்தஸ்து வேலைவாய்ப்பை உருவாக்கும் என்பதால் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இளைஞர்களின் போராட்டம் தீவிரமடைந்ததால் தன் உண்ணாவிரதப் போராட்டத்தை வாங்சுக் முடித்துக் கொண்டார். எனினும் போராட்டத்தில் வன்முறை சம்பவத்துக்கு வாங்சுக் தான் காரணம் என தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது பின்னர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டார். இவரின் தொண்டு நிறுவனத்துக்கான வெளிநாட்டு நிதி பெறும் பதிவையும் ரத்து செய்துள்ளது பாசிச பாஜக.

இந்த உண்மைகளை மறைத்து விட்டு, காங்கிரஸ் கட்சி தூண்டிவிட்ட வன்முறை என்றும், போராட்ட தலைவர்களின் வன்முறை தூண்டும் பேச்சுக்கள் என்றும், நேபாளத்தில் Gen Z போராட்டங்கள் பாணியில் இளைஞர்கள் இங்கு தவறாக வழி நடத்தப்படுகிறார்கள் என்றும் ஒன்றிய பாஜக அரசு பொய்யான தகவலை பரப்பி வருகிறது.

## தேவை மாநில அந்தஸ்து அல்ல! பிராந்திய மற்றும் வட்டார தன்னாட்சி!

யூனியன் பிரதேசம் என்பதால் மாநிலங்களுக்கு இருக்கும் அரைகுறை உரிமைகளும் இல்லாமல் போனதால் லடாக் மக்கள் மாநில அந்தஸ்து கோரிக்கையையும், அரசியலமைப்பு சட்டத்தில் உள்ள அட்டவணை 06 அமல்படுத்தவும் கோருகின்றனர். மாநில உரிமைகள் தொடர்பான கோரிக்கை என்பதால் இதனை ஆதரிக்க வேண்டியது அவசியம் என்றாலும், இன்றைய பாசிச சூழலில், பாஜகவின் ஒன்றிய அதிகார குவிப்பு நடவடிக்கையால் மாநில அந்தஸ்து உள்ள மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு உரிமைகளற்ற அடிமை மாகாணங்களாக மாற்றப்பட்டு வருகின்றன என்பதால் லடாக் மாநில அந்தஸ்து பெற்றாலும் பழைய நிலையே நீடிக்கும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

அதேபோல், அரசியலமைப்பின் பிரிவு 244 இன் கீழ் ஆறாவது அட்டவணை தன்னாட்சி நிர்வாகப் பிரிவுகளை உருவாக்குவதற்கு அனுமதியளிக்கிறது. அதாவது தன்னாட்சி மாவட்ட கவுன்சில்கள் மூலம் நிலம், காடு, நீர், விவசாயம், கிராம சபைகள், சுகாதாரம், காவல், திருமணம், விவாகரத்து, சமூக பழக்கவழக்கங்கள், சுரங்கம் போன்றவற்றில் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை உருவாக்கி கொள்ளலாம். இதனுடன், சட்டமன்றம், நீதித்துறை மற்றும் நிர்வாகத்தில் குறிப்பிட்ட அளவு சுயாட்சியைக் அளிக்கிறது. இந்த நடைமுறை திரிபுரா, மேகாலயா, மிசோரம் மற்றும் அசாம் ஆகிய நான்கு வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பழங்குடிப் பகுதிகளில் உள்ளது. இங்கு அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணை கடைபிடிக்கப்படுகிறது. வடகிழக்கு மாநிலங்கள் உரிமைகளுக்காக ஒன்றிய அரசிடம் இன்று வரை போராடி வருகின்றன என்பதை பார்த்தே வருகிறோம் எனும் போது அரசியலமைப்பு சட்டம் அட்டவணை ஆறு அமுல்படுத்தப்பட்டால் உரிமைகள் கிடைக்கும் என நம்புவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்கு சமம்.

எனவே, மாநிலங்களுக்கு தனி அரசியல் சட்டம், சட்டமியற்றும் தனி பிரதிநிதித்துவ சபை, தனி நீதிமன்றம் உள்ளடக்கிய சுய நிர்வாகம் அமைத்துக் கொள்ளும் அரசியல் அதிகாரம் வழங்கும் பிராந்திய மற்றும் வட்டார தன்னாட்சியே தற்போதைய தேவை. இதனை தற்போதுள்ள பாசிச பாஜக வழங்காது. பாசிச பாஜக அரசை வீழ்த்திய பிறகு அமையும் ஜனநாயகக் கூட்டரசே மாநிலங்களுக்கு வட்டார மற்றும் பிராந்திய தன்னாட்சி மூலம் அரசியல் அதிகாரம் வழங்கும். இந்த அம்சத்தை முன் வைத்து அனைத்து தேசிய இனங்களும் போராடுவதன் மூலமே பாசிச அதிகார ஒன்று குவிப்புக்கு எதிராக மக்களைத் திரட்ட முடியும்.

இந்த கண்ணோட்டத்தில் பாசிச பாஜகவை வீழ்த்துவதற்கு குறைந்தபட்ச செயல் திட்டத்தின் அடிப்படையில் பாசிச எதிர்ப்பு கட்சிகள், ஜனநாயக சக்திகள், ஒன்றிணைந்து ஐக்கிய முன்னணி மற்றும் மக்கள் முன்னணி கட்டியமைத்து செயல்பட்டால் மட்டுமே முடியும். இதற்கான வேலைகளை முன்னெடுப்போம்! லடாக் உள்ளிட்டு அனைத்து மாநிலங்களின் உரிமைகளையும் பாதுகாப்போம்!

● லூர்துசாமி

# நியூயார்க் மேயரான ஜோரான் மம்தானி: சோசலிசத்தின் வெற்றியா?

உலகை தனது ஒற்றைத் துருவ ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு வெறித்தனமாக அலைந்து கொண்டுள்ள அமெரிக்க மேல்நிலை வல்லரசு தன்னுடைய நாட்டில் 'கம்யூனிஸ்டுகளுக்கு இனி இடமில்லை' என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

"உலகில் கம்யூனிசம் தோன்றிய மண்ணிலேயே அதனை குழி தோண்டிப் புதைத்து விட்டோம்" என்று கொக்கரித்து வந்த அமெரிக்காவின் கொடூரமான போர்வெறி-சுரண்டல்களையும், ஆதிக்க வெறியாட்டங்களையும் எதிர்த்து உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் பாட்டாளி வர்க்கம் போராடத் துவங்கி ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கும் மேலாகிவிட்டது.

அமெரிக்கா என்றாலே சொர்க்கபுரி என்ற ஒரு தவறான கருத்தை இந்தியப் பார்ப்பன கும்பல் உருவாக்கியுள்ளது என்ற போதிலும், உண்மையில் அமெரிக்கா ஏழை x பணக்காரார்கள்; கருப்பர்கள் x வெள்ளையர்கள்; அமெரிக்கர்கள் x வெளிநாட்டவர்கள் என்று இரு துருவங்களாக பிரிந்துக் கிடக்கின்றனர் என்பதுதான் மறுக்க முடியாத உண்மையாகும்.

அமெரிக்காவில் நிலவி வருகின்ற வறுமை, ஏற்றத்தாழ்வு, கடுமையான வேலையில்லாத் திண்டாட்டம், கருப்பினத்தவர்களுக்கு எதிரான நிறவெறி, குளக்ஸ் கிளான் போன்ற பாசிஸ்டுகளின் கூடாரமாக மாறியுள்ள நகர்புறங்கள் ஆகியவை அமெரிக்க ஜனநாயகத்தின் உண்மை முகத்தை காட்டியுள்ளது. அந்த நாட்டின் பூர்வகுடி மக்களுக்கும், குடியேறிய மக்களுக்கும் எதிரான கருத்தாக்கங்களையும், எதிர் சிந்தனைகளையும் உருவாக்குவதில் தற்போது ஆண்டு வரும் பாசிச ட்ரம்ப் ஓரளவு வெற்றி பெற்றிருந்தார்.

## நியூயார்க் நகரின் மேட்டிமைத்தனமும் மக்களின் வாழ்க்கை அவலங்களும்.

அமெரிக்காவின் நியூயார்க் மாகாணத்தின் மேயராக இருந்த எரிக் ஆடம்ஸ் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனால் வேறு வழியின்றி மேயர் பதவியை ராஜினாமா செய்தார். இதனால் நியூயார்க் மேயருக்கான தேர்தல் நவம்பர்-2025-ல் நடந்தது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்றெல்லாம் பீற்றிக் கொள்ளும் அமெரிக்காவில் தனக்கு எதிராக போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகள், அவர்களின் அரசியல் - சித்தாந்தம் ஆகியவற்றின் மீது விமர்சனங்கள் வைப்பது, அதற்கு மாற்றை முன் வைத்து பிரச்சாரம் நடத்துவதை காட்டிலும், உருவ கேலி செய்வது; அவர்களுக்கு தெரிந்த ஆங்கில மற்றும் மொழி அறிவு ஆகியவற்றைப் பற்றி கேலி செய்வது; அவர்களுக்கு உள்ள பலவீனங்களை குத்திக் காட்டுவது என்ற முறையிலேயே 'ஜனநாயகத்தை' பாதுகாத்து வருகின்றனர்.

இதே பாணியில் கடந்த அரை நூற்றாண்டுகளாக பல்வேறு தேர்தல்கள் அமெரிக்காவில் நடந்துள்ள போதிலும் அமெரிக்கா இன்னமும் ஜனநாயகப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருப்பதாக முதலாளித்துவ அறிவு ஜீவிகளும், அரைவேக்காட்டு எழுத்தாளர்களும் தொடர்ச்சியாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

நியூயார்க்கின் புதிய மேயர் ஜோரான் மம்தானி



இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும், இஸ்லாமிய மதத்தை தழுவியவருமான மம்தானி தேர்தலில் நின்ற காலத்தில் இருந்து அவருக்கு எதிரான அவதூறு பிரச்சாரங்களும், வெறுப்பூட்டும் வகையிலான கேலி, கிண்டல்கள் அடங்கிய அவமானப்படுத்தல்களும் முன்னிலை வகித்தன. மம்தானியை எதிர்த்து பிரச்சாரம் செய்த திருவாளர் டிரம்ப் மம்தானி வெற்றி பெற்றால், "நியூயார்க் நகரம் முழுவதும் முழுமையான பொருளாதாரம் மற்றும் சமூக பேரழிவாக மாறும் என்பது எனது வலுவான நம்பிக்கை" என்று தனது ட்ரூத் சோசியல் (*truth social*) எக்ஸ் தளத்தில் கூறியிருந்தார். அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்றும் பீதியைக் கிளப்பினார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் மம்தானி, தனது பரப்புரையில், "இலவச

பேருந்துகள், வாடகை முடக்கம் மற்றும் உலகளாவிய குழந்தை பராமரிப்பு ஆகியவற்றைப் பற்றி உறுதியளித்தார். ஹிந்தி உள்ளிட்டு பன்மொழி பிரச்சாரத்தின் மூலம் நியூயார்க்கர்களை உற்சாகப்படுத்தினார். நகரத்தின் பணக்கார குடியிருப்பாளர்களுக்கு வரி விதிப்பதன் மூலம் ஓரளவுக்கு பொருளாதாரச் சிக்கலை சரிபடுத்த முடியும்'' என்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

குறிப்பாக நியூயார்க்கில் வசிக்கின்ற யூதர்கள் மத்தியிலும், இஸ்லாமிய வெறுப்பாளர்கள் மத்தியிலும் முன்னிலை பெற்று நடக்கின்ற அக்கிரமங்களையும், நியூயார்க் மக்கள் நீண்ட காலமாக அனுபவித்து வருகின்ற கொடுமைகளையும் பற்றிப் பேசினார். ''இந்த நகரத்தில் நான்கில் ஒருவர் என்ற வகையில் வறுமையில் வாடுகின்றனர். சுமார் 5 லட்சம் குழந்தைகள் தினமும் இரவில் பசியோடு உறங்குகின்றனர்'' எனப் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அதுமட்டுமன்றி, தனக்கு எதிராக போட்டியிட்ட ஜனநாயகக் கட்சியின் குவோமோ என்ற வேட்பாளர் பற்றி, ''குவாமோ மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டால், நமது நகரம் இருளில் மூழ்கிவிடும், இவர் நமது அண்டை வீட்டார் பலரை வெளியேற்ற கட்டாயப்படுத்துகிறார். மேலும் உழைக்கும் மக்கள் கண்ணியமான வாழ்க்கையை வாழ முடியாதபடி செய்துள்ளது'' என்று புரூக்ளினில் உள்ள நகர மண்டபத்தில் மம்தானி கூறினார்.

மம்தானிக்கு எதிராக போட்டியிட்ட குவோமோவுக்கு ஹெட்ஜ் நிதி மேலாளர் பில் அக்மேன் உட்பட நியூயார்க்கின் மிக முக்கியமான பில்லியனர்கள், குவோமோவின் பிரச்சாரத்தை ஆதரித்துள்ளனர், சூப்பர் பிஏசிக்கள் எனப்படும் நன்கொடை வாகனங்கள் மூலம் அக்மேன் மொத்தம் $750,000 வழங்கியதாக சிஎன்பிசி செய்தி வெளியிட்டது.

நியூயார்க் நகரத்தின் உழைப்பாளி மக்கள் தாங்கள் குடியிருக்கும் வீடுகளுக்கு சுமார் 3000 டாலர் வாடகையாக செலுத்த வேண்டியுள்ளது. அது மட்டுமில்லாமல் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டுள்ள வேலையில்லா திண்டாட்டம் மற்றும் பண வீக்கம் காரணமாக பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்து இருப்பது ஆகியவை மக்கள் மத்தியில் மிகவும் ஆத்திரத்தை உருவாக்கியிருந்தது. இந்த சூழலை பயன்படுத்திக் கொண்ட மம்தானி இத்தகைய பிரச்சனைகளை தனது தேர்தல் அறிக்கையில் பிரதானமான வாக்குறுதியாக முன்வைத்து பிரச்சாரம் செய்தார்.

இந்தியாவின் மோடி பற்றி பேசும் போது, ''இஸ்ரேலின் நெதன்யாகுவைப் போலவே மோடியும் ஒரு போர்க் குற்றவாளி'' எனத் துணிச்சலுடன் பிரச்சாரம் செய்தார். யூத- சியோனிசத்தை விமர்சித்ததற்காகவும், காசாவில் இஸ்ரேலிய இராணுவத்தின் அட்டூழியங்களைக் கண்டித்ததற்காகவும் அவர் மீது யூத எதிர்ப்பு குற்றம் சாட்டப்பட்டது. ஆரம்பக் கட்டத்தில் பிரபலமாக இருந்த அந்தக் குற்றச்சாட்டு, மிகவும் ஒழுக்கக்கேடாகப் பயன்படுத்தப்பட்டதால், அதுவும் தார்மீக ரீதியாக வலுவிழந்துவிட்டது. நியூயார்க் வாக்காளர்கள் இதைப் புரிந்துக் கொண்டு இந்த வகையானப் பிரச்சாரங்களுக்கு அடிபணிய மறுத்துவிட்டனர்.

இந்தியாவின் மோடி பற்றி பேசும் போது, ''இஸ்ரேலின் நெதன்யாகுவைப் போலவே மோடியும் ஒரு போர்க் குற்றவாளி'' எனத் துணிச்சலுடன் பிரச்சாரம் செய்தார். யூத- சியோனிசத்தை விமர்சித்ததற்காகவும், காசாவில் இஸ்ரேலிய இராணுவத்தின் அட்டூழியங்களைக் கண்டித்ததற்காகவும் அவர் மீது யூத எதிர்ப்பு குற்றம் சாட்டப்பட்டது.

இந்தப் பிரச்சாரங்களின் விளைவாக தேர்தலுக்கு முந்தைய கணிப்பில் ரியல் கிளியர் பாலிடிக்ஸ் என்ற அமைப்பு நடத்திய கருத்துக்கணிப்பில் மந்தானி 45.8% வாக்குகளையும், அவருக்கு எதிராக போட்டியிட்ட குவோமோ 31.1% வாக்குகளையும், குடியரசு கட்சி வேட்பாளர் கர்டிஸ் ஸ்லிவா குறைந்த எண்ணிக்கை கொண்ட வாக்குகளையும் பெறுவார் என்று கணிப்புகள் வெளியாகின.

இவ்வாறு கருத்துகணிப்புகள் வந்தவுடன் ட்ரம்ப் மேலும் ஆத்திரமாகி, ''ஒருவேளை மம்தானி வெற்றி பெற்றால் நீயூயார்க்கிற்கு ஒதுக்குகின்ற நிதியை தர மாட்டோம் என்றும், அடிப்படையான சில தேவைகள் தவிர வளர்ச்சி திட்டங்களுக்கும் அல்லது நெருக்கடிகளுக்கு தருகின்ற நிதியை தரமாட்டோம்'' என்று பகிரங்கமாகவே மிரட்டல் விடுத்தார். இவ்வாறு அவர் செய்த பிரச்சாரம் எல்லாம் மம்தானிக்கு சாதகமாக சென்று சேரவே கடந்த 100 ஆண்டுகளில் இளம் மேயராக மம்தானி வெற்றி பெற்றுள்ளார்.

தன்னுடைய ஆட்சிக் காலத்தில் உலகம் முழுவதும் நடக்கின்ற போர்களை முடிவுக்கு கொண்டு வந்து தன்னை ஒரு சமாதானத்தின் தூதராக அறிவித்துக் கொண்டு, நோபல் பரிசுக்காக காத்துக் கொண்டிருக்கும் டொனால்ட் டிரம்பின் ஆட்சியின் கீழ் நியூயார்க்கில் நடைபெற்ற மேயர் தேர்தலில் ட்ரம்ப் சார்ந்து இருக்கக்கூடிய குடியரசுக் கட்சியின் வேட்பாளரான கர்டிஸ் ஸ்லிவா வெறும் 7% வாக்குகளைப் பெற்று படுதோல்வியை சந்தித்துள்ளார்.

கோடீஸ்வரர்களின் நன்கொடைகள், ஊடகங்கள் உருவாக்கிய சந்தேகம், இஸ்லாமிய வெறுப்பு மற்றும் அவரது சொந்தக் கட்சியான ஜனநாயகக் கட்சியின் தலைமையின் விரோதப் போக்கு ஆகியவற்றிற்கு மத்தியில் மம்தானி வெற்றி பெற்றார். மேயர் தேர்தலில் மம்தானி வெற்றி பெற்றிருப்பதை அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி மிகப்பெரிய சம்பவம் என்றும், வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி என்றும் குறிப்பிட்டுள்ளனர். மம்தானியின் வெற்றி ஒரு தலைமுறை கிளர்ச்சியின் உச்சக்கட்டம் என வர்ணிக்கப்படுகிறது.




அமெரிக்க சமூக அமைப்பு ஜனநாயகத் தன்மைக் கொண்டதாக இருந்தாலும், அதற்கு நிபந்தனையின்றி கீழ்ப்படிய வேண்டும் என்று சொல்லப்படுவதால் இளைஞர்களும் முற்போக்காளர்களும் சோர்வடைந்துவிட்டனர். மாணவர் கடனில் தங்கள் எதிர்காலம் அடமானம் வைக்கப்படுவதையும், வாடகையால் தங்கள் ஊதியம் விழுங்கப்படுவதையும், தார்மீக சமரசத்தை ஞானத்துடன் குழப்பும் அரசியல்வாதிகளால் அவர்களின் இலட்சியங்கள் நிராகரிக்கப்படுவதையும் அவர்கள் கண்டிருக்கிறார்கள். அவர்கள் இனி குறியீட்டு தாராளமயம் அல்லது பகிரப்பட்ட மதிப்புகளின் வெற்று சொற்களஞ்சியத்தில் திருப்தி அடையவில்லை. உண்மையைப் பேசும் மற்றும் அதன்படி செயல்படும் ஒரு அரசியலை அவர்கள் விரும்புகிறார்கள். அவர்களின் எதிர்ப்பில் புதுப்பித்தலின் ஆரம்பம் உள்ளது. இதுவே மம்தானியின் வெற்றியை சாதகமாக்கியுள்ளது.

## மம்தானியின் வெற்றி சோசலிசத்தின் வெற்றியா?

தனது தேர்தல் பிரச்சாரத்தில் சோசலிச ரஷ்யா உருவாகிய காலத்தில் அமெரிக்காவில் முன்னிறுத்தப்பட்ட 'சீவர் சோசலிசம்' என்ற தாராளவாத சோசலிசப் பாதையை முன்வைத்து பிரச்சாரம் செய்த மம்தானி தனது தேர்தல் பரப்புரைகளில் நியூயார்க் மக்கள் சந்தித்த உண்மைச் சிக்கல்களை முன் வைத்தார். இந்த தேர்தலில் மம்தானி முன் வைத்த சீர்திருத்தப் பாணி என்றழைக்கப்படும் 'சீவர் சோசலிசம்' என்றால் என்ன என்பதைப் பற்றியும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

"1890 ஐ அடுத்த சில ஆண்டுகளில் புரட்சி இயக்கத்தில் மார்க்சியம் வெற்றி பெற்ற போது அத்துடன் அந்த சமயத்தில் எக்கனாமிசம் என்று அழைக்கப்படுகின்ற பொருளாதாரவாதம் அல்லது 'ஸ்ட்ரைக்கிசம்' என்ற உருவில் மார்க்சியத்தை இழிவுபடுத்தும், கேலிச்சித்திரமாக்கும் ஒரு போக்கு முளைத்தது. எக்கனாமிசத்தை எதிர்த்த நீண்ட பல ஆண்டுகளின் போராட்டமின்றி இஸ்கிரிஸ்டுகள், குட்டி முதலாளித்துவ லிபரலிசம் என்ற மிதவாதத்துக்கு எதிராகவோ பாட்டாளி மக்களின் தத்துவம் கொள்கை போக்கு ஆகியவற்றின் அடிப்படை ஆதாரங்களை நிலைநாட்டி இருக்க முடியாது" - என்கிறார் தோழர் லெனின்.

சோசலிசத்தை முன்வைத்து செயல்பட்ட ரஷ்யாவிலேயே இந்த நிலைமை என்ற போது அதற்கு நேர் எதிரான பொருளாதார கொள்கைகளை கொண்ட அமெரிக்காவில் 1890 முதல் 1917 வரை இருந்த காலகட்டங்களில் உருவானது தான் இந்த 'சீவர் சோசலிசம்' என்ற சோசலிசப் பாதையாகும்.

அரசியல் ரீதியாக முதலாளித்துவத்தின் மீது விமர்சனங்களை முன்வைத்து அதற்கு மாற்றாக சோசலிசத்தை சித்தாந்த ரீதியாக முன்வைக்கின்ற மார்க்சிய லெனினிச அரசியலுக்கு மாற்றாக மக்களுடைய அன்றாட பாதிப்புகள், அவர்களது பொருளாதாரக் கோரிக்கைகள், அவர்களது வாழ்க்கை நெருக்கடிகள் ஆகியவற்றை முன்வைத்து அதற்கு தீர்வு காண்கின்ற பொருளாதாரவாதக் கண்ணோட்டத்தை தான் இந்த 'சீவர் சோசலிசம்' என்பது முன் வைக்கிறது.

முதலாளித்துவ சொர்க்கம் வீழ்ச்சியடைந்து தேக்க வீக்க பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்ட அமெரிக்காவின் பொருளாதாரம் உருவாக்கிய ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றை ஒட்டி பரவலானது தான் இந்த சீவர் சோசலிசம். இதன் முன்னோடிகளான பெர்லி சாண்டர்ஸ் போன்றவர்கள் 1970-க்கு பிறகு அமெரிக்காவில் ஏற்றத்தாழ்வுகள், சமத்துவமின்மை அதிகரித்து விட்டதாக கூறிக் கொண்டுதான் தேர்தல்களில் போட்டியிட்டனர். அதே பாணியில்தான் தற்போது மம்தானியும் போட்டியிட்டு வென்றுள்ளார் என்றாலும் அவர்களுக்கும் இவருக்கும் உள்ள வேறுபாடு நிலைமைகளை விளக்கிக் கொண்டிருப்பதை காட்டிலும் அதை மாற்றுவதற்கு தன்னால் என்ன முடியும் என்பதை ஒரு திட்டமாக முன்வைத்து பிரச்சாரம் செய்தார் என்பதுதான்.

அமெரிக்காவில் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வு மற்றும் கருப்பினத்தவர்களுக்கு எதிரான வெள்ளை நிறவெறியர்களின் ஆதிக்க வெறியாட்டங்கள், நிதி மூலதன ஏகபோகங்களின் சூறையாடுதல் மற்றும் கொள்ளை ஆகியவற்றிற்கு எதிராக சிறு முனுமுனுப்பு எழுந்தாலும் அதை ஆதரிக்க வேண்டியது சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும். அந்த வகையில் நியூயார்க் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள மம்தானியின் வெற்றி அமெரிக்க மேல்நிலை வல்லரசுக்கும், தற்போதைய அதிபரான ட்ரம்புக்கும் விழுந்த அடிதான் என்பதை மறுப்பதற்கு இல்லை, என்ற போதிலும் மார்க்சிய - லெனினியத்திற்கு விரோதமாக 'சீவர் சோசலிசம்' என்ற பெயரில் பொருளாதார நடவடிக்கைகளையும், பொருளாதார வாக்குறுதிகளையும் முன்வைத்து வெற்றி பெறுவது ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு மேல் தொடர்ச்சியாக தாக்கு பிடிக்க முடியாது என்பதையும், முதலாளித்துவத்திற்கும், தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு மூலதனத்தை வைத்துக்கொண்டு, உபரி மதிப்பை உறிஞ்சுவது; கொள்ளையடிப்பது என்ற வகையில் உருவாகிறது என்ற முரண்பாட்டை தீர்க்க மார்க்சிய - லெனினிய அரசியல்தான் முழுமையான தீர்வு என்பதையும் பிரச்சாரமாக கொண்டுச் செல்வோம்.

● செல்லப்பன்

# தமிழகத்தில் அதிகரித்து வரும் போராட்டங்களும்! திமுக அரசின் கார்ப்பரேட் சார்பும்!

இந்திய ஒன்றியத்தை ஆளும் பாசிச மோடி அரசு கடந்த நவம்பர் 21, 2025 அன்று தொழிலாளர் விரோத சட்டங்களை நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது. ஏற்கனவே ஏட்டளவில் உள்ள சட்டங்களும் மொத்தமாக பறிக்கப்பட்டு, இந்தியத் தொழிலாளி வர்க்கத்தை முதலாளித்துவத்தின் நிரந்தர அடிமைகளாக்கியுள்ளது. இதற்கு எதிராக இந்தியாவில் உள்ள இடதுசாரி தொழிற்சங்கங்களும், புரட்சிகர, ஜனநாயக அமைப்புகளும் அறிக்கைகள் மூலமாக கண்டனத்தை தெரிவித்ததோடு நின்று விடாமல், கடந்த நவம்பர் 26 ஆம் தேதி இந்தியா முழுவதும் புதிய தொழிலாளர் சட்டத்திற்கு எதிரான போராட்டங்களையும் நடத்தியுள்ளார்கள்.

ஒன்றிய மோடி அரசால் அமல்படுத்தப்பட்ட தொழிலாளர் விரோத சட்டத்திற்கு எதிராக தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசிடமிருந்து எதிர்ப்போ அல்லது முதல்வர் ஸ்டாலினிடமிருந்து எந்தவிதமான கண்டனங்களும், குறைந்தபட்ச அறிக்கைகள் கூட வரவில்லை. பெயருக்கு தொழிற்சங்கங்கள் நடத்தும் ஆர்பாட்டங்களில் திமுக தொழிற்சங்கமான எல்பிஃஎப்-ம் கலந்துக் கொண்டது. இதற்கு மாறாக திமுகவின் கார்ப்பரேட் வர்க்க பாசம் தொழிலாளர் விரோதக் கொள்கையை எதிர்ப்பதை தடுத்துள்ளது.

அமலுக்கு வந்துள்ள தொழிலாளர் விரோதச் சட்டங்கள் ஏகாதிபத்திய நிதிமூலதன கும்பல் இந்தியாவில் உள்ள உற்பத்தி சக்திகளை மலிவான விலையில் சுரண்டுவதற்கு ஏற்ப மாற்றப்பட்டதேயொழிய, இது தொழிலாளர்களின் கோரிக்கையல்ல முதலாளிகளின் கோரிக்கை. அதன் காரணமாகவே கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சாதகமாய் உள்ள இச்சட்டத்தொகுப்பை திமுக அரசு எதிர்க்காமல் மௌனம் சாதிக்கிறது. திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கரை ஆண்டுகளில் தொழில்வளர்ச்சி என்ற பெயரில் மாநிலத்தின் வளங்களையும், தொழிலாளர்களின் உழைப்பு சக்தியையும் உள்நாட்டு, பன்னாட்டு கார்ப்பரேட் முதலாளிகளுக்கு திறந்துவிட்டதோடு மட்டுமல்லாமல் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை தொழிற்சங்க உரிமைகளை பறித்து முதலாளிகளுக்கு சாதகமாய் இருந்துள்ளது என்பதை கடந்த காலங்களில் நடந்து வந்துள்ள தொழிலாளர்களின் போராட்டங்களே சாட்சி. 2021 ஆம் ஆண்டு தமிழக மக்கள் திமுக அரசை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியது மக்களுக்கு சேவை செய்வதற்கு தானேயொழிய கார்ப்பரேட்டுகளுக்கு சேவைசெய்வதற்கு அல்ல.

கடந்த அதிமுக ஆட்சியில் பாஜகவின் பினாமி எடப்பாடி, மக்கள் விரோத திட்டங்களை நடைமுறைப்படுத்த முயன்றதால் அதிக அளவில் போராட்டங்கள் தமிழ்நாட்டில் நடைப்பெற்று வரலாறு படைத்தது. அந்த போராட்டங்களில் தன்னையும் இணைத்துக் கொண்டது எதிர்கட்சியாக இருந்த திமுக. நீட் எதிர்ப்பு போராட்டம், ஸ்டெர்லைட் போராட்டம், விவசாயிகள் போராட்டம், சிஏஏ என்.ஆர்.சி போராட்டம் என பல்வேறு மக்கள் போராட்டங்களின் மூலம் அடிமை அதிமுக அரசின் மக்கள் விரோதபோக்கு அம்பலப்படுத்தப்பட்டதாலேயே திமுக ஆட்சிக்கு வரமுடிந்தது. அதாவது அதிமுக அரசின் மீதிருந்த அதிருப்தியும், முற்போக்கு ஜனநாயக அமைப்புகளின் இடைவிடாத மக்கள் போராட்டமும்தான் திமுகவை கடந்த சட்டமன்ற தேர்தலில் வெற்றிபெற வைத்தது.

அதிகாரத்திற்கு வந்த திமுக அதையெல்லாம் மறந்துவிட்டு கார்ப்பரேட் ஆதரவு கொள்கையுடன் பெயரளவிற்கான காவி எதிர்ப்பை மட்டும் பேசிவிட்டு 2026 தேர்தலில் ஆட்சியை பிடித்துவிடலாம் என மனப்பால் குடிக்கிறது. இதனை திமுகவின் சில தலைவர்கள்

போக்குவரத்துத் தொழிலாளர்களின் போராட்டம்



உணர்ந்திருந்தாலும், இலவச அறிவிப்புகள் மூலமும், ஏற்கனவே தமிழ்நாட்டு மக்களிடையே உள்ள பாஜக எதிர்ப்பு மனநிலையை பயன்படுத்தி வென்றுவிடலாம் என்று தேர்தல் வியூகம் வகுக்கிறார்கள். ஆனால் தற்போது நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் தொழிலாளர் போராட்டங்கள் திமுக அரசிற்கு எதிரான மனநிலையை மக்களிடம் உருவாக்கி வருகிறது

## அதிகரிக்கும் தொழிலாளர் போராட்டங்கள்

தமிழ்நாடு போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் சார்பில் பழைய ஓய்வூதிய திட்டம், ஓய்வுப்பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய பணப்பயன்கள் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சிஐடியு மற்றும் ஓய்வுப்பெற்ற நல அமைப்புகள் கடந்த 62 நாட்களாக போராட்டம் நடத்தினர். போக்குவரத்து கழகங்களில் 1.4.2003க்கு பிறகு பணிக்கு சேர்ந்த ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும். ஒப்பந்த நிலுவைத் தொகையை வழங்க வேண்டும், தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்த பணம் உரிய கணக்கில் சேர்க்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தில் 22 மையங்களில் நடைப்பெற்ற காத்திருப்பு போராட்டத்தில் பணியில் உள்ள மற்றும் ஓய்வுப்பெற்ற 2000க்கும் மேற்பட்டோர் பங்குப்பெற்றனர்.

அமைச்சர் சிவசங்கர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் நடந்த பேச்சுவார்த்தை இறுதியில் எடுக்கப்பட்ட முடிவின்படி போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டதேயொழிய கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதிமுக ஆட்சியின் போதும் இந்த போராட்டம் நடைப்பெற்றது. அதிமுக ஆட்சியில் போடப்பட்ட அரசாணைகளை, தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்ட அரசாக திமுக இருந்திருந்தால் ஆட்சிக்கு வந்ததும் திரும்பப் பெற்றிருக்க வேண்டும். அப்படி செய்யாமல் தொழிலாளர்களை வஞ்சிப்பதோடு போக்குவரத்து துறையை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது.

**MRF தொழிலாளர்கள் போராட்டம்:** திருவொற்றியூர் MRF நிறுவனத்தின் தொழிலாளர்கள் கடந்த செப்டம்பர் 11 ஆம் தேதி போராட்டத்தை தொடங்கினர். பணிநிரந்தரம், தொழிலாளர்களின் காப்பீட்டிற்கு முன்கூட்டியே பணம் செலுத்துவது, NAPS தொழிலாளர்களை ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்துவதை நிறுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி 800 தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் 19 நாட்கள் நீடித்தது. MRF நிர்வாகத்திற்கு ஆதரவாக திமுக அரசும் தொழிலாளர் துறையும் செயல்பட்டது. இப்பிரச்சினையில் தலையிட்ட தொழிலாளர் துறை தொழிலாளர்களுக்கு விரோதமாக MRF தொழிலாளர்கள் ஏற்கனவே இருந்த நிலையை தொடர வேண்டும் எனவும், வேலைநிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும் அறிவித்தது. திருவொற்றியூர் மட்டுமல்லாமல், பெரம்பலூர் மற்றும் அரக்கோணத்திலும் MRF நிர்வாகத்தின் தொழிலாளர் விரோத போக்கு தொடர்கிறது.

சாம்சங் நிறுவனத்தில் 40 நாட்கள் நடைப்பெற்ற போராட்டத்தின் பேச்சுவார்த்தைக்கு பிறகு தொழிலாளர்கள் பணிக்கு திரும்பினர். நிர்வாகத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டதாக 27 தொழிலாளர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். ஆறுமாதமாகியும் இதுவரை அவர்களை பணிக்கு எடுத்துக் கொள்ளாமல் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது சாம்சங் நிறுவனம். தொழிற்சங்கம் பல்வேறு போராட்டங்களை நடத்தினாலும் அரசும் தொழிலாளர் துறையும் நிர்வாகத்திற்கு பக்கபலமாய் உள்ளதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் குடும்பம் நிர்கதியற்று நிற்கிறது.

**தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்:** ரிப்பன் மாளிகை வாயில் அருகில் நடைப்பெற்ற தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் தமிழ்நாடு அளவில் பேசுபொருளான சமீப காலத்தில் மிகப்பெரிய போராட்டமாக பார்க்கப்படுகிறது. சுகாதாரப் பணியாளர்களை ராம்கி என்ற தனியார் நிறுவனத்திற்கு வேலைபார்க்க வற்புறுத்தி அவர்களின் வேலை உரிமையை கேள்விக் குறியாக்கியுள்ளது திமுக அரசு. தனியார்மயத்திற்கு எதிரான இந்த போராட்டத்தை 14 ஆம் நாளில் அடக்குமுறை இயந்திரத்தைக் கொண்டு நசுக்கியது திமுக அரசு. அத்தொழிலாளர்கள் இன்று வரை தனியார்மயத்திற்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து வருகிறார்கள்.

**மணலி SRF தொழிலாளர்கள் போராட்டம்:** ஒப்பந்த காலம் முடிந்து 4 ஆண்டுகள் கடந்த பின்பும் தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி சம்பள உயர்வு அளிக்காமல் தொடர்ந்து காலம் தாழ்த்தி வருகிறது நிர்வாகம். அதுமட்டுமில்லாமல் தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. இதனை கண்டித்து SRF மணலி தொழிலாளர்கள் ஒருநாள் பட்டினி போராட்டத்தை நடத்தினார்கள். அதனையடுத்து வேலைநிறுத்த போராட்டத்திற்கும் தயாராகி வருகிறார்கள்.

இவையெல்லாம் தமிழ்நாட்டில் குறிப்பாக தலைநகர் சென்னையில் தாக்கத்தை ஏற்படுத்திய போராட்டங்கள். இவையல்லாமல் தொழில்நகரங்களில் முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராகவும், தொழிற்சங்க உரிமைக்காகவும் அன்றாடம் போராட்டங்கள் நடந்த வண்ணம் உள்ளது. ஆனால் ஆளும் திமுக அரசு முதலாளிகளின் நலனில் இருந்து இந்த போராட்டங்களை அணுகுகிறது. அடிப்படையான தொழிலாளர்கள் சட்டம் போராடும் தொழிலாளர்களுக்கு சாதகமாக இருந்தாலும் தொழில்வளர்ச்சி என்ற பெயரில் தொழிலாளர்களை ஒடுக்குகின்றன அரசின் நிறுவனங்கள்.

சமீபகால தொழிலாளர் போராட்டங்களை திமுகவின் உடன்பிறப்புகள் சகட்டுமேனிக்கு வசைபாடுவதும், போராடும் தொழிலாளர்களையும் அவர்களுக்கு துணைநிற்கும் தொழிற்சங்கங்களையும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானவர்கள் என்று சமூக வலைதளங்களில் எழுதித் தள்ளுகிறார்கள். அதாவது தொழிலாளர்கள் முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக போராடுவது தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என சொல்வதும், அம்பானி, அதானிக்கு எதிராகவும்

நாட்டின் கனிமவள கொள்ளைக்கு எதிராக போராடுபவர்களை நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானவர்கள் என பாசிச மோடி கூறுவதும் ஒரே அளவுகோல் தான். இந்த இடத்தில் இருவருமே கார்ப்பரேட் ஆதரவு என்ற ஒற்றை புள்ளியில் இணைகிறார்கள்.

நாடுநாடாக சென்று தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்து வருகிறார் முதலமைச்சர் ஸ்டாலின். அதுமட்டுமில்லாமல் சென்னையில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்துவதன் மூலமும் புதிய முதலீடுகளை ஈர்க்கிறார்கள். இவையெல்லாம் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கென்றும், புதிய வேலைவாய்ப்புகளை ஈர்ப்பதற்காகவும் என பசப்பு வார்த்தைகளை பேசுகின்றனர் திமுகவினர். ஆனால், உண்மை அதுவல்ல. முதலாளிகள் தமிழ்நாட்டின் கனிமவளங்களை சுரண்டவும், தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி பல்லாயிரம் கோடி சுருட்டவுமே தொழில்துவங்க தமிழ்நாடு அரசு அனுமதிக்கிறது.

உண்மையாகவே தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்ட அரசாக இருந்திருந்தால் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற முதலாளிகளுக்கு அழுத்தம் கொடுத்திருக்கும். அப்படி செய்யாமல் தொழிற்சங்கத்தை மிரட்டுவது, தொழிலாளர்களை மிரட்டுவது என தன்னை கார்ப்பரேட் நல அரசு என நேரடியாகவே காட்டிக்கொள்கிறது திமுக அரசு.

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்கிற மறுகாலனியாக்க கொள்கையின் விளைவால் வாழ்விழந்த தொழிலாளர்களும், மக்களும் போராடத் துவங்கியுள்ளனர். எதிர்காலத்தில் தொழிலாளர்களின் போராட்டங்கள் அதிகரிக்காமல் தடுப்பதற்கு தூய்மைப்பணியாளர்களை ஒடுக்கியது போல் திமுக அரசு, போலீஸ் என்ற அடக்குமுறை இயந்திரத்தை பயன்படுத்தலாம். அதற்காக இத்தகைய சுரண்டல்களை சகித்துக் கொண்டு வாழ வேண்டிய அவசியம் தொழிலாளி வர்க்கத்திற்கு இல்லை. ஆள்வது திமுகவாக இருந்தாலும் சரி, பாஜகவாக இருந்தாலும் சரி தொழிலாளி வர்க்கம் தனது ஒன்றுபட்ட போராட்டத்தினால் மட்டுமே முதலாளித்துவ கொள்ளையர்களிடம் இருந்து நம்மை தற்காத்துக் கொள்ள முடியும். அதற்கேற்ப அனைத்து தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த போராட்டமே தொழிலாளி வர்க்கத்திற்கான பலத்தை உருவாக்கும்.

• மாரிமுத்து

## தமிழ்நாடு ஆளுநர் விவகார உச்சநீதிமன்றத் தீர்ப்பு:

# மாநில உரிமைகள் மீதான ஆர்எஸ்எஸ்-பாஜக பாசிச கும்பலின் தாக்குதலை சட்டப் பூர்வமாக்கும் சதி!

தமிழக ஆளுநர் தொடர்பான வழக்கில், குடியரசுத் தலைவரின் 14 கேள்விகளுக்கு பதிலளித்துள்ளது உச்சநீதிமன்றம். இதில் தமிழக அரசிற்கு உள்ள நன்மை, தீமைகளை பலரும் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பழைய நிலையே நீடிப்பதாக நாம் கருதுகிறோம், அதையே உச்சநீதிமன்றம் தனது பதிலில் தெரிவித்துள்ளது. நீண்ட காலமாக தமிழகத்தில் ஆளுநருக்கும், மாநில அரசிற்குமான மோதல் போக்கு அதிகரித்து வருவதும், இதன் காரணமாக மாநில உரிமைகள் மறுக்கப்படும் நிலையும் சமீப காலமாக நிலவுகிறது.

### ஆளுநர் பதவியும் அதன் வரலாறும்

இந்திய ஒன்றியத்தை ஆளும் கட்சிகளால், மாநிலங்கள் கண்காணிக்கப்படுவதற்கு நியமிக்கப்படும் கங்காணி பதவியே ஆளுநர் என்று கூறலாம். இதனை மாநிலத்தை ஆளும் கட்சிகளுக்கு ஏற்ப இரண்டு வகையாக பார்க்கலாம். ஒன்றியத்தை ஆளக்கூடிய கட்சி எதுவோ அவர்களுக்கு ஏதுவான நபர்களை, சுயமாக செயல்படாமல் அவர்களின் சொல்பேச்சைக் கேட்டு நடக்கும் நபர்களையே மாநில ஆளுநர்களாக நியமிப்பார்கள். மாநில ஆளுநரை நியமிக்கும் பொறுப்பு குடியரசுத் தலைவருக்கு இருந்தாலும், அவர் ஆளும் கட்சியின் பொம்மையாக இருப்பதனால், இவர்கள் எடுப்பது தான் முடிவு. ஒன்றியத்தை ஆளக்கூடிய கட்சியே மாநிலங்களை ஆளும் பட்சத்தில், அந்த இடத்தில் டம்மியாக ஒரு ஆளுநரை நியமிப்பார்கள். அதுவே மாநில கட்சிகள் ஆட்சியில் இருக்கும் மாநிலங்களில் அம்மாநிலத்தை கட்டுப்படுத்தக் கூடிய, மாநில அரசை செயல்படவிடாமல் தொல்லை கொடுக்க கூடிய நபர்களை நியமிப்பது தான் தற்போது வரை வழக்கமாகவே உள்ளது.

வரலாற்று ரீதியாக கவர்னர் பதவி உருவாக்கப்பட்டதை பார்த்தோமானால் 1773-ல் Regulating Act மூலம் இந்தியாவில் முதன்முதலாக Governer Of Bengal என்ற பதவி உருவாக்கப்பட்டது. பிறகு அதுவே இந்தியாவின் கவர்னராக மாற்றப்பட்டதும் நடந்தது. அதே நேரத்தில் தான் மும்பை மற்றும் மதராஸ் மாகாணங்களுக்கும் கவர்னர்கள் நியமிக்கப்பட்டார்கள். பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக 1857-ல் நடந்த கிளர்ச்சிக்கு பிறகு, 1858-இல் பிரிட்டிஷ் அரசின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் இந்தியா சென்ற பின் ஒவ்வொரு மகாணத்திற்கும் ஆளுநர்கள் (கவர்னர்) நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் முழுமையாக பிரிட்டிஷ் அரசின் விருப்பப்படியே செயல்பட்டார்கள். அப்போதும் அவர்கள் ஜனநாயக

முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. 1935 இந்திய சட்டத்தின் படி மாகாணங்களுக்கு சுயாட்சி (விவசாயம், கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் சுயமாக செயல்படும் உரிமை) வழங்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டது. ஆளுநர்களுக்கு சிறப்பு அதிகாரமும் வழங்கப்பட்டது.

ஆனால் ஆளுநர் பதவி அப்போதும் பிரிட்டிஷ் அரசின் ஆதிக்க கருவியாகவே இருந்தது. 1947-ல் இந்தியா பிரிட்டிஷாரிடமிருந்து தரகுமுதலாளிகள் வசம் கைமாறிய பின்பு ஆளுநர் பதவி தேவையா? தேவையில்லையா? என்ற விவாதம் எழுந்தது. அப்போது ஒன்றிய அரசிற்கும் மாநில அரசிற்கும் இணைப்பு பாலமாக ஆளுநர் பதவி தொடர வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், உண்மை அதுவல்ல. இந்தியா, சொல்லிக் கொள்ளப்படும் போலி சுதந்திரத்திற்கு பின்பும் பல்வேறு தேசிய இனங்களின் சிறைக்கூடாரமாகவே தொடர்ந்த காரணத்தால் ஒன்றிய அரசு ஆளுநர் பதவிகளின் மூலம் மாநிலங்களின் உரிமைகளை பறித்து ஒன்றிய அதிகார குவிப்பின் மூலமாக கட்டுப்படுத்துவதற்காகவே அம்முடிவை எடுத்தது.

இந்திய மக்கள் மீது அடக்குமுறையை ஏவுவதற்காக, ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட கொடுமையான சட்டங்கள் அப்படியே தொடர்ந்தது போலவே ஆளுநர் என்ற கங்காணி பதவியும் தொடர்ந்தது. அப்போது ஆட்சியிலிருந்த காங்கிரசும் ஆளுநர் பதவியை ஒழிக்கவில்லை, இப்போது 'புதிய இந்தியா'வை உருவாக்கிக் கொண்டிருக்கும் மத வெறியர்களும் அதனை ஒழித்துக் கட்ட விரும்பவில்லை. ஆளுநர் பதவியை தனக்கு ஏற்றார்போல் பயன்படுத்தி வருகிறார்கள்.

## ஆளுநர் பதவியை தேவையில்லாத ஆணியாக பார்க்கும் தமிழ்நாடு!

இந்தியாவில் மற்ற மாநிலங்களை விட ஆளுநருக்கு எதிரான போராட்டங்கள் தமிழ்நாட்டில் அதிகரித்திருப்பதற்கு, ஒன்றியத்தில் அதிகாரத்தில் இருப்பவர்கள் இங்கே ஆட்சியை பிடிக்க முடியாததுதான் காரணம். "மக்கள் ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுக்காத ஒருவருக்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் இருக்கக் கூடாது" என்றார் சி.என்.அண்ணாதுரை. அதுமட்டுமில்லாமல் "ஆளுநர் பதவி இந்திய ஜனநாயகத்திற்கு தேவையில்லை இது பிரிட்டிஷ் ஆட்சியின் ஒரு சின்னம்" என்றும் கூறினார். இது அண்ணாதுரையின் கருத்தாக மட்டும் இல்லாமல் தமிழ்நாட்டு மக்களின் கருத்தாகவும் இருந்தது. அதனால் தான் ஆளுநருக்கு எதிரான கருத்து இன்று வரை தமிழ்நாட்டில் மேலோங்கியுள்ளது.

1967-க்கு பிறகு தேசிய கட்சியான காங்கிரசோ அல்லது தற்போது வளர்ந்துள்ள கட்சியான பாஜகவோ இதுவரை தமிழ்நாட்டில் அதிகாரத்தை பிடிக்க முடியவில்லை. அதன் காரணமாகவே கொல்லைப்புறம் வழியாக மாநில அதிகாரத்தை கட்டுப்படுத்த நினைக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு தற்போது தொல்லைக் கொடுத்துக் கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ்-ன் ஏஜெண்ட் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு தமிழ்நாடு முதல்முறையாக இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் ஆர்.என்.ரவி போன்று பலரை பார்த்து விட்டார்கள்.

ஒன்றியத்தில் இருப்பது பாசிச கும்பல் என்பதால் அவர்களது காவிபாசிச கொள்கையை திணிப்பதற்கு ஆர்.என்.ரவியை பயன்படுத்தி திருவள்ளுவருக்கு காவி சாயம் பூசுவது, முற்போக்கு கருத்துக்கள் நிறைந்த தமிழ்நாட்டை காவிமயமாக்குவதற்கான முயற்சியில் ஈடுபடுவது, மாநில அரசின் அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்குவது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீது முடிவெடுக்காமல் கிடப்பில் போடுவது உள்ளிட்ட கீழ்தரமான வேலைகளில் ஈடுபட்டு வருகிறது.

இதன் காரணமாக தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசு அரசியலமைப்பின் Article 200-க்கு எதிராக ஆளுநர் ஆர்.என்.ரவி செயல்படுகிறார் என நீதிமன்றத்தில் வாதிட்டது. சென்னை உயர்நீதிமன்றம் 2023 நவம்பர் 10 ஆம் தேதி "ஆளுநர் அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவெடுக்க வேண்டும்" என தெரிவித்தது. தொடர்ந்து உச்சநீதிமன்றம் சென்ற வழக்கில் கடந்த ஏப்ரல் 8 ஆம் தேதி உச்சநீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு, குடியரசு தலைவரும், ஆளுநர்களும் மாநில மசோதாக்களை பரிசீலனைக்காக அரசியல் சாசனத்தின் 200 மற்றும் 201 பிரிவுகளின் கீழ் ஒப்புதல் அளிக்க, நிறுத்தி வைக்க குறிப்பிட்ட கால வரம்புகளை நிர்ணயித்து தீர்ப்பளித்தது.

இது வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பாக பார்க்கப்பட்டாலும் பாசிச கும்பலால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. தீர்ப்பினை அப்போது துணை ஜனாதிபதியாக இருந்த ஜெகதீப் தன்கர் கடுமையாக விமர்சித்தார். இதனையடுத்து தான், இந்த தீர்ப்பின் மீது ஜனாதிபதி திரௌபதி முர்மு 14 கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமைநீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான பெஞ்ச் நவம்பர் 20 அன்று தீர்ப்பளித்தது. அதில் குடியரசு தலைவர் கேட்ட 14 கேள்விகளுக்கும் பதிலளித்தது. அதில் முதல் கேள்வியான இந்திய அரசியலமைப்பின் கீழ் ஒரு மசோதா ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்படும்போது அவருக்கு இருக்கும் சட்ட வாய்ப்புகள் என்ன என்பதற்கு, ஆளுநருக்கு 3 சட்ட வாய்ப்புகள் மட்டுமே உண்டு.

- மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கலாம்
- மசோதாவை குடியரசு தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கலாம்.
- மசோதாவை நிறுத்தி வைக்கலாம். அப்படி நிறுத்தி வைக்கும் போது, அந்த மசோதாவை மீண்டும் சட்டப்பேரவைக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆனால் மசோதாக்களை காலவரையின்றி நிறுத்தி வைக்க ஆளுநர்களுக்கு அதிகாரம் இல்லை. அது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது.

- என மேற்கண்ட பதிலை அளித்துள்ளது. இதை வைத்து

உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு தங்களுக்கு சாதகமாக உள்ளதாக தமிழ்நாடு அரசு கருதுகிறது. ஏற்கனவே வழங்கிய தீர்ப்பை பாதிக்காது என்றும் குடியரசு தலைவர் வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு அளித்தது தீர்ப்போ, உத்தரவோ அல்ல. வழக்கில் தனது கருத்தைத்தான் கூறியுள்ளது. குடியரசுத் தலைவருக்கு ஆலோசனைகளையே சுப்ரீம் கோர்ட் வழங்கி உள்ளது என திமுகவின் எம்பியும் வழக்கறிஞருமான வில்சன் கூறுகிறார்.

ஆனால், கடந்த ஏப்ரல் மாதம் அளித்த தீர்ப்பை கேள்விக்குள்ளாக்கும் வகையில் உச்சநீதிமன்றத்தின் பதில் அமைந்துள்ளதை பார்க்க தவறுகிறார்கள். அதில் குறிப்பாக அரசியல் சாசனத்தின் பிரிவு 200-ன் கீழ் ஆளுநரின் செயல்பாடுகள் பொதுவாக நீதி விசாரணைக்கு உட்பட்டவை கிடையாது. ஆளுநர் எடுக்கும் முடிவை நீதிமன்றம் மறுஆய்வு செய்ய முடியாது. ஆளுநரோ அல்லது குடியரசு தலைவரோ மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் நீண்டகாலம் கிடப்பில் போட்டுவைத்திருந்தால் நீதிமன்றம் குறிப்பிட்ட வரம்பிற்குள் தலையிடும். ஆனால், கடந்த தீர்ப்பின் போது 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தது போல் ஒப்புதல் அளிக்க முடியாது, அதற்கு அதிகாரமில்லை எனவும் பதிலளித்துள்ளது.

கடந்த ஏப்ரலில் அளித்துள்ள தீர்ப்பில் மசோதாக்களுக்கு முடிவெடுக்க காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும் என்றது உச்சநீதிமன்றம். இப்போது அளித்துள்ள பதிலில் உச்சநீதிமன்றம் காலக்கெடு நிர்ணயிக்க முடியாது, அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கான காலக்கெடுவை நீதிமன்றம் நிர்ணயிப்பது பொருத்தமாக இருக்காது எனவும் தெரிவித்துள்ளதன் மூலம் ஏற்கனவே கொடுக்கப்பட்ட தீர்ப்பைவிட மோசமாக கவர்னரின் வரம்பற்ற அதிகாரத்தை நியாயப்படுத்தும் தீர்ப்புதான் இது.

அதேபோல் சட்டப்பிரிவு 200 மற்றும் 201 இன் கீழ் ஆளுநர் மற்றும் ஜனாதிபதியின் முடிவுகள், சட்டம் அமலுக்கு வருவதற்கு முந்தைய கட்டத்தில் நீதித்துறைக்கு உட்பட்டவை அல்ல. ஒரு மசோதா சட்டமாக மாறுவதற்கு முன்பு, எந்த வகையிலும் அதன் உள்ளடக்கங்கள் மீது நீதிமன்றங்கள் நீதித்துறை தீர்ப்பை மேற்கொள்வது அனுமதிக்கபடாது எனவும், அரசியலமைப்பு அதிகாரங்களை பயன்படுத்துவதையும் குடியரசு தலைவர்/ ஆளுநர் உத்தரவுகளையும் பிரிவு 142 இன் கீழ் எந்த வகையிலும் மாற்ற முடியாது என நீதிமன்றம் தனது பதிலில் தெரிவித்திருக்கிறது. உச்சநீதிமன்றத்தின் இந்த பதில்கள் தனித்தனியாக பார்க்கத் தோன்றினாலும் உச்சநீதிமன்றம் குடியரசு தலைவர்/ஆளுநர் விவகாரங்களில் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கத் தேவையில்லை என்று அதன் வாய்வழியாக சொல்ல வைத்துள்ளார்கள் பாசிஸ்டுகள்.

இந்த தீர்ப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள மூத்த வழக்கறிஞரும், சமூக செயற்பாட்டாளருமான பிரசாந்த் பூஷன் ‘‘ஒருகாலத்தில், மாநில சட்டமன்றங்கள் நிறைவேற்றிய மசோதாக்களை ஆளுநர்கள் முடிவில்லாமல் நிலுவையில் வைப்பதைத் தடுக்க, அதற்கான குறிப்பிட்ட காலவரையறையை நிர்ணயித்து, அதனைப் பின்பற்ற வேண்டும் என உச்ச நீதிமன்றத்தின் ஒரு தைரியமான பெஞ்ச் உத்தரவிட்டிருந்தது. ஒன்றிய அரசின் விருப்பத்திற்கு ஒவ்வாத சட்டங்களைத் தடுக்க, சில ஆளுநர்கள் அரசியல் நோக்குடன் அவற்றை நீண்ட காலம் ஒத்திவைக்கின்ற நிலை ஏற்பட்டிருந்தது.

ஆனால் இன்று, உச்ச நீதிமன்றத்தின் ஒரு புதிய அமர்வு அந்த முன்னைய தீர்ப்பை ரத்து செய்து, எந்த வகையிலும் காலவரையறை விதிக்க முடியாது, மேலும் மசோதாவிற்கு ஆளுநர் பதில் அளிக்காவிட்டால் தானாகவே ஒப்புதல் வழங்கப்பட்டதாகக் கருத முடியாது எனத் தீர்ப்பளித்துள்ளது. இது நம் கூட்டாட்சி அமைப்புக்கும் ஜனநாயக மரபுகளுக்கும் பின்னடைவை ஏற்படுத்தும் ஒரு தீர்ப்பாகும்... இவ்வாறு சட்ட அமைப்பு தளர்வாக செயல்படுவதால், ஒன்றிய அரசு நீதித்துறையின் சுயாதீனத்தையும் அமைப்பு சமநிலையையும் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது’’ என எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

உச்ச நீதிமன்றம் முன்பு வழங்கிய தீர்ப்பை ரத்துச் செய்யவைத்து நீதித்துறையை டம்மி செய்த பாசிஸ்டுகள் மாநில கூட்டாட்சி அமைப்பை சிதைக்கும் செயலை தொடர்கிறார்கள். காஷ்மீர், கேரளா, மேற்கு வங்கம், தமிழ்நாடு, கர்நாடகா உள்ளிட்ட எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் கொல்லைப்புற ஆட்சிக்கு முயற்சிக்கின்றனர். காஷ்மீர் 370 சிறப்பு சட்டப்பிரிவு ரத்து முதல் எம்.எல்.ஏக்களை விலைக்கு வாங்கி குதிரை பேரம் மூலம் மகாராஷ்டிராவில் பாஜக ஆட்சியை கைப்பற்ற உதவியது வரை பாசிஸ்டுகளால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் பங்கே அதிகம். தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியா முழுவதுமே ஆளுநர்களின் மூலம் மாநிலத்தின் உரிமைகளை பறித்து, கூட்டாட்சி முறைக்கு குழிப்பறித்து ஒற்றையாட்சியை நிறுவ துடிக்கிறது ஆர்.எஸ்.எஸ் - பாஜக பார்ப்பனக் கும்பல்.

மாநிலத்தின் கல்வி உள்ளிட்ட முக்கியமான நலத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்காமல் காலம் தாழ்த்துவது அல்லது இந்துராஷ்டிர கொள்கைகளை நடைமுறைப்படுத்தினால் தான் நிதி என மிரட்டுவது என மாநிலங்களின் மீது பாசிச சர்வாதிகார நடவடிக்கையை ஏவுகிறது ஆர்எஸ்எஸ்-பாஜக கும்பல். பாசிச மோடியின் ஆட்சியின் கீழ் பல்வேறு தேசிய இனங்களை கொண்ட இந்தியாவில் ஒற்றையாட்சியை நோக்கிய நகர்வு பாசிச நடவடிக்கையே. மாநிலங்களின் சுய உரிமையை பாதுகாத்திட தன்னாட்சிக்கு போராட வேண்டிய நிலையில் தமிழ்நாடு, லடாக் உள்ளிட்ட மாநிலங்கள் உள்ளன. பாஜகவை தேர்தலில் வீழ்த்துவதனால் மட்டுமே இதனை சாதிக்க முடியாது. ஏனென்றால் கூட்டாட்சியை முன்னர் அதிகாரத்தில் இருந்த காங்கிரசு அரசாங்கமும் மதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாசிசத்தை வீழ்த்துவதற்கு கீழிருந்து மக்களை அணித்திரட்ட குறைந்தபட்ச செயல்திட்டத்துடன் கூடிய ஐக்கிய முன்னணி, மக்கள் முன்னணியைக் கட்டியமைக்க வேண்டிய கடமை புரட்சிகர, ஜனநாயக அமைப்புகள் உள்ளிட்ட அனைவருக்கும் உள்ளது.

● பிச்சமுத்து

## அமெரிக்க லாபிக்கு பல கோடி செலவு செய்த ஆர்.எஸ்.எஸ்!

# கிழிந்து தொங்கும் போலி தேச பக்தர்களின் முகமூடி!

இந்தியாவின் மிகப்பெரிய பாசிச அமைப்பான ஆர்.எஸ்.எஸ் தனது அரசியல் செல்வாக்கை அமெரிக்க நாடாளுமன்றத்தில் உருவாக்கிக் கொடுக்க ஸ்கொயர் பேட்டன் போக்ஸ் என்ற பெரிய லாபி நிறுவனத்திற்கு பல கோடி ரூபாய் கொடுத்து பணிக்கு அமர்த்தியுள்ளது என்ற செய்தி சமீபத்தில் வெளியாகி தேச விரோத ஆர்.எஸ்.எஸ் கும்பலின் முகத்திரையைக் கிழித்துள்ளது. அமெரிக்காவை சேர்ந்த ப்ரிஸம் (Prism) என்ற செய்தி நிறுவனம் நடத்திய புலனாய்வு விசாரணையில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் இந்த திருட்டுத்தனம் வெளிவந்துள்ளது.

இந்த செய்தி வெளியான மறுநாள், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சுனில் அம்பேகர், “ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங், இந்தியாவில் மட்டுமே செயல்படுகிறது, எங்களுக்கும் அமெரிக்க லாபியிங் நிறுவனத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை” என்ற அண்டப் புளுகைத் தனது X தளத்தில் பதிவிட்டுள்ளார். ஆர்.எஸ்.எஸ் செய்தி தொடர்பாளரின் மறுப்புச் செய்தி பொய் என்பது ப்ரிஸம் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கை படிக்கும் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். எனினும் முழு பூசணிக்காயை ஒரு தட்டு சோற்றில் மறைக்க முயற்சித்துள்ளார் ‘உத்தம புத்திரரான’ ஆர்.எஸ்.எஸ் செய்தித் தொடர்பாளர் என்பது அம்பலமாகியுள்ளது.

### லாபி நிறுவனத்தின் உண்மையும்! ஆர்.எஸ்.எஸ் உள்ளடி வேலையும்!

ஆர்.எஸ்.எஸ் நேரடியாக லாபியின் நிறுவனத்தை அணுகவில்லை என்றாலும் வேறு ஒரு துணை நிறுவனத்தின் மூலம் லாபி நிறுவனத்தில் பதிவு செய்துள்ளது. அதாவது, அமெரிக்க லாபி வெளியீடு சட்டத்தின் (Lobbying Disclosure Act - LDA) கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் ஸ்கொயர் பேட்டன் போக்ஸ் லாபி நிறுவனத்தின் வாடிக்கையாளராக ஆர்.எஸ்.எஸ் பட்டியலிடப்படவில்லை. மாறாக, ஆர்.எஸ்.எஸ் அமைப்பு சார்பில் ஸ்டேட் ஸ்ட்ரீட் ஸ்ட்ராடஜீஸ் (State Street Strategies - மாநில தெரு உத்திகள்) நிறுவனம் தான் வாடிக்கையாளராக உள்ளது. ஆர்.எஸ்.எஸ் சார்பில் ஸ்டேட் ஸ்ட்ரீட் ஸ்ட்ராடஜீஸ் செயல்படுவதை Prism செய்தி நிறுவனம் தனது விசாரணையில் கண்டுபிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸ்கொயர் பேட்டன் போக்ஸ் லாபி நிறுவனம் அமெரிக்க செனட் சபையில் சமர்ப்பித்திருக்கும் ஆவணங்களில் கடந்த 09 மாதங்களில் மட்டும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் சார்பில் 3.3 லட்சம் அமெரிக்க டாலரை (ஏறக்குறைய 03 கோடி ரூபாய்) பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது. மேலும் தனது நிறுவனத்தின் லாபிஸ்ட்டுகளாக பிராட்ஃபோர்ட் எல்லிசன், லூட்மில்லா காசல்கே, பில் ஷஸ்டர் மற்றும் ரெபேக்கா சுங்காலா ஆகிய நான்கு பேர் செயல்படுவதாக பட்டியலிட்டுள்ளது. அமெரிக்காவின் வெளிநாட்டு முகவர்கள் பதிவு சட்ட தரவுகளின் படி, எல்லிசன் முன்பு எத்தியோப்பியா மற்றும் பெனின் நாடுகளில் செயல்பட்டுள்ளார். காசல்கே தென்கொரியா மற்றும் சிரியா எதிர்ப்பு அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். பில் ஷஸ்டரின் சகோதரர் பாப் ஷஸ்டர், One+ Strategies நிறுவனத்தின் இணை நிறுவனராக உள்ளார் என்கிறது.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பிற்கு லாபி நிறுவனத்துடன் தொடர்பு!
லாபி நிறுவனத்திற்கு பாகிஸ்தானுடன் தொடர்பு!




இதில்,ஷஸ்டர் சகோதரர்கள் மற்றும் எல்லிசன் ஆகியோர் கடந்த ஜூன் மாதம் நாக்பூரில் நடந்த ஆர்.எஸ்.எஸ். நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்டுள்ளனர். ஆர்.எஸ்.எஸ். வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையின்படி, இந்த லாபிஸ்டுகள் ஆர்.எஸ்.எஸ். சாகா பயிற்சிகளுக்குச் சென்று உறுப்பினர்களைச் சந்தித்தனர் என்பதையும், இந்த சந்திப்பை “இந்தோ-அமெரிக்க சிவில் சமூக ஈடுபாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க தருணம்” என்றும் குறிப்பிட்டுள்ளது. இந்தக் குழுவில், The Wall Street

Journal-இன் கட்டுரையாளர் வால்டர் ரஸ்ஸல் மீட் மற்றும் அமெரிக்கா- இந்தியா உறவுகள் பற்றி ஆய்வு செய்து வரும் சிந்தனைக் குழாமின் பில் ட்ரெக்சல் ஆகியோரும் இருந்தனர் என்கிறது prims செய்தி நிறுவனம். எனவே, ஆர்.எஸ்.எஸ் லாபி நிறுவனத்தை பணிக்கு அமர்த்தியுள்ளது என்பதும், நேரடியாக ஈடுபடாமல் உள்ளடி வேலை செய்து துணை நிறுவனத்தின் மூலம் லாபி நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதும் வெளிப்பட்டுள்ளது.

## லாபி நிறுவனம் எனும் அதிகார தரகர் வேலையும்! ஆர்.எஸ்.எஸ் நிழல் உலக வேலைகளும்!

ஒரு நாட்டின் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நெருக்கத்தை உருவாக்கி கொண்டு அரசின் நகர்வுகளில் தாக்கத்தை உண்டாக்குபவர்களை 'லாபியிஸ்ட்' என்று அழைக்கப்படும் அதிகார தரகர்கள். அரசாங்கத்தில் எந்தக் காரியமானாலும் செய்து முடிக்கும் வல்லமை கொண்டவர்களாக அதிகார தரகர்கள் சித்தரிக்கப்படுகின்றனர். அதிகாரத் தரகர்கள் மூலமாக போனால் தான் அரசாங்கத்தின் நெடிய கதவுகள் திறக்கும். பெருமுதலாளிகள் ஒரு ஒப்பந்தத்தை முடிக்கவோ, போட்டியாளர்களைக் கழுத்தறுக்கவோ, விதிமுறைகளை மீறி ஒரு புதிய தொழில் உரிமம் பெறவோ, தங்களுக்கு சாதகமாக அரசின் கொள்கைகளை மாற்றவோ அதிகாரத் தரகர்களை அமர்த்திக் கொள்கிறார்கள். தற்போது தேர்தலில் வெற்றி பெற அதிகார தரகர்களைக் கொண்ட லாபி நிறுவனங்களை அமர்த்திக் கொள்கின்றன கட்சிகள்.

அமெரிக்காவில் லாபி செய்வதற்கு உதவும் நிறுவனங்களை அமெரிக்க அரசாங்கமே சட்டபூர்வமாக அங்கீகரித்திருக்கிறது. ஒரு குழுவோ, தனிநபரோ இது போன்ற லாபி நிறுவனங்களை அணுகி, அதன் மூலம் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறிமுகத்தைப் பெற முடியும். அதன் பின்னர், அரசால் இயற்றப்படும் சட்டங்களில், கொள்கை முடிவுகளில் தங்களது வாடிக்கையாளர்களின் கருத்தைப் பதிவு செய்யவும், வாடிக்கையாளர்களுக்குத் தேவைப்படும் விடயங்கள் குறித்து எடுத்துரைக்கவும் இந்த லாபி நிறுவனங்கள் உதவுகின்றன. இப்படிப்பட்ட லாபி நிறுவனத்தை தான் தற்போது ஆர்.எஸ்.எஸ் அமைப்பு அமெரிக்க நாடாளுமன்றத்தில் தனது செல்வாக்கை பெருக்க பணிக்கு அமர்த்தியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ் அமர்த்தியுள்ள லாபி நிறுவனம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் ஆவணத்தில், இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவுகள் தொடர்பாக உதவுவதற்கே செயல்படுவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தியத் தூதரகமும், வெளியுறவுத் துறையும் செய்யவேண்டிய வேலையை ஒரு தனிப்பட்ட அமைப்பு செய்ய வேண்டியதின் அவசியம் என்ன என்பதை உற்று கவனிக்க வேண்டியுள்ளது.

அதாவது, இரண்டு நாடுகளுக்கு இடையேயான உறவுகள் மீதான இந்த கவனம், நிறுவனத்தின் நடவடிக்கைகள் அமெரிக்காவின் வெளிநாட்டு முகவர்கள் பதிவு (Foreign Agents Registration Act - FARA) சட்டத்தின் கீழ் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும். ஆனால் அமெரிக்க லாபி வெளியீடு சட்டத்தின் (Lobbying Disclosure Act - LDA) கீழ் பதிவு செய்யப்பட்டு இருப்பது உள்நோக்கம் கொண்டது, என்கிறது Prism செய்தி நிறுவனத்தின் விசாரணை அறிக்கை. குறிப்பாக, அமெரிக்க FARA சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டால் லாபி நிறுவனம் தனது வாடிக்கையாளரான ஆர.எஸ்.எஸ் - வுடன் நடத்தும் சந்திப்புகள், மின்னஞ்சல்கள், ரசீதுகள் மற்றும் செலவினங்கள் போன்ற விவரங்களைப் பொதுவில் அதிகளவில் வெளியிட வேண்டும். ஆனால் LDA சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளதால் ஆர்.எஸ்.எஸ்-சின் லாபி நிறுவனம் அத்தகைய விவரங்கள் எதையும் வெளியிடத் தேவையில்லை.

அமெரிக்க பிரபல லாபியிஸ்டான பென் ஃப்ரீமேன் கூறுகையில், "FARA-வின் கீழ் அல்லாமல் LDA-வின் கீழ் பதிவு செய்வதானது லாபி செயல்பாடுகளை நிழல் உலகில் வைத்திருப்பதாகும். இதனால், லாபியிஸ்டுகள் ஆர்.எஸ்.எஸ்-க்காக என்ன செய்கிறார்கள் என்பது பற்றி நமக்கு அதிகமாகத் தெரியவில்லை" என்கிறார். மேற்கண்ட தகவல்கள் மூலம் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு பல்வேறு தகிடு தத்தங்கள் செய்து நிழல் உலக வேலைகள் மூலம் உலக அளவில் கவனம் பெற முயற்சிக்கிறது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

## ஆர்.எஸ்.எஸ் அமைப்பிற்கு லாபி நிறுவனத்துடன் தொடர்பு! லாபி நிறுவனத்திற்கு பாகிஸ்தானுடன் தொடர்பு!

ஆர்.எஸ்.எஸ் அமைப்பு லாபி நடவடிக்கைக்கு அமர்த்தியுள்ள ஸ்கொயர் பேட்டன் போக்ஸ் நிறுவனம் பாகிஸ்தானுக்காகவும் அமெரிக்காவில் லாபி செய்யும் வேலைகளை செய்து வருகிறது. சமீபத்தில், டிரம்ப் பாகிஸ்தான் மீது 29% வரி விதித்தார். இந்த நிறுவனத்தின் மூலமாக பாகிஸ்தான் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரிடம் பல கோடி ரூபாய் பணம் செலவு செய்து லாபி செய்த பிறகே டிரம்ப் நிர்வாகம் பாகிஸ்தானுக்குச் சாதகமாக வரியை 29 இல் இருந்து 19 சதவீதமாக குறைத்ததாக சில சமூக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தனது அகண்ட பாரத கனவிற்காக பாகிஸ்தானை இந்தியாவின் எதிரியாகவும், இஸ்லாமியர்களை இந்துகளின் எதிரியாகவும் சித்தரித்து இந்து மதவெறிப் பிரச்சாரம் செய்யும் ஆர்.எஸ்.எஸ் கும்பல் பாகிஸ்தானுடன் தொடர்புடைய நிறுவனத்துக்கு கோடிக்கணக்கில் பணம் கொடுத்து அவர்களுடன் தொடர்பை உருவாக்கியுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

கிரிக்கெட் விளையாட கூட பாகிஸ்தான் செல்ல கூடாது என தேசவெறியை கிளப்பும் சங் பரிவார கும்பல், வார்த்தைக்கு வார்த்தை தேச நலன் பேசுவது வெறும் நாடகம் என்பது பாகிஸ்தானுடன் தொடர்பு வைத்திருக்கும் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

போட்டுள்ளதன் மூலம் அம்பலமாகியுள்ளது. தரகு வேலை செய்யும் நிறுவனம் பல நாடுகளுடன் ஒப்பந்தம் போடும் என்பது எதார்த்தம். அதன் அடிப்படையில் சங் பரிவார கும்பல் ஒப்பந்தம் போட்டுள்ளனர் என்றாலும், வேறு ஏதேனும் தனிநபரோ அல்லது அமைப்போ பாகிஸ்தானுடன் தொடர்பு உள்ள லாபி நிறுவனத்துடன் பேசியிருந்தால் கூட தீவிரவாத முத்திரை குத்தப்பட்டு முற்றிலும் ஒடுக்கப்பட்டிருக்கும்.

## பாசிச நடவடிக்கைக்கு உலக அங்கீகாரம்! இதுவே ஆர்.எஸ்.எஸ். லாபி நடவடிக்கையின் நோக்கம்!

நரேந்திர மோடி குஜராத்தின் முதல்வராக இருந்த போது தனது பிம்பத்தை மிகைப்படுத்துவற்காக 2007 ஆம் ஆண்டில் அமெரிக்க லாபி நிறுவனமான ஆப்கோ வேர்ல்டு வைட் என்ற நிறுவனத்தை மாதம் 25,000 அமெரிக்க டாலருக்கு பணியமர்த்திக் கொண்டார். குறிப்பாக, 2002 குஜராத் படுகொலை காரணமாக அமெரிக்க விசா இல்லை என அறிவிக்கப்பட்ட பிறகு தனது பிம்பத்தை ஊதிப் பெருக்கவும், வெளிநாடுகளில் செல்வாக்கை உருவாக்கவும் முன்னாள் நைஜீரிய சர்வாதிகாரி சானி அபாச்சா மற்றும் கஜகஸ்தானின் ஜனாதிபதியாக இருந்த நர்சுல்தான் நசர்பயேவ் போன்றவர்களை வாடிக்கையாளர்களாக கொண்டு சேவை செய்த லாபி நிறுவனமான ஆப்கோ வேர்ல்டு வைட் நிறுவனத்தை தேடிப்பிடித்து பணியமர்த்திக் கொண்டார். இந்த லாபி நிறுவனத்தின் மூலமே 'வைபரன்ட் குஜராத்' என உலகம் முழுவதும் ஊதிப்பெருக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

2007 ஆம் ஆண்டில் மோடிக்கு பின்னால் இருந்து லாபி நிறுவனத்தை அமர்த்தி மோடியை பற்றி பொய்யான பிம்பத்தை கட்டியமைத்த சங் பரிவார கும்பல், தற்போதைய சூழலில் ஆர்.எஸ்.எஸ்-க்கான லாபி நிறுவனத்தை அமர்த்திக் கொண்டுள்ளது. இந்த லாபி நிறுவனத்தின் மூலம் அமெரிக்க நாடாளுமன்றமான செனட் மற்றும் அமெரிக்க எம்.பி,க்களிடம் பேசி அவர்களின் மூலமாக ஆர்.எஸ்.எஸ் அமைப்பு தனக்கு அதிக செல்வாக்கு இருப்பது போலக் காட்டி, அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் தனக்கு தேவையானவற்றை சாதித்துக் கொள்ள லாபி நடவடிக்கையை கையாள்கிறது. இதற்காக கோடிக்கணக்கில் பணத்தை செலவு செய்கிறது. இந்தியாவில் எதிர்க்கட்சிகள் மீது ரெய்டுகள் நடத்தும் வருமான வரித்துறை, இந்திய அரசிடம் பதிவு செய்யப்படாத வருமான விலக்கு பெற்ற ஆர்.எஸ்.எஸ் அமைப்பு வெளிநாடுகளில் அரசியல் செல்வாக்கு பெற கோடிகளில் செலவு செய்வதை வேடிக்கை மட்டுமே பார்க்கிறது.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பு உலக நாடுகளின் பார்வையில் பாசிச துணை இராணுவக் குழுவாகவே இன்று வரை பார்க்கப்படுகிறது என்பதே உண்மை. இதனை மாற்றி இந்தியாவில் மக்கள் மீது திணிக்கப்படும் பாசிச நடவடிக்கைகளையும், தனது இந்துத்துவா மதவெறி கலவர நடவடிக்கைகளையும் மறைத்து உலகளவில் பெரும் செல்வாக்கைப் பெற்ற அமைப்பாக தன்னை காட்டிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த லாபி நடவடிக்கை தொடங்கியுள்ளது பாசிச அமைப்பான ஆர்.எஸ்.எஸ். இந்திய மக்கள் மீது பாசிச தாக்குதலை தீவிரப்படுத்தும் போது ஆர்எஸ்எஸ் - பாஜகவிற்கு தேவையான ஆதரவுக் கருத்தை இப்போதே உருவாக்கத் தொடங்கிவிட்டது சங் பரிவார் பாசிச கும்பல்.

அரசியல் சிந்தனைக் குழாம் *(think tank)* ஒன்றின் நிர்வாக இயக்குநரான ராகியிப் ஹமீத் நாயக் ஆர்.எஸ்.எஸ் லாபி நடவடிக்கை பற்றி கூறுகையில் "அமெரிக்காவில் ஆர்.எஸ்.எஸ்-ஸின் லாபி நடவடிக்கைகள், இந்தியாவிற்கு வெளியே அதன் மீதான கண்ணோட்டத்தை மாற்றுவதற்கான பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆர்.எஸ்.எஸ். இந்திய அரசியலில் முக்கிய சக்தியாக மாறியிருக்கலாம், ஆனால் உலகளவில், அது இன்னும் பாசிச துணை இராணுவக் குழுவாகவே பார்க்கப்படுகிறது. எனவே, கொள்கை வகுப்பாளர்களின் பார்வையை மாற்றும் நடவடிக்கையில் லாபி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்" என்று கூறியுள்ளதை இணைத்து பார்த்தால் ஆர்.எஸ்.எஸ் நோக்கம் பாசிச நடவடிக்கைக்கு உலக அங்கீகாரம் பெற முயற்சிப்பது புரிந்துகொள்ள முடியும்.

## 100 ஆண்டுகால பாசிச அமைப்பு! உலக பாட்டாளி வர்க்கத்தின் பொது எதிரி!

பெரும்பான்மையான உழைக்கும் மக்களை பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒடுக்கும் பார்ப்பனியத்தின் ஆட்சியை இந்தியா முழுவதும் நிலைநாட்டி, மனுதர்மத்தையே அரசியல் சாசனமாக்க மாற்றத் துடிக்கும் இந்துத்துவா இயக்கங்களின் தாய்க் கழகமான ஆர்.எஸ்.எஸ். கீழிருந்து கட்டியமைக்கப்பட்ட பாசிச அமைப்பாகும்.

இந்த பாசிச அமைப்பு தொடங்கி 100 ஆண்டுகளாக செயல்பட்டு வந்தாலும், 2014 ஆம் ஆண்டில் பாஜக ஆட்சி அமைத்த பிறகு நாடு முழுவதும் ஊடுருவி பிரம்மாண்டமாக வளர்ந்து நிற்கிறது. இந்தியாவின் அனைத்து துறைகளிலும் தனது ஆட்களை புகுத்தி பாசிச சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளில் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஆர்.எஸ்.எஸ் கிளை அமைப்புகள் மூலம் அங்கு உள்ள இந்து மக்களிடையே தனது பார்ப்பன சித்தாந்தத்தைப் பரப்பி வருவதுடன் இந்த நாடுகளில் உள்ள பிற்போக்கு சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்டு தனது பாசிச அடித்தளத்தை விரிவுபடுத்தி வருகிறது.

சுருக்கமாகச் சொன்னால், பார்ப்பன (இந்து) மதவெறியை பயன்படுத்தி இந்தியாவில் மக்கள் ஒற்றுமையை சீர்குலைத்து மதக்கலவரத்தை உருவாக்கியது போன்றே உலக நாடுகளில் உள்ள மக்களின் ஒற்றுமை சீர்குலைக்க அங்குள்ள பிற்போக்கு அமைப்புகளுடனும், லாபி நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து அரசியல் அரங்கிலும் செல்வாக்கு செலுத்த தொடங்கி விட்டது. இத்தகைய கொடிய பார்ப்பன பாசிச பயங்கரவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ்-ஐ வீழ்த்துவது இந்திய பாட்டாளி வர்க்கத்தின் கடமையாக மட்டுமல்ல. அது உலகப் பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகவும் மாறிவிட்டது.

● விஜயன்

## இதுதான் இன்றைய இந்தியா!

# நாட்டின் பாதுகாப்பு தனியார் முதலாளிகள் கையில்! ஆர்எஸ்எஸ் - பாஜக போடுவதோ தேசபக்தி வேடம்!




இந்தியா விண்வெளி ஆராய்ச்சியிலும், விண்கலன்களை ஏவுவதிலும் முன்னேறி வருவதாக அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் ஆளும் வர்க்கத்தின் எடுபிடிகளான கூலிப் பிரச்சாரகர்கள் ஓயாமல் கூச்சலிட்டுக் கொண்டே உள்ளனர்.

சமீபத்தில் இஸ்ரோ நிறுவனத்தின் செயல் இயக்குனரான நாராயணன் ஆண்டுக்கு 50 விண்கலன்களை ஏவப்போவதாகவும், அதன் மூலம் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இந்தியா முன்னேறுவதற்கு வாய்ப்புள்ளது என்று பெருமையுடன் கூறினார்.

“நிசார் செயற்கைக்கோள் (NASA-ISRO Synthetic Aperture Radar) என்பது நாசா மற்றும் இஸ்ரோ இணைந்து அனுப்பிய கூட்டுத்திட்டமாகும். இதற்காக நாசாவின் ஜெட் ப்ராபல்ஷன் ஆய்வகம் ரூ.10,300 கோடி செலவிட்டுள்ளது. நிசார் பூமியின் வளங்களையும், நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரிடர்களை கண்டறியவும் உதவுகிறது. இது நாசாவின் L-பேண்ட் SAR பேலோட் மற்றும் இஸ்ரோவின் S-பேண்ட் SAR பேலோட் ஆகியவற்றுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பேலோட்கள் மழை, மேகமூட்டம் என எந்த தட்பவெப்ப நிலையிலும் ஆண்டுக்கு 365 நாட்களும் படங்களை எடுத்து அனுப்பக்கூடிய திறன் கொண்டவை” என்று விண்வெளி ஆராய்ச்சியில் தனியார் ஒருபோதும் அனுமதிக்கப்படாது என்றும் கூறினார்.

அவர் இந்தக் கருத்தை முன்வைத்த ஒரு சில தினங்களுக்குள் இந்திய ஒன்றியத்தின் பிரதமரான பாசிச மோடி தனியார் விண்வெளி ஆராய்ச்சி நிலையங்களை அனுமதிக்கப் போவதாகவும், அதன் முதல் படியாக தனியார் ஏவுதளத்தை திறந்து வைத்து உரையாற்றியுள்ளார்.

அதுமட்டுமின்றி நாட்டின் விண்வெளி ஆராய்ச்சி மற்றும் அறிவியல் தொழில்நுட்பத் துறையில் பெரும் பங்காற்றிய விக்ரம் சாராபாய் நினைவுடன் விக்ரம் ஒன்று என்ற தொடர்வரிசையில் விண்கலன்களை ஏவுவதற்கு அனுமதிக்கப் போவதாகவும் கூறியுள்ளார்.

இதன் மூலம் சிறிய ரக விண்கலன்களை தனியார்கள் ஏவுவதற்கும், அவரவர்கள் தொழில்நுட்பத்திற்கு தேவைப்படுகின்ற அலைக்கற்றைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை இது போன்ற விண்கலன்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவித்துள்ளார்.

இந்தியாவின் மிகப்பெரும் பொதுத்துறை நிறுவனமாக விளங்குகின்ற இந்த விண்வெளி ஆராய்ச்சி துறை மற்றும் இஸ்ரோ ஆகியவை மக்களின் வரிப்பணத்தில் இயங்கி வருகிறது. அதுமட்டுமின்றி அவ்வப்போது விண்கலன்களை ஏவி வருகிறது.

விண்வெளித் துறையில் தற்போது 57 செயற்கைக் கோள்கள் செயல்பட்டு வருகின்றன. அடுத்த 3 வருடங்களில் இந்த எண்ணிக்கையை மூன்று மடங்காக (150) உயர்த்தும் திட்டத்தில் இஸ்ரோ முனைப்புக் காட்டி வருகிறது. அதேபோல, இந்தியாவின் ககன்யான் திட்டத்தின் மூலம் 2027-ல் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்புவதற்கான திட்டமும் உள்ளது.

இந்த விண்வெளித் துறையில் தனியார் நிறுவனங்களை அனுமதிப்பதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை ஆகியவற்றுக்கு ஆபத்தை உருவாக்குகின்ற தேசத் துரோக செயலில் இறங்கியுள்ளது ஆர்எஸ்எஸ் - பாஜக கும்பல்.

விண்வெளி துறையில் விண்கலன்களை ஏவுவது மட்டுமின்றி ஏவுகணைகள் தயாரிப்பது; ட்ரோன்கள் தயாரிப்பது மற்றும் சிறிய ரக விமானங்களை உற்பத்தி செய்வது ஆகியவை அனைத்தையும் ஒருங்கிணைந்த முறையில் கையில் வைத்துள்ள விண்வெளி ஆராய்ச்சித் துறை மற்றும் ராணுவ தளவாட தயாரிப்பு நிறுவனங்கள் ஆகியவை படிப்படியாக ஒழித்துக் கட்டப்பட்டு தேசங்கடந்த தரகு முதலாளிகளான அதானி, அம்பானி கையில் ஒப்படைப்பதற்கான சதித்தனங்களில் ஆர்எஸ்எஸ் - பாஜக ஈடுபட்டுக் கொண்டுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால் நாட்டின் உயர் பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்களையே தனியாரிடம் தூக்கி ஒப்படைத்து விட்டு இயற்கை வளங்களையும், கனிம வளங்களையும் பாதுகாப்பதற்காக போராடுகின்ற நக்சல்பாரி இயக்கங்களை தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் தேச விரோதிகள் என்று முத்திரைக் குத்தி அவர்களே முன்வைக்கின்ற சட்டங்கள்-நீதி ஆகியவற்றுக்கு புறம்பாக படுகொலை செய்கின்ற நடவடிக்கைகளில் கூச்சமில்லாமல் ஈடுபடுகின்றனர்.

ஒரு புறம் தேசப் பாதுகாப்பை தனியார் முதலாளிகளிடம் ஒப்படைப்பது; மறுபுறம் தேசத்தின் சொத்துக்களை பாதுகாக்க போராடுகின்ற புரட்சிகர அமைப்புகளை ஒடுக்குவது என்று இரட்டை வேடம் போடுகின்ற பாசிஸ்டுகள் ‘தேச பக்தர்களாக’ வேடமிட்டுக் கொண்டு ஆளுகின்ற நாடாக இருக்கிறது என்பதுதான் இன்றைய இந்தியாவின் நிலைமையாக உள்ளது.

இதுவே இன்றைய இந்தியா என்பதில் வெட்கித் தலைகுனிவோம்!

# SIR-ஐ கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மக்கள் அதிகாரம் ஆர்ப்பாட்டம்!

மோடி அரசின் மற்றொரு பாசிச நடவடிக்கையான வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) ஐ கண்டித்து தமிழ்நாடு முழுவதும்,

**எச்சரிக்கை சிறப்பு தீவிர திருத்தம் (SIR)**
**ஓட்டுரிமை பறிப்பு! குடியுரிமை கேள்விக்குறி!**
**சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தமல்ல;**
**கார்ப்பரேட் - காவி பாசிசத்தை**
**முழுமையாக்குவதற்கான திருத்தமே!**
**வீதியில் இறங்கி போராடுவோம் !**
**உரிமைகளைப் பாதுகாப்போம்!!**

ஆகிய முழக்கத்தின் அடிப்படையில் மக்கள் அதிகாரம் அமைப்பு SIR-ன் கோர முகத்தை அம்பலப்படுத்தி மக்களிடையே பிரச்சாரங்களை மேற்கொண்டது. மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.












# ஓங்கட்டும் தொழிற்சங்க ஒற்றுமை!
# வெல்லட்டும் தொழிலாளர் உரிமை!

திருச்சி | டிசம்பர் 25, 2025

## பேரணி | மாநாடு

| பேரணி | மாநாடு |
| --- | --- |
| துவங்குமிடம் | இடம் |
| பாஸ்போர்ட் ஆபீஸ் | புத்தூர் நால்ரோடு |
| மாலை 4 மணி | மாலை 5 மணி |



- தொழிலாளி வர்க்கத்தை சீரழிக்கும், பிளவுபடுத்தும் மத - சாதிய - இன - சட்டவாதம் போன்ற மாயைகளிலிருந்து தொழிலாளி வர்க்கத்தை பாதுகாப்போம்! ஒரு ஆலைத் தொழிலாளி பாதிக்கப்பட்டால் அவருக்காக அந்த ஆலையில் மட்டும் போராடினால் போதாது. அந்த ஆலை அமைந்துள்ள தொழிற்பேட்டையை சேர்ந்த பிற தொழிலாளிகளும் தொழிற்சங்கங்களும் இணைந்து போராடும் வகையில் கூட்டமைப்பை உருவாக்குவோம்!

**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**
தமிழ்நாடு – புதுச்சேரி 944444 2374